www.padippakam.com

மார்ச் 2012

# ஞானம்

142

## கலை இலக்கியச் சஞ்சிகை

**நேர்காணல்**



தமிழகப் பெண்ணிய எழுத்தாளர்

**கவிஞர் திலகபாமா**

**சிறுகதை**



தலைமுறை தாண்டிய காயங்கள்

– ஆசி. கந்தராஜா

**கட்டுரை**



ஈழத்தின் பெண் படைப்பாளிகள்

– செங்கை ஆழியான்



உள்ளம் கவர்ந்த உடுவை வித்தகர்

**"தில்லை"**

விலை : ரூபா 65/=

www.gnanam.info

படிப்பகம்

www.padippakam.com

ஞானம்
கலை, இலக்கிய மாத இதழ்

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்.
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப்பதவி கொள்வார்.

மார்ச் 2012

## சர்வதேச மகளிர் தினம்

மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக உலகெங்கிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அமெரிக்கத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிய பெண்கள் உழைப்புக்கேற்ற ஊதியம் கோரியும் அடக்கு முறைக்கு எதிராகவும் ஒன்றுதிரண்டு போர்க்கோஷம் எழுப்பி வெற்றிபெற்றனர். இதுவே 1913 ஆம் ஆண்டிலிருந்து வருடம் தோறும் மகளிர்தினம் கொண்டாடுவதற்கான முன்னோடிச் சம்பவமாக அமைந்தது.

பெண்களுக்கெதிரான பாரபட்சங்களையும் வன்முறைகளையும் ஒழிப்பதற்கான அனைத்துலக உடன்படிக்கையை நமது நாடு 1981லேயே ஏற்றுக்கொண்டிருக்கிறது. பாலியல் தொல்லை, தாக்குதல் முதலியவை என 1995, 1998 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குற்றவியல் சட்டத்திருத்தங்களின் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும் பெண்கள் தொடர்ந்தும் பலதரப்பட்ட வன்முறைகளுக்கு உள்ளாகிவருகின்றனர் என்பது இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள பலவீனத்தையும் சட்டங்களைச் செயற்படுத்துவோரின் அக்கறையின்மையையுமே காட்டுகிறது.

தகர்ந்து வரும் இன்றைய சமூகக் கட்டமைப்பில் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், எதிர்கொள்ளும் சவால்கள் பலதரப்பட்டனவாகவுள்ளன. நமது நாட்டில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகளை, துன்புறுத்தல்களை, பாலியல் ரீதியான வன்முறைகளை அன்றன்றாடு தினப்பத்திரிகைகளில் படிக்கும்போது மனிதநேயம் கொண்டவர்களது நெஞ்சம் பதறுகிறது. இந்த அடாவடித்தனமான செயல்களை கொடுமைகளைக் கண்டு மனம் கொதித்து எழுகின்றது.

பெண்கள் வெளியே பயணிக்கும் போது, வேலைத் தலங்களில், பணியாற்றும் இடங்களில், ஏன் பாடசாலைகளில் கூட பாலியல் சேட்டைகளுக்கும் பலவிதமான வன்முறைகளுக்கும் ஆளாகிவருகின்றனர். வீட்டு வன்முறைகளுக்கும் குறைவில்லை.

பெண்களுக்கு இழைக்கப்படும் அக்கிரமங்கள் அநீதிகள் பத்திரிகைகளில் செய்திகளாக வரும்போது, பாலியல் பலாத்காரம் பற்றிய விவரணம் வெளியிடப்படும்போது அவை சித்திரிக்கப்படும் விதம், இடப்படும் தலையங்கம், பயன்படுத்தப்படும் மொழிப் பிரயோகம் ஆகியவை பணம் பண்ணும் நோக்கினைக் கொண்டதாகவும் பலாத்காரத்தை ஊக்குவிப்பதாகவும் அமைந்து விடுவதைக் காண்கிறோம்.

கலை இலக்கியங்களில் காட்டப்படும் பெண்களும் ஆணாதிக்கத்தின் பிம்பத்தையே பெரும்பாலும் பிரதிபலிப்பதாக பெண்ணியவாதிகள் கூறுகின்றனர். பெண்களின் போகத்தன்மையை ஆண்பார்வையில் அணுகுவதும் பாலுணர்வு முலாம் பூசி பெண்களின் உணர்வுகளை மலினப்படுத்துவதும் இன்று ஆக்க இலக்கியங்களில் காணப்படுவதாகவும் அவர்கள் வாதாடுகிறார்கள். திரைப்படங்களிலும் தொலைக்காட்சிகளிலும் இவை உச்சக்கட்டத்தில் உள்ளன.

யுத்தம், இயற்கை அனர்த்தம், மற்றும் குடும்பச் சூழல் என்பனவும் பெண்சமூகத்தைப் பெரிதும் பாதிக்கின்றன.

பொருளாதார விடுதலை, கல்வி விடுதலை என்பன முழுச் சமூகத்தினதும் தேவையாகும். சமூகக் கட்டமைப்பிலிருந்து பெண்விடுதலை பெறுவது ஒரு தனித்த செயலல்ல. இது முழுச் சமூகத்தோடும் இணைந்து போராடும் செயலாகும் , என்பது உணரப்படவேண்டும்.

வருடம்தோறும் ஆண்டில் ஒருநாள் மார்ச் 8 ஆம் திகதி மட்டும் சர்வதேச மகளிர் தினத்தை பெண்கள் அமைப்புகளும் மனித உரிமை ஆர்வலர்களும் தலைநகரில் கொண்டாடுகிறார்கள் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உரிமைக்கோஷம், கருத்தரங்கு என நடத்தினால் மட்டும் போதாது. வருடம் முழுவதும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டிய உரிமைப் போராட்டம் இது.

கல்வி அறிவுள்ள நகரங்களில் வாழும் பெண்கள் மத்தியில் மாத்திரமல்லாமல் கிராமப்பகுதிகளிலும் மலையகத் தோட்டப் பிரதேசங்களை வாழ்விடமாகக் கொண்ட கல்வி அறிவில்லாத அடிமட்ட மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படும்போதே பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் இழிசெயல்களையும் ஓரளவுக்கேனும் குறைக்க முடியும் என்பதை சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் இவ்வேளையில் அழுத்திக் கூற விரும்புகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

மெய்ப்பொருள் காண்பதறிவு

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

2012 ஜூன் 1, 2, 3, 4 ஆம் திகதிகளில் நடத்தவுள்ள

## உலகத் தமிழ் இலக்கிய மாநாடு

கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது 70 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இவ்வாண்டு ஜூன் 1ஆம் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் உலகத்தமிழ் இலக்கிய மாநாடு ஒன்றை ''தமிழ் இலக்கியமும், சமூகமும் - இன்றும், நாளையும்'' என்ற தொனிப் பொருளில் நடத்தவுள்ளது. முதல் மூன்று நாட்களிலும் மாநாட்டுத் தொனிப் பொருளுக்கு அமைவான ஆய்வரங்குகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். நான்காம் நாள் சென்னை பாரதியார் சங்கமும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் பாரதி விழா இடம்பெறும்.

மாநாட்டு ஆய்வரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கு சிறுவர் இலக்கியம், புனைகதை, கவிதை, கட்டுரை, மொழி பெயர்ப்பு இலக்கியம், ஆவணப்படுத்தல், விமர்சனம், செவ்விதாக்கம் நிகழ்த்துகலைகள், இலக்கிய கோட்பாடுகள், பெண்ணியம், இதழியல், இணையமும் வலைப்பதிவுகளும் முதலான விடயங்கள் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் ஆய்வாளர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. ஆய்வரங்குகளில் பங்குபற்ற விரும்பும் ஆய்வாளர் தாம் சமர்ப்பிக்க விரும்பும் ஆய்வுக்கட்டுரையின் சுருக்கத்தை 300 சொற்களுக்கு மேற்படாத வகையில் எழுதி ஏப்பிரல் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கவேண்டும்.

மாநாட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இம்மலருக்கு கட்டுரை சமர்ப்பிக்க விரும்புவோர் மாநாட்டின் தொனிப்பொருளுக்கு அமைய மேற்குறிப்பிடப்பட்ட விடயப்பரப்புகளில் ஏதாவதொன்றைத் தெரிவு செய்து எழுதலாம். ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுரைகள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக கணினியில் தட்டச்சு செய்து மின்னஞ்சலில் அனுப்பவேண்டும்.

மாநாட்டில் பேராளராகக் கலந்து கொள்ள விரும்புவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து பேராளர் கட்டணத்தைக் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டையும் இணைத்து ஏப்பிரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கவேண்டும்.

பேராளர் கட்டணமாக இலங்கைப் பேராளர்கள் தலா 1500/= ரூபாவும் வெளிநாட்டுப் பேராளர்கள் தலா 25 அமெரிக்கடொலரும் செலுத்த வேண்டும்

பேராளர்களுக்கு மாநாடு நடைபெறும் நாட்களில் உணவு, தேநீர் போன்றவற்றுடன் மாநாட்டு சிறப்புமலர், ஏனைய வெளியீடுகள், கோப்பு ஆகியவை அடங்கிய பொதியும் வழங்கப்படும். ஆய்வாளராக கலந்து கொள்ள விரும்புபவர்களும் பேராளர்களாகச் சேர்ந்து கொள்ள வேண்டும்.

பேராளர் விண்ணப்பங்கள், ஆய்வுச் சுருக்கங்கள, கட்டுரைகள் என்பவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:

இலக்கியக் குழுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச்சங்கம்
7, 57 வது ஒழுங்கை,
கொழும்பு 06, ஸ்ரீலங்கா.
மின்னஞ்சல் முகவரி : sangamconference2012@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் - +94 777 306506

விண்ணப்ப படிவங்களை சுயவிலாசமிட்ட முத்திரை ஒட்டிய (நீண்ட) கடித உறை ஒன்றை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை தமிழ்ச்சங்கத்தின் www.colombotamilsangam.com. என்ற இணையத்தளம் மூலமும் பதிவிறக்கம் செய்யலாம்.

**ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்**
*பொதுச்செயலாளர்*
*கொழும்புத் தமிழ்ச்சங்கம்*

22.02.2012



படிப்பகம்

www.padippakam.com



அட்டைப்பட அதிதி

# உள்ளம் கவர்ந்த உடுவை வித்தகர் –

# “தில்லை”

-கலாநிதி அகளங்கன் -

1973இல் வவுனியா பொலீஸ் அத்தியட்சகர் (S.P.Office) காரியாலயத்திற்கு பொது முகாமை உதவியாளனாக கடமைக்கு வந்தான் ஒரு இளைஞன், போட்டிப் பரீட்சையில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, கொழும்பில் பொலீஸ் தலைமை அலுவலகத்தில் கடமையாற்றி நுவரெலியா, கல்கிசை என மாற்றலாகி வவுனியாவிற்கு வந்த இருபத்தைந்து வயது இளைஞன் அழகான வாலிபன். வவுனியாவில் அந்த இளைஞனைத் தெரியாதவர்கள் எவருமில்லை.

“தில்லை! தில்லை!” என்று வவுனியாவில் அத்தனை பேருக்கும் அவர் நண்பர்.

வவுனியா ஐக்கிய விளையாட்டுக் கழகம் (United Club) ஆண்டு தோறும் சித்திரைப் புத்தாண்டு விழாவை பிரமாண்டமான விளையாட்டு விழாவாக நடாத்திய அக்காலத்தில் காரில் ஒலி பெருக்கியை கட்டிக் கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று ஒலிபரப்பி விளம்பரஞ் செய்ய தில்லையை விட்டால் வேறு ஆள் கிடையாது. அவரைப் பலர் பின்பற்றி அவரது பாணியில் வளர்ந்திருக்கிறார்கள்.

வவுனியா மாவட்டத்தின் சிற்றூர்கள் எல்லாம் ‘தில்லை’ க்கு நன்கு தெரிந்த ஊர்களாகின. வவுனியாவில் வயது,கல்வி,சமூக அந்தஸ்து பதவி,பணம் என்ற எந்த வித்தியாசமும் இல்லாமல் யாவரோடும் பழகினார்.

யாழ்ப்பாணத்து வடமராட்சியில் உடுப்பிட்டி கிராமத்தில் சிங்காரம் பிள்ளை இராசாம்பாள் தம்பதிகளின் மூத்த புதல்வனாக 07-07-1947 ல் பிறந்தவர் உடுவை தில்லை நடராஜா, (உடுவை - உடுப்பிட்டியின் சுருக்கம்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் க.பொ.த (சா.த) வரைகற்றுச் சித்திபெற்று யாழ் இந்துக் கல்லூரியில் க.பொ.த சித்தி பெற்று கொழும்புக்கு வேலைக்குச் சென்றார்.

பாடசாலைக் காலத்திலேயே கட்டுரை, பேச்சு, நாடகம் எனப் போட்டிகளில் பங்குபற்றி மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பரிசுகள் பெற்றார்.

வானொலி சிறுவர்மலர், இளைஞர் மன்றம், மற்றும் ஈழநாடு, சுதந்திரன், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் சிறுவர் பகுதிகளில் பரிசுகள் பெற்றார்.

வானொலி சிறுவர்மலர், இளைஞர் மன்றம், மற்றும் ஈழநாடு, சுதந்திரன் வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் சிறுவர் பகுதிகளில் எழுதி வளர்ந்தார்.

தனது 16வது வயதில் சுதந்திரன் பத்திரிகையில் ‘வளர்மதி’ என்ற பகுதியில் தனது ‘மந்திரக்கண்ணாடி’ என்ற சிறுவர் குறுங்கதையை எழுதினார். அது ‘ராதா’ என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. பெற்றோர் கைச் செலவுக்காக் கொடுத்த பணத்தை மிச்சப்படுத்தி ‘மாணவன்’ என்ற சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட்டு கையைச் சுட்டுக் கொண்டார். அது பின் நாளில் அவர் செய்த நூல் வெளியீட்டு ஊக்குவிப்புப் பணிகளுக்கு உதவியது. வவுனியாவின் கலை இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்காளியாகத் திகழ்ந்தவராக வவுனியாவில் கடமை புரிந்த தில்லையர் மாற்றலாகிச் சென்று இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப்பரீட்சையில் (S.L.A.S) அதிக புள்ளிகள் பெற்ற மூன்று தமிழர்களில் ஒருவராக 1978ல் தெரிவுசெய்யப்பட்டார்.

1983ல் வவுனியா கூட்டுறவு உதவி ஆணையாளராக (A.C.C.D) கடமையாற்ற மீண்டும் வவுனியாவிற்கு வந்தார். அப்போது உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, சமூகசேவை உதவி ஆணையாளர், வறுமை நிவாரண உதவியாணையாளர், அவசரகால புனர்வாழ்வு புனரமைப்புத்திட்டப் பணிப்பாளர் என்ற பதவிகளையும் ஒரே காலத்தில் வகித்தார்.

வவுனியா மாவட்டம் மட்டுமின்றி ஒரே காலத்தில் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கடமையாற்றினார்.

1975 , இன் பின் எட்டு ஆண்டுகள் கழித்து 1983ல் கூட்டுறவு உதவி ஆணையாளராக உயர்பதவி பெற்று தில்லையர் வவுனியாவிற்கு வந்தார்.

1988 பிற்பகுதியில் ஒரு நாள். இந்திய அமைதி காக்கும் படையின் ஆட்சிக்காலம்.

வவுனியாக் கச்சேரியில் என்னைக் கண்டுவிட்டார். வாகனத்திலிருந்து இறங்கி வழமைபோல என் கையைப் பிடித்துக் கொண்டு சுகம் விசாரிக்கிறார். எனது முகவாட்டத்தைக் கண்டு காரணம் கேட்கிறார். ‘இலக்கியத் தேறல்’ என்ற எனது புத்தகத்தைக் கொடுக்கிறேன். புத்தகத்தைப் பார்த்துப் பாராட்டியபடி “ என்ன பிரச்சனை” என்று விசாரிக்கிறார். வெளியீட்டு விழா வைக்க வேண்டும். பிரதம விருந்தினர்தான் பிரச்சனை” என்கிறேன். அரச உயர் அதிகாரிகள் விழாக்களில் கலந்து கொள்ளக் கூடாது என போராளிக் குழு ஒன்று கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளதாம் என்கிறேன் கவலையோடு. “அகளங்கன்! உடுவை எஸ்.தில்லைநடராஜா என்று மட்டும் என் பெயரைப் போட்டு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் நிச்சயம் வருவேன்” என்கிறார்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு துணிவாகப் பேசினார்.

1992 இல் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையேற்ற சில நாட்களின் பின் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்திற்கு வந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

ஜனாதிபதி நடமாடுஞ்சேவைக்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வந்த தில்லையருக்கு பலத்த பொலீஸ் பாதுகாப்பு, நான் அப்பாடசாலையின் ஒரு ஆசிரியர். என்னைக் கண்டு அழைத்தார். "அகளங்கன்! பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகம். சுதந்திரமில்லை. முன்போல் எவரோடும் பழக முடியவில்லை. எங்கயாவது எப்பவாவது கண்டிட்டுக் கதைக்கேல்ல, சிரிக்கேல்ல எண்டு நினைக்கவேண்டாம். எல்லாம் சரிப்படுத்துவம்" என்றார்.

கலைஞர் கௌரவம் என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியதோடு, நூல்கொள்வனவு திட்டத்தையும் அமைச்சு மூலம் செய்ய வேண்டுமென்று வழிகாட்டினார். இன்றும் நூல் கொள்வனவு நடைபெறுகிறுது. ஆளுனர் விருது முதலமைச்சர்விருது வழங்கப்படுகின்றது.

கொழும்பு இந்துகலாசாரத் திணைக்களத்தில் பணியாற்றிய காலத்திலும் நூல் கொள்வனவை ஊக்கிவித்தார். பல போட்டிகளை நடாத்திப் பரிசளித்தார். பத்திரிகை சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் சிறந்தவற்றை தகுந்தவர்களைக் கொண்ட குழுமூலம் தேர்ந்தெடுத்துப் பணப்பரிசு வழங்கினார்.

கல்வி அமைச்சில் மேலதிகச் செயலாளராகப் பதவி வகித்த காலத்தில் உலக வங்கி நிதி உதவி பெற்று ஒவ்வொரு நூலும் 500 பிரதிகளைக் கொள்வனவு செய்து பாடசாலை நூலகங்களுக்கு வழங்கி எழுத்தாளர்களையும், வெளியீட்டாளர்களையும் ஊக்குவித்தார். மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நூல்கொள்வனவு செய்தார். எமது நாட்டில் இதுவரையில் இத்தகைய செயற்பாட்டை வேறுயாருமே செய்ததில்லை.

கொழும்பு கம்பன் கழகம், திருமறைக்கலாமன்றம் முதலானவை அரச நிதி உதவிபெற வழிகாட்டியவரும் இவரே. எழுத்தாளர்களை, பேச்சாளர்களை பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கோடும், மாணவர்கள் கலை இலக்கிய உணர்வு பெறும் நோக்கோடும், பாடசாலைகளில் கூட்டங்களை ஏற்பாடு செய்து இலக்கிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்.

வவுனியாவில் அரச அதிபராகப் பணியாற்றிய காலத்தில் அருணா செல்லத்துரையின் "வேழம்படுத்த வீராங்கனை" முல்லை மோடி நாட்டுக்கூத்தை வவுனியாவில் மேடையேற்றியதோடு கொழும்பிலும் மேடையேற்ற உதவினார். ஒளிப்பேழையாக்கப்பட்ட அக் கூத்தை வவுனியா அரச ஊழியர் சேவைக் களரியினால் வெளியிட்டு வைத்து, வீடியோப் பிரதிகளை வாடகைக்குக் கொடுப்போரால் கொள்வனவு செய்ய வைத்து, திரைப்படத்தோடு அப்பிரதியையும் வீடுகளுக்கு அனுப்பி வைத்து ஒளிப்பேழை கூத்தை யாவரும் இரசிக்க வைத்ததோடு அருணா செல்லத்துரைக்கும் உற்சாகமளித்தார்.

1993 இல் இவருக்கு இந்து கலாசார அமைச்சு "தமிழ்மணி" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் இவரோடு சேர்ந்து நானும் அவ்விருதைப் பெற்றேன்.

அப்போது இவர் வவுனியா அரச அதிபர், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் எங்கள் இருவரையும் கௌரவித்து தங்கப் பதக்கம் சூட்டிப் பாராட்டியது. இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி இவரைக் கௌரவித்தது. இதனைத் தொடர்ந்து வவுனியாவில் பல நிறுவனங்கள் பாராட்டிப் பரிசளிக்க முன்வந்தன. தில்லையர் அந் நிறுவனங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். "வவுனியாவிலுள்ள வளர்ந்து வரும் கலைஞர்களையும் சேர்த்துக் கௌரவித்தால் நான் வருவேன்" என்றார். வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எம்மோடு, தற்போது முஸ்லிம் மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றும் M.S. றம்சீன் அவர்களையும் சேர்த்து தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்துப் பாராட்டியது. வவுனியா வைரவ புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் இம் மூவரோடு அருட்கலை வாரிதி சு.சண்முகவடிவேல், அப்துல்சமத், கவிஞர் கண்ணையா, பி.மாணிக்கவாசகம், முதலானோரையும் பாராட்டிக்கௌரவித்தது. இப்படிப் பல பாராட்டுக்கள் நடைபெற்றன.

1994 இல் இவர் வவுனியா அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய கேட்போர் கூட கட்டிட நிதிக்காக இவரது 'மந்திரக் கண்ணாடி' 'கடற்கன்னி' ஆகிய சிறுவர் இலக்கிய நூல்களை வெளியிட்டு நாலரை இலட்சம் ரூபா பணத்தை வெளியீட்டு விழா மேடையில் பாடசாலை அதிபர் பெற்றுக் கொண்டார்.

தில்லையர் வவுனியா அரச அதிபராக இருந்த காலத்தில் ஒரு சாதனை நிகழ்த்தினார். அரசின் விசேட அனுமதி பெற்று வவுனியா மேடைகளில் நாடகம் நடித்ததுதான் அந்தச் சாதனை.

"அசட்டு மாப்பிள்ளை" என்ற நாடகத்தை 1994 இல் வவுனியா குருமன்காடு கலைமகள் சனசமூக நிலைய நிதிக்காக இரண்டு நாட்களில் மூன்று தடவைகள் நிதி உதவிக் காட்சியாக நடாத்தி பெருமளவு பணம் சேகரித்துக் கொடுத்தார். கொழும்பிலிருந்து மேடைநாடக, வானொலிக் கலைஞர்கள் பலர் வவுனியாவிற்கு வந்து நாடகத்தில் நடித்தனர். பின்பு 1997 இல் கிளிநொச்சி அரச அதிபராகப் பணிபுரிந்த காலத்தில் இறம்பைக்குளம் கிறிஸ்தவ தேவாலயத்துக்காக "வாடகை வீடு" நாடகத்தை நடத்திப் பெருமளவு பணம் சேகரித்து வழங்கி உதவினார்.

இவ் இரு நாடகங்களிலும் இவர் "எங்கள் வீட்டுப் பிள்ளை" யாக இங்குள்ள யாவராலும் மதிக்கப்பட்டார். பாராட்டப்பட்டார்.

இவ்விரு நாடகங்களோடு தலையணை மந்திரம் வானொலி நாடகம், புதிய அத்தியாயத்தின் ஆரம்பம் தொலைக்காட்சி நாடகம், என்பன இவருக்கு நாடகத் துறையில் பெரும் புகழைத் தேடிக்கொடுத்தன.

வவுனியாவில் வேறு எந்த ஒரு அரசாங்க உத்தியோகத்தரும் இவரளவுக்கு கலை இலக்கியப் பணியை ஆற்றவுமில்லை. இவருக்குக் கிடைத்தது போன்ற கௌரவங்களைப் பெறவும் இல்லை. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் தனது 13 ஆண்டு நிறைவு விழாவில் கலை இலக்கியச் செல்வர் என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.



படிப்பகம்

www.padippakam.com

இவரது நிர்வாணம் என்ற சிறுகதைத் தொகுப்பு (1991) "உலகின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்களுடன் ஒப்பிடக் கூடியது" என்று பாராட்டி இந்தியாவில் லில்லி தேவ சிகாமணி நினைவுப் பரிசுக் குழு பாராட்டிப் பரிசு வழங்கிக் கௌரவித்தது.

அசோகமித்திரன், பாவண்ணன், வாஸந்தி, திலகவதி முதலான பன்னிரண்டு இந்திய எழுத்தாளர்களில் ஒரே ஒரு இலங்கை எழுத்தாளராகக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நாளில் நியூசெஞ்சரி புக் ஹவுஸ், இந்தியா கலைஞன் பதிப்பகம் ஆகியவற்றினால் மீள் பதிப்புச் செய்யப்பட்டது. சிங்கள மொழிபெயர்ப்பாக "தெமல கெட்டிக்கத்தாவ" என்ற பெயரில் இரு பதிப்புக்களாக வெளிவந்தது.

'கல்யாணம் முடித்துப்பார்' 'சிரிப்புக் கதைகள்' ஆகிய நூல்கள் எம்.டி, குணசேனா நிறுவனத்தால் மூன்று பதிப்புக்கள் செய்யப்பட்டன.

மல்லிகை வெளியீடான "அப்பா" என்ற நூல் இந்திய் ஜனாதிபதி டாக்கடர் அப்துல் கலாம் அவர்களின் பாராட்டைப் பெற்றது.

லண்டன் 'புதினம்' மீண்டும் தொடராகப் பிரசுரித்தது.

கலைஞர்களைத் தில்லையர் கௌரவப் படுத்துவதில் முதன்மையானவர்.

திரைப்படத் தணிக்கைச் சபை உறுப்பினர்,டவர் மண்டப நிதிய உறுப்பினர், அரும்பொருட் காட்சியகக் குழு உறுப்பினர், பாடநூல் வெளியீட்டுக் குழு உறுப்பினர், கல்வி அமைச்சு பொருட் கொள்வனவுக் குழுத்தலைவர், கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுத்தலைவர், தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை உறுப்பினர் தொல் பொருளியல் திணைக்கள ஆலோசனைக் குழு உறுப்பினர். இந்து கலைக் களஞ்சிய நிர்வாக ஆசிரியர் தேசிய பொலிஸ் ஆணைக் குழு மேன் முறையீட்டுக் குழு உறுப்பினர். நிதி ஆணைக்குழு ஆலோசகர், உலக வங்கி ஆலோசகர் என 20 அமைப்புகளில் பணியாற்றியவர்.

இலங்கையின் பல பாகங்களிலும் பணிபுரிந்தவர். அங்கெல்லாம் கலை இலக்கியப் பணி புரிந்தவர்.

லண்டனில் ஆண்டு தோறும் நடாத்தப்படும் கலை விழா ஒன்றிற்குத் தொடர்ந்து நான்கு தடவைகள் முதன்மை விருந்தினராகச் சென்று சிறப்பித்தவர்.

பாகிஸ்தான், சீனா, கொரியா, பின்லாந்து, நயூசிலாந்து, தென்னாபிரிக்க, அவுஸ்ரேலியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, கனடா, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், எனப் பல நாடுகளுக்கும் சென்று வந்தவர். பல கட்டுரைகளை பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதியவர்.

இவர் தனது பதவியின் மூலம் செய்த மக்கள் பணியையும் கலை இலக்கியப் பணியினையும் முளுமையாகப் பட்டியல் இட இக்கட்டுரையில் வாய்ப்பில்லை. இருப்பினும் கிளிநொச்சியில் அரச அதிபராக இருந்த காலத்தில் யாழ்ப்பாண இடம்பெயர்வு பற்றி இவர் லண்டன் B.B.C இற்கு வழங்கிய பேட்டி உலகத் தமிழர்களையெல்லாம் உலுக்கியது. B.B.C அறிவிப்பாளர் ஆனந்தி நேரில் வந்து பாராட்டினார்.

"கிளிநொச்சியில் அரச அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் ஒரே நாளில் 81 பதிவுத் திருமணங்களுக்குக் கையெழுத்திட்ட மகிழ்ச்சியையும், ஒரே நாளில் 476 போராளிகளின் சடலங்களைக் கையெழுத்திட்டுப் பெற்று கொள்ளி வைத்த துயரத்தையும் வாழ்நாளில் மறக்க முடியாது" என்பார் தில்லையர்.

போராளிகளுடன் மதியஉணவு, பாதுகாப்புப் பிரிவினருடன் இரவு உணவு எனக் கழிந்த நாட்களை வியப்போடு கூறுவார்.

கலை இலக்கியச் செல்வர், உடுவை வித்தகர்,தமிழ்மணி, கலைமணி முதலான பல பட்டங்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றவர். இருப்பினும் "தில்லை" என தன்னை அழைப்பதையே பெரிதும் விரும்புபவர் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டவனாக இருந்தும் இந்தக் கட்டுரையில் "தில்லையர்" என்றே அதிகம் குறிப்பிட்டுள்ளேன். "தில்லை" என்று அவரை இப்போது குறிப்பிடுவது பொருத்தமில்லை. எனக்கும் அப்படி எழுதக் கைவரவில்லை. இப்போது அவர் தில்லையர் தான். வேறு கருத்தில்லை.

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். படைப்புகளை அனுப்பிய திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் பதில் கிடைக்காவிடில் அந்தப் படைப்பு பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனக் கருதிக் கொள்ளவும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.

**- ஆசிரியர்**




**வாசகர் பேசுகிறார் பகுதிக்கு கடிதங்களை அனுப்புபவர்கள் 300 சொற்களுக்குள் அடங்கக் கூடியதாக அனுப்ப வேண்டும். 300 சொற்களுக்கு மேற்பட்ட கடிதங்கள் நிராகரிக்கப்பட இடமுண்டு.**

**—ஆசிரியர்—**



படிப்பகம்

www.padippakam.com

# பசிக்கு

கவிஞர் ஆவூரான்
அவுஸ்திரேலியா

பசிக்கு சோறில்லை
பார்க்க ஆளில்லை
குடிக்கக் கூழில்லை
படிக்க முடியல்லை
வன்னி மண்ணிலே
வாழ வழியில்லை

போரின் கொடுமையில்- மண்
வீழ்ந்து கிடக்குது
வீடு குளங்களும்
அழிஞ்சு போச்சுது

புலம் பெயர்ந்தவர்
வந்து போகிறார்
அள்ளிக் கொடுத்துமே
அரவணைக்கிறார்

பார்த்துப் பார்த்துமே
பரிதவிக்கிறார்- சிலர்
அரவணைப்பதாய்
அள்ளிப் புழுகிறார்

அங்கு வெயில் காலமாம்
இங்கு சூடுதணிக்கிறார்
காட்சிப் பொருளாய்- எமை
கண்டு களிக்கிறார்

அன்னையும் இல்லை
தந்தையும் இல்லை
அநாதை என்ற பெயர்
சூட்டி அழைக்கிறார்

போரின் கொடியரை
அணுகி வாழ்வதா
போனவர்களை
நினைத்து அழுவதா

பாம்பின் வாலென்று
எதனைப் பார்ப்பது
மீனின் தலையென்று
எதனை ஏற்பது?

எங்கள் இழிநிலை
எங்கு உரைப்பது
எவர்வந்து எமக்கு
வாழ்வு தருவரோ



# உன்னை நம்பியதால்

புலோலியூர்
வேல் நந்தன்

வீணாகிப்போன
வியர்வைகளின்
வீரத்தில்
நின்றழுகிறது மனம்
கதாநாயகத்தனத்தில்
கண் கெட்ட பிறகே
விளங்குகிறது எமக்கு
சூரிய நமஸ்காரம்



ஆண்டவன் என்று
இன்னும் சொல்லிக்
கொண்டிருப்பதால் மட்டும்
மாண்டிடுமா எம்துயர்
தொங்கிக் கொண்டிருக்கும்
கேள்விகளில்
வாழ்வை மறப்போம்
புதிய காலத்திற்கு
விடைகளாவோம்
நடத் தெருவில் நின்று
இன்று நாம் பாடும்
தனிப்பாடல்களில்
உன்னைத் துதிபாட
முடிவதில்லை
பரணி பாடிய எம்மை
ஏமாற்றி விட்டுப் போனதுன்
வீரம்
தரணிபோற்றிய எம்மை
தலைகுனிய வைத்ததுன்
முடிவு
நம்பிக் கெட்டோம்
நாம்...

# புதுமை வாதிகள்*

அன்புமணி

கால்பக்கம் கவிதை
முக்கால் பக்கம் வெறுமை
ஒரு சொல்லுக்கு ஒரு வரி
வக்கிரமான தலைப்புகள்
வக்கிரமான எண்ணங்கள்
கவிதையில் என்ன சொல்லப்படுகிறது
என்பதே விளங்காத மூடுமந்திரம்
இவையெல்லாம் புதுக்கவிதைகளுக்கும்
ஒருபடி மேற்சென்று
புதுமைக் கவிதைகளாம்
கவிதை என்பது என்ன?
தெள்ளத் தெளிந்த தமிழில், உண்மை
தெரிந்துரைப்பது கவிதை என்றார்
கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
கற்பனைவளம், சொல்நயம், பொருள்நயம்
பொருட்சிறப்பு, உவமையழகு, அணிநயம்
உருவக மேன்மை
இவையெதுவுமே இல்லாத
சொல்லடுக்குகள் கவிதையா?
பெருங்கவிஞர்கள் வேண்டாம்
கண்ணதாசன் போன்ற
சினிமாக் கவிஞர்களின்
பாடல்களிலேயே
கற்பனை வளம் கொட்டுகிறது.
மலர்ந்தும் மலராத பாதி மலர்போல
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
எளிய தமிழில் தரும் சிந்தனை முத்துக்கள்
சின்னப்பயலே சின்னப்பயலே
சேதி கேளடா?
இவையெதுவுமே இல்லாத
வசன அடுக்குகளை கவிதை என்பதா?
புதுமைவாதிகளே
ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள்!





படிப்பகம்

www.padippakam.com

# தலைமுறை தாண்டிய காயங்கள்

ஆசி கந்தராஜா

(சிறுகதை)



ஹறூத் என் அலுவலக அறைக்கு வந்தபொழுது மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டான்.

'மிக நல்ல செய்தி சேர்..., கேள்விப் பட்டீர்களா...?' என்றான் பரபரப்புடன்.

அவசரமாக நடந்துவந்த களைப்பில் மேல்மூச்சு வாங்க, இணையத்தளத்தில் தான் வாசித்த தகவலைச் சொல்லி, அதற்குச் சாட்சியாக தனது 'ஐபாட்' அலைபேசியிலுள்ள 'இணைய' செய்தியையும் காண்பித்தான்.

'இலட்சக்கணக்கான ஆர்மேனியமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை இனப்படுகொலை யென்றும் (Genocide), அதனை மறுப்பது குற்றச் செயல் என்றும் கூறும் சட்டமூலத்தை, அன்றுகாலை (22 டிசம்பர் 2011) பிரான்ஸ் நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது. இதற்குத் தனது எதிர்ப்பினை பதிவுசெய்ய, துருக்கி தன்னுடைய தூதுவரை பாரீஸிலிருந்து மீளஅழைத்துக் கொண்டுள்ளது...' என அந்தச் செய்தி தொடர்ந்தது.

ஹறூத் ஆர்மேனிய இனத்தவன். அவன் லெபனானிலுள்ள அமெரிக்க பல்கலைக்கழகத்தின் (Bekaa)பள்ளத்தாக்கு வளாகத்தில் என்னுடைய மாணவன். அவனுடைய முழுப்பெயர் ஹறூத் ஆப்பிரஹாமியன். நூறு ஆண்டுகளுக்கு முன்பு அவனுடைய தாத்தா பீட்டர் ஆப்பிரஹாமியன் நடந்தே லெபனானுக்கு புலம் பெயர்ந்து வந்து, குடியேறியதாக அவன் ஏற்கனவே எனக்குச் சொல்லியிருந்தான்.

அராபிய மொழியின் இலக்கணம் சற்றே வித்தியாசமானது. தமிழ் இலக்கணத்தில் அஃறினையாக கருதப்படும் பலபொருள்கள், அராபிய மொழியில் சொல்லை அடிப்படையாகக் கொண்டு ஆண்பாலாக அல்லது பெண்பாலாக மாறிவிடுவதுண்டு. ஜேர்மன் மொழியும் அப்படியே. அராபிய வசன அமைப்பில் சொற்களுக்கிடையே உள்ள பால்வேறுபாட்டை, முறைப்படி பிரயோகிக்காவிட்டால் கருத்துமாறுபட்டுவிடும். ஆர்மேனியர்கள், பல தலைமுறைகளாக அராபிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், அவர்கள் ஆண்பால், பெண்பால் பற்றிய இலக்கண நுட்பத்தை வசப்படுத்திக்கொள்ளவில்லை. இப்பிரச்சனை ஹறூத்தை அதிகமாகவே கஷ்டப்படுத்தியது. இதனால் ஹறூத் அராபியமொழி பேசும்பொழுது, அராபிய மாணவர்களின் கேலிக்கும் பரிகாசத்துக்கும் இலக்காவான்.

ஹறூத் இதை சட்டைசெய்வதே இல்லை. 'எனது தாய்மொழி ஆர்மேனியன். கல்விகற்கும் மொழி ஆங்கிலம். இவ்விரண்டு மொழிகளிலும் எனக்கு பாண்டித்தியமுண்டு. தொடர்பு மொழியாகிய உங்கள் அரபுபற்றி நான் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவை இல்லை..., போங்கடா, உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்... !' என்பது அவனது வாதம். அவனுடைய நிலைப்பாடு யதார்த்தமானது.

ஹறூத்தை நான் சந்திப்பதற்கு முன்பு, ஆர்மேனியர்கள் பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. நான் இலங்கைத் தமிழன் என்று அறிந்தபின் அவன் என்னுடன் அதிகமாகவே வலிந்து ஒட்டிக்கொள்ள ஆரம்பித்தான். என்னைச் சந்திக்கும் பொழுதெல்லாம் நேரம் காலம் பார்க்காது இலங்கையின் இனப்பிரச்சினைபற்றி அக்கறையுடன் விசாரிப்பான். சிலசமயங்களில் எனக்கு இது எரிச்சலை ஏற்படுத்தும். இதனால் அவன்மீது நான் கோபப்பட்டதுமுண்டு. நாளடைவில் அவனது இனப்பற்றின் ஆழத்தையும் விசுவாசத்தையும் புரிந்துகொண்டு, அவனுடைய கரச்சலைப் பொறுத்துக்கொண்டேன்.

ஆர்மேனியர்களது கலாசாரம் மிகத் தொன்மையானது. கிறீஸ்தவ சமையத்தை, நாலாம் நூற்றாண்டிலே 'அரசமதமாக' பிரகடனப்படுத்திய பெருமை ஆர்மேனிய இராச்சியத்திற்கே உரியது. முதன்முதலில் தோலினாலான காலணிகளை அணிந்தவர்கள் அவர்கள். 'வைன்' என்னும் மதுவகையைப் பதப்படுத்தும் முறையை கி.மு. நாலாயிரம் ஆண்டளவிலே கண்டு பிடித்திருந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



ஆனால் ஆர்மேனிய வரலாறோ மிகவும் சிக்கலானது. அதை முழுமையாக இங்கு சொல்லிவிடவும் முடியாது. எனவே இந்தக் கதைக்கு தேவையானவற்றை மாத்திரம் இங்கு சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

நாலாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் தொடக்கம், பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை ஆர்மேனியர்கள் பாரசீகர்களாலும், அராபியர்களாலும், மொங்கோலியர்களாலும், ஒட்டமான் துருக்கியர்களாலும் ஆளப்பட்டார்கள். முதலாவது உலக யுத்தத்தின் பின்னர், ஆர்மேனியர்கள் வாழ்ந்தபிரதேசம் 'சோவியத்' கூட்டரசின் ஓர் மாநிலமாகி, 1991ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ம்திகதி, சுதந்திர ஆர்மேனிய நாடாக விடுதலையடைந்தது.

பதினைந்து நூற்றாண்டுகளாக, மற்றவர்களால் ஆளப்படும் சிறுபான்மை இனமாக வாழ்ந்தபோதிலும், ஆர்மேனியர்களில் புத்திஜீவிகள் அதிக எண்ணிக்கையில் இருந்ததாக கூறப்படுகிறது. முதலாம் உலகப்போரின் காரணமாக, ஐரோப்பாவின் நோயாளியாகக் கருதப்பட்டு, துருக்கியரின் மேலாதிக்கத்தின் கீழிருந்த ஒட்டமான் சாம்ராஜ்யம் சிதைவுற்றது. அப்பொழுது திட்டமிட்டவகையில் ஆயிரக்கணக்கான புத்திஜீவிகள் உட்பட, இலட்சக் கணக்கான ஆர்மேனியர்கள் துருக்கியர்களாலே கொல்லப்பட்டார்கள். நூற்றாண்டு காணவிருக்கும் இச்சம்பவம் இனஅழிப்பல்ல (Genocide), இனக்கலவரம் என்றே துருக்கி இதுவரை சாதித்து வருகிறது. இதுவே ஹறுாத் போன்று உலகமெங்கும் சிதறி, புலம்பெயர்ந்த சிறுபான்மையினராக வாழும் ஆர்மேனியர்கள், துருக்கியர்களை தங்கள் பரம விரோதிகளாக கருதுவதற்குக் காரணமாகும். இந்தப் பரம்பரையான பகையை வைத்துக்கொண்டு, மத்தியகிழக்கு நாடுகளிலே வாழும் ஆர்மேனியர்களை அந்தந்தநாடுகள், தங்கள் சுயலாபத்துக்குப் பயன்படுத்துவதாக ஹறுாத் குறைபட்டுக் கொண்டான். இதன் காரணமாகவே துருக்கிய எல்லையின் பாதுகாப்பிற்கு, சிரியாவில் புலம்பெயர்ந்து வாழும் ஆர்மேனியர்கள் அடங்கிய துருப்புக்களையே, சிரியா பயன்படுத்துவது நானும் அறிந்துகொண்ட செய்தியே.

துருக்கியில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் ஹறுாத் அதனைக் கொண்டாடி மகிழ்வான். 23 ஒக்டோபர் 2011 அன்று, துருக்கியில் பாரிய நிலஅதிர்வு ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டு, ஆயிரக்கணக்கில் படுகாயமடைந்தார்கள். அந்தச் செய்தி இணையத்தில் வந்தபோது அவன் என்னுடைய விரிவுரையில் இருந்தான். விரிவுரை முடிந்தவுடன் நேரே கன்ரீனுக்குச் சென்று, அங்கு தாராளமாகவே இனிப்புகளை வாங்கி எல்லோருக்கும்கொடுத்துக்கொண்டாடிய பின்னர் என் அலுவலகத்துக்கு வந்தான்.

'ஹறுாத், உனக்கு மனிதத் தன்மையே இல்லையா? மற்றவர்களின் துன்பத்தையும் மரணத்தையும் இப்படிக் கொண்டாடலாமா...?' எனக் கேட்டேன்.

ஹறுாத் பதிலேதும் சொல்லாமல் சிறிதுநேரம் என்னைப் பார்த்து மௌனம் சாதித்தான்.

'எங்கள் இனத்துக்கு ஏற்பட்ட வலியைவிடவா இது பெரியது...? எங்களுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் தலைமுறைகள் தாண்டியும் இன்னும் ரணமாக இருப்பதை எத்தனை மனிதஉரிமையாளர்கள் அனுதாபத்துடன் அணுகியுள்ளார்கள்...?' என வெடித்தான்.

'ஹறுாத், இது நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவிஷயம். இத்தகைய பகைமை உணர்ச்சி உனக்கே அதிகமாகப்படவில்லையா...?'

'சேர், எமது இனஅழிப்புக்கும் படுகொலைக்கும் சாட்சியாக என்னுடைய தாத்தா இன்றும் எங்களுடன் வாழ்கிறார். சமீபத்தில் இலங்கையில் நடந்த தமிழர்களின் இனக்கொலை பற்றிய சரியான தகவல்களை உங்கள் மகனுக்குச் சொல்லி வளர்த்திருந்தால், உங்கள் கேள்விக்கு அவன் பதில் சொல்லியிருப்பான்' என்று முணுமுணுத்தபடியே எனது அலுவலகத்திலிருந்து அவன் வெளியேறினான். அந்தச் செயல் அவனது வழமையான கோபத்தின் அடையாளம் என்பதைப் புரிந்துகொண்டேன்.

அடுத்தநாள் வழமைபோல 'குட்மோணிங் சேர்' என்றபடி வந்தான். அன்று அவனுக்கும் எனக்கும் விரிவுரைகள் கிடையாது. பலதும் பத்தும் பேசிக்கொண்டிருந்த பொழுது பிரான்ஸ் நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ள சட்டமூலத்தைப் பற்றியும் கேட்டேன்.

'சேர்..., ஒட்டமான் துருக்கிப் பேரரசின்கீழ் 1915ம் ஆண்டளவில் இருபது இலட்சம் ஆர்மேனியர்கள் வாழ்ந்தார்கள். இவர்களுள் பதினைந்து இலட்சம் ஆமேனியர்கள் துருக்கியர்களால் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இரவோடு இரவாக பெண்கள் குழந்தைகள் என்ற பேதமில்லாமல் துருக்கிய



படிப்பகம்

www.padippakam.com

இளைஞர்களால் வேட்டையாடப்பட்டார்கள். ஆனால் இன்றுவரை அமெரிக்கா உட்பட உலகநாடுகளெல்லாம் இதை இனப்படுகொலை என்று ஏற்றுக்கொள்ள மறுக்கிறது...! இது எந்தவகையில் நியாயம்....?'

நூறு வருடங்களுக்குப் பிறகு, இப்போது பிரான்ஸ் இந்தச் சட்டமூலத்தை இயற்றியிருக்கிறது. இதற்கு ஏதாவது அரசியற் பின்னணி இருக்கவேண்டு மல்லவா?'

பிரானஸ் இதைக் கையில் எடுப்பதற்குக் காரணம், பிரான்ஸில் புலம்பெயர்ந்துவாழும் ஆமேனியர்களின் வாக்குகளுக்காக. அங்கு தேர்தல் வரப்போகிறதல்லவா? உலகம் 'மானுடம்' பற்றிப் பேசுவதெல்லாம் சுத்த 'ஹம்பக்' சேர்...!' - ஹறூத் ஆத்திரப்பட்டான்.

'ஆர்மேனியர்கள் இலட்சக்கணக்கில் இனப்படு கொலை செய்யப்பட்டார்களே. அவர்களுக்கும் துருக்கியர்களுக்கும் என்ன பிரச்சனை...?'

எனது இந்தக்கேள்வி அவனுக்குப் பிடிக்கவில்லை என்பது அவனின் முகத்தில் தெரிந்தது. என் கேள்வியை நான் முடிப்பதற்குள், 'சேர்..., தமிழர்கள் இலங்கையில் ஏன் படுகொலை செய்யப்பட்டார்கள்...?' எனக் கோபப்பட்டவன், பின்னர் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு மேலேசொல்லத் துவங்கினான்.

'ஒட்டமான் துருக்கி பேரரசின்கீழ் ,ஆர்மேனியர்கள் மீது பிரத்தியேக வரிவசூலிக்கப்பட்டு, இரண்டாந்தரப் பிரஜைகளாகவே துருக்கியர்களால் நடத்தப்பட்டார்கள். இருப்பினும் ஆமேனியர்கள் துருக்கியர்களுடன் சமாதானமாகவே வாழமுயன்றார்கள்.

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒட்டமான் பேரரசை சூழவுள்ள நாடுகளில் வாழ்ந்த மற்றைய சிறுபான்மையின கிறீஸ்தவர்கள் படிப்படியாக சுதந்திரம்பெறவே, முதன்முதலில் அரசமதமாக ஏற்றுக்கொண்ட கிறீஸ்தவ ஆர்மேனியர்கள் மத்தியிலே சுதந்திர உணர்வு தலைதூக்கியது. இதனால் இஸ்லாத்தின் கோட்டையாக விளங்கிய ஒட்டமான் துருக்கி பேரரசின்கீழ், ஆர்மேனியர்கள் தேசத்துரோகிகளாகவும் வேண்டப் படாதவர்களாகவும் துருக்கியர்களால் பார்க்கப்பட்டார்கள்...' ஹறூத்தால் மேலும் தொடரமுடியவில்லை. குளிரூட்டப்பட்ட எனது அலுவலக அறையில் அவன் இருந்தபோதும், அவன் உடம்பெல்லாம் வியர்த்தது.

அப்பொழுது சமீபத்தில் பணியில் சேர்ந்த அமெரிக்க பேராசிரியர் ஒருவர் என்அறைக்குள் வந்தார். தொழில் சம்மந்தமான பலவிடையங்களையும் பேசியபின், 'நீங்கள் 'அவுஸ்திரேலியன்' என்று அறிந்தேன். எவ்வளவு காலம் அங்குவாழ்கிறீகள்?' என்று கேட்டுச் சகஜமான பின்னர், தன்னுடைய அவுஸ்திரேலிய பயண அநுபவங்களைப் பற்றிச் சுவைபட பேசினார்.

அவர் செல்லும்வரை காத்திருந்த ஹறூத் மீண்டும் வந்தான். நான் சொல்வதையிட்டு நீங்கள் வருத்தப்படக்கூடாது சேர்...,' என்று பீடிகை ஒன்றுபோட்டு, என்னைப் பார்த்துப் புன்னகைத்தான்.

'பறுவாய் இல்லை, சொல்...'

'உங்களை அவர்' அவுஸ்திரேலியன்' என்று சொன்னபோது அதை நீங்கள் மறுத்திருக்க வேண்டாமா...? நெஞ்சைநிமிர்த்தி, நான் ஸ்ரீலங்கன் என்று சொல்லவேண்டாமா...? நீங்கள் உங்கள் அடையாளத்தை இழப்பது சரியல்ல'. ஹறூத் நின்று நிதானித்துச் சொல்லிமுடித்தபின், என்னை நிமிர்ந்து பார்த்தான்.

ஹறூத், உன் தாத்தா துருக்கியரா அல்லது ஆர்மேனியனா...?

இதிலென்ன சந்தேகம். ஆர்மேனியன்...!

'உன் தாத்தா துருக்கியரில்லையென்றால் நான் ஸ்ரீலங்கன் இல்லை. நான் தமிழன்...!

உங்கள் மூதாதையர்கள் கிறிஸ்தவத்தை அரசமதமாக ஏற்றுக்கொண்ட முதன்மையானவர்கள் என்று நீ பெருமைப்படுகிறாய். எனது இனத்துக்கும் மனித நாகரீகத்தைப் பரப்பி வாழ்ந்த பெருமையுண்டு. நான் ஸ்ரீலங்காவில் பிறந்துவாழ்ந்த தமிழ் ஈழன். தமிழினம் படுகொலை செய்யப்பட்டுள்ளது பற்றி, மனித உரிமைகள் பற்றி வாய்கிழியப்பேசும் உலகசமூகம் மௌனம் சாதிக்கிறது. அந்த மௌனத்தைக் குலைப்பதற்கு, தாத்தாக்கள் சுமந்த வலிகளைச் சொல்லி பிள்ளைகளை வளர்க்கவேண்டுமென்ற உன் கருத்தை ஏற்கிறேன்...' என் குரல் நெகிழ்ச்சியில் உடையலாயிற்று...!

ஹறூத் என் ஆசான் போன்று நிமிர்ந்து நிற்பதை உணர்ந்து, என் உடல் குறுகியது.




**நூல் அறிமுகத்திற்கு நூல்களை அனுப்புபவர்கள் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். ஒரு பிரதியை மட்டும் அனுப்பினால் அதற்கான நூல் அறிமுகம் இடம்பெற மாட்டாது. ஒரு வருடத்திற்குள் வெளிவந்த நூல்களே நூல் அறிமுகத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.**

– குறிஞ்சி நாடன்–



படிப்பகம்




# கம்போடிய பயண அநுபவங்கள்

பயண இலக்கியம்

# 4–சிற்பங்களில் அவதாரங்கள்



ஞா.பாலச்சந்திரன்
(balag.lk@gmail.com)

**கி.பி. 1131 - ஸ்ரீ வைகுண்டம்**

"சுவாமி............"

அனந்த சயனத்திலிருந்த விஷ்ணு பகவான் கண்களைத்திறந்து இலக்ஷ்மி தேவியை நோக்கினார்.

"அங்கே பாருங்கள் சுவாமி, தங்களுக்காக இரண்டாம் சூரியவர்மன் கட்டும் 'அங்கோர்' கோயிலில் தங்களின் அவதாரக் கதைகளைச் செதுக்குகிறார்கள்....."

நாராயணன் புன்னகைத்தார்.........

"எனக்கென்றா கட்டுகின்றான்.......? எனக்கெதற்கு?"

தேவியும் புன்னகைத்தாள்.

மௌனம் ஆட்கொண்டது...

**கி.பி. 1131 - கம்போடியா**

"ணங்......... ணங்........."

கருங்கற்களில் சிற்பிகளின் உளிகள் மோதின. 'அங்கோர்' கோயிலில் வேலைகள் நடைபெற்றவண்ணம் இருந்தன. ஆயிரக்கணக்கான சிற்பிகள் மும்முரமாகச் சிற்பங்களைச் செதுக்கிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாம் சூரியவர்மனின் மனைவி, பட்டத்து மகாராணி செதுக்கி முடிவடைந்த "இராவண சிற்பத்தின்" முன்னால் நின்றுகொண்டிருந்தாள். பத்துத்தலை இலங்கையர்கோன் கயிலை மலையைத் தன் தோள்களால் தூக்கும் காட்சி செதுக்கப்பட்டிருந்தது.

இராவணன் சிறந்த சிவ பக்தன். தினமும் சிவபெருமானை வழிபடக் கயிலை மலை செல்பவன். அப்படித் தினமும் கயிலை மலைக்குச் சென்று வரச் சிரமமாக இருந்ததால், கயிலை மலையைப் பெயர்த்து இலங்கைக்கே கொண்டு வந்துவிடலாம் எனத் தீர்மானித்தான். அவன், கயிலை மலையைப் பெயர்க்க, சிவபெருமான் தன் காற் பெருவிரலால் மலையை அழுத்தினார். மலைக்கடியில் மாட்டிக் கொண்ட இராவணன் சாமகானம் பாடி சிவபெருமானின் மனம் குளிரச் செய்து தன்னை மீட்டுக் கொண்டான். அத்தகைய தோள்வலிமை கொண்டவன் இராவணன்.



**புடைப்புச் சிற்பம்-கயிலை மலையை அசைக்கும் இராவணன்**

சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஓலைச்சுவடிகளில் கம்பர் எழுதிய "இராம அவதாரத்தை" (கம்பராமாயணம்) மகாராணி படித்திருந்தாள்.

*"வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்*
*நாரத முனிவர்க்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்*
*தாரணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்*
*வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்"*

'வாரணம் பொருத மார்பன்' எனும்போது எட்டு திசைகளையும் காக்கும் யானைகளோடு மோதிப் போரிட்டு, அதனால் அவற்றின் தந்தங்கள் தனது மார்பில் புக, அவற்றை அப்படியே ஒடித்து விட்டு, மார்பில் தந்தங்கள் பதியப் பெற்ற பெருமையை உடையவன். கயிலை மலையை அசைத்த தோள்வலிமை உள்ளவன். நாரத முனிவன் 'நன்று நன்று' என்று ஏற்குமாறு சாமவேதத்தை இசைநயத்தோடு பாடிய நாவும், பத்துத் தலைகளில் அணிந்திருந்த அரசச் சின்னமான மணிமுடி பத்தும், சிவபிரான் தவ ஆற்றல் கண்டு கொடுத்த வாளும் கொண்டவன் இராவணன். இத்தனை பெருமைகளையுடைய இராவணன், தன்னிடம் என்றும் நீங்காமல் இருந்த வீரத்தை போர்க்களத்திலே போட்டுவிட்டு வெறுங்கையனாகத் திரும்பிப் போகிறான் என்று கம்பர் வர்ணிக்கிறார். அந்தக்காட்சியைச் சிற்பமாகக் கண்டுகளித்தாள் மகாராணி.

மகாராணி சிற்பங்களைப் பார்வையிடுவதை அறிந்த ஸ்தபதியும் பண்டிதருமான திவாகர் அவ்விடம் வந்துசேர்ந்தார். எப்போதும் தனியே வெளியே வராத மகாராணி, இன்று தனியே வருகிறாள். பண்டிதர்



படிப்பகம்

www.padippakam.com

திவாகருடன் கூடவே இராம-இராவண இலங்கை யுத்த காட்சிச் சிற்பங்களைத் தலைமை வகித்து செதுக்கிய சிற்பியும் வருகிறான். அவ் இளவயது சிற்பியின் முகத்தில் பெருமை கலந்த திருப்தி பரவியிருந்தது.



**புடைப்புச் சிற்பம்- அனுமானின் தோள்களில் நின்று அம்பு தொடுக்கும் இராமன்**

இராவணனின் சிற்பத் துக்கு அருகே, இராம-இரா வண யுத்தத்தில் வில்லில் அம்பு தொடுக்கும் இராம னைச் செதுக்கியிருந் தார்கள்.

மகாராணியின் பார் வையில் இராமன், இரண் டாம் சூரியவர்மனின் தோள்களில் நின்றபடி இரா வணனை நோக்கி அம் பைத் தொடுத்தவண்ணம் இருந்தான்! மகாராணி குழப்பிப் போனாள். 'அங் கோர்' கோயிலைக் கட்டுவிக் கும் தன் கணவனை ஏன் இராம னுடன் இணைத்துச் செதுக்கியிருக்கிறார்கள். இரண்டாம் சூரியவர்மனின் வாளும் சற்று வளைத்து நெளித்து செதுக்கப்பட்டி ருந்தது.

"பண்டிதரே, என் பிராணநாதரின் தோள்களில் நின்று இராமபிரான் போர்புரிவதாக இச்சிற்பத்தைச் செதுக்கக் காரணம் என்னவோ?"

பண்டிதர் திகைத்து சிற்பத்தைப் பார்த்தார், பின் புன்சிரிப்பை உதடுகளில் பரவவிட்டார். பண்டிதரின் அருகிலிருந்த சிற்பியின் முகம் அஷ்டகோணலாக மாறியது.

மகாராணியின் நிலைமையை பண்டிதர் திவாகர் புரிந்துகொண்டார். அவளை வாட்டும் நோயினையும் இனங்கண்டுகொண்டார்.

"மகாராணியாரே, மன்னர் சூரியவர்மர் அரசியல் நிமித்தம் தூரதேசம் சென்று சில வாரங்கள் ஆகிவிட்ட தல்லவா...?"

"ஆமாம்.... அதற்கென்ன....?"

"அவர் பிரிவு, தங்களை வாட்டுகிறது. தாங்கள் பார்ப்பவையெல்லாம், அவரைப்போல் தங்களுக்குக் காட்சியளிக்கின்றன. இராமனை தோளில் தாங்கி நிற்பவர் ஸ்ரீ அனுமான். எங்கள் மன்னர் அல்லர்!!"

மகாராணி தன் உதட்டைக் கடித்துக்கொண்டாள். வளைந்து நெளிந்து இருப்பது வாளல்ல, அது வாலாகும் என்பதையும் புரிந்துகொண்டாள்.

"மகாராணியாரே, திரணுதுமாக்கினி (தொல்காப்பி யரின் இயற்பெயர்) யாத்த தொல்காப்பியத்தில் இதைப்பற்றி அழகாகக் கூறியிருக்றார்"

"எதைப்பற்றி?"

"தங்களின் இந்நிலைபற்றி. அதாவது தலை வனைப் பிரிந்த தலைவிக்கு ஏற்படும் பத்து அவஸ்த் தைகள் பற்றி"

*"வேட்கை யொருதலை யுள்ளுதல் மெலிதல்*
*ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்*
***நோக்குவ வெல்லாம் அவையே போறல்***
*மறத்தல் மயக்கம் சாக்காடு என்று அச்*
*சிறப்புடை மரபினை களவென மொழிப"*

"நோக்குவ வெல்லாம் அவையே போறல்" எனும் வரியை பண்டிதர் மீளக்கூறினார்.

மகாராணி நிலம் நோக்கினாள்.

"மகாராணியாரே, இந்த பத்து அவஸ்த்தைகள் பற்றி வேறும் சில நூல்களில் கூறுப்பட்டுள்ளன"

மகாராணி நிமிர்ந்து 'எங்கு' என்று விழிகளால் வினாவினாள்.

அருகில் நின்ற இளம் சிற்பி முந்திக்கொண்டு "வாத்ஸாயனரது காமசூத்திரத்தில் ஐந்தாம் அதி கரணத்தில் வரும் முதல் அத்தியாயத்தில் கூறப் பட்டுள்ளது." என்றான். [04-01]

"ஓலைச்சுவடியின் பக்க எண்ணையும் வரி எண்ணையும் கூற மறந்துவிட்டாயே" என பண்டிதர் சிரித்தபடி கூறினார்.

சிற்பியின் முகம் வெட்கிச் சிவந்தது.

"அங்கோரில் தாங்கள் செய்யவிருக்கும் சிற்பத் தொகுதிகளைப் பற்றிக் கூறுங்கள்." மகாராணி பேச்சின் திசையை மாற்றினாள்.

தாங்கள் நின்று கொண்டிருப்பது, மேற்குப் பகுதியி லுள்ள இராம-இராவண யுத்தத் தொகுதி. இதனை உள்ளடங்கலாகக் கொண்டு மொத்தம் 8 தொகுதிகள் செதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

வடக்குப் புறத்திலே இந்து சமயத்தின் புராணக் கதைகளிலே கூறப்படும் தேவ அசுரர்களின் யுத்தங் களும் அதற்கு அருகிலே கிருஷ்ண பரமாத்மா மேற் கொண்ட, மகாபலியின் புத்திரனான பானசூரனின் வதமும் சித்தரிக்கப்படவுள்ளது. கிழக்குப் புறத்திலே தேவ அசுரர்கள் திருப்பாற்கடலை கடையும் காட்சி பெரிய அளவில் செதுக்கப்படவுள்ளது. மேலும், பல அசுரர்களை கிருஷ்ணன் வதம் செய்த காட்சிகளும் கிழக்கிலே அமையப்பெறும்.

சுவர்க்கம் நரகத்தினை பிரதிபலிக்கும் சிற்பங்கள் தெற்கிலே செதுக்கப்படும். இன்னுமோர் தொகுதியிலே எமது மன்னர் இரண்டாம் சூரியவர்மரின் சிற்பம் அடங்கலாக கம்போஜ வரலாற்றைக் குறிக்கும் பல சிற்பங்களும் இடம்பெறும். [04-02]

"அற்புதம் பண்டிதரே...... அற்புதம். மகாபாரதக் கதையைக் குறிக்கும் சிற்பங்களும் அமைந்தால் முழுமையாக இருக்குமே..."

"மன்னிக்கவேண்டும் மகாராணி, வயதாகிவிட்ட தால் மறதி வந்துவிட்டது. மேற்குத் திசையில் தாங்கள் நிற்கும் இராம-இராவண இலங்கை யுத்தத் தொகு திக்கு அருகிலேயே மகாபாரதத்தைக் குறிக்கும் சிற்பங் களும் செதுக்கப்படவுள்ளன....... இதோ இங்கே தான்..... " என்று கையால் சுட்டிக் காட்டினார் பண்டிதர்.

மகாராணி, தலையைத் திருப்பி பண்டிதர் காட்டிய இடத்தைப் பார்த்தாள்.

அவர் காட்டிய அந்த இடத்திலே............



படிப்பகம்

www.padippakam.com

**கி.பி. 2011 ஆம் ஆண்டு கம்போடியா.**

அந்த இடத்திலே............ நான் நின்றுகொண்டிருந்தேன்.

மகாபாரதப் போர் நடந்த குருஷேத்திரக் காட்சி, படைவீரர்கள் ஆக்குரோசமாகக் போர்க்களத்தில் முன்னேறிச் செல்லும் காட்சி. பாண்டவர்கள் சண்டையிடும் காட்சி, மாவீரர் பீஷ்மர் அம்புப்படுக்கையில் படுத்திருக்கும் காட்சியென பலவற்றைச் செதுக்கியிருந்தார்கள்.



புடைப்புச் சிற்பம்-மாவீரர் பீஷ்மர் அம்புப்படுக்கையில்

ஒவ்வொன்றாகப் பார்த்தபடி மெதுவாக நகர்ந்தேன். நான் நகர்ந்த பாதையில் வெள்ளையர் ஒருவர் கையில் 'கமெரா'வுடன் நின்றுகொண்டிருந்தார். "ஹாய்" என்று கூறிவிட்டு, அவர் நின்ற இடத்தைக் கடந்து சென்றேன்.

"ஹூ இஸ் திஸ்?" என அவர் ஒரு சிற்பத்தைக் காட்டிக் கேட்டார்.

என்னிடமா கேட்கின்றார் என்று உறுதிப்படுத்திக் கொண்டு, அவர் காட்டிய சிற்பத்தைப் பார்த்தேன். கிருஷ்ணர் அருச்சுனனுக்கு கீதா உபதேசம் செய்யும் காட்சி.

"இது கிருஷ்ண அவதாரம் (Avatar-அவதார்), மகாபாரதக் கதையின் ஒரு காட்சி." என்று ஆங்கிலத்தில் பதிலளித்தேன்.

"அவதார்??"

"எஸ், அவதார்" எனக்கூறி புன்னகைத்தேன். எதை நினைத்து அவர் அப்படிக் கேட்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன்.

"அப்பா, மகனுக்கு 'மைலோ' (Milo) பைக்கற் வேணும்" என்று மனைவி கூறினாள்.

"இப்பதானே 'பாண்' கொடுத்தாய்" என்று அலுத்துக்கொண்டு நான் தோளில் மாட்டியிருந்த பையைக் கழற்றினேன்.

"அப்படியே அந்த மீதிப் "பாணை"யும் எடுத்துத் தாங்கோ" என்றாள் மனைவி.

இன்னமும் அந்த வெள்ளையர் கிருஷ்ண அவதாரத்தைப் பார்த்தபடி நின்றார்.

"Avatar திரைப்படம் பார்த்திருக்கின்றீர்கள் போலிருக்கிறது..."

"ஆம்" என்றார்.

உலகெங்கணும் வாழும் சினிமாப் பிரியர்களில் அனேகமானோர் இந்தப் படத்தைக் கட்டாயம் பார்த்திருப்பார்கள்.

2009 ஆம் வெளியான Avatar படத்தை மூன்று முறை நான் பார்த்திருக்கிறேன். தமிழ் மக்களால் அதிகளவு மனதில் உள்வாங்கப்படாத ஒரு படம். 40% மனிதப் பாத்திரங்களின் நடிப்பாலும் 60% கணினிப் பாத்திரங்களின் 'நடிப்பா'லும் உருவான ஒரு கலவை, பார்த்துக்கொண்டிருக்கும்போது எது நடிப்பு? எது கணினி உருவாக்கம்? எனத் தெளிவாக பிரித்தறிய முடியாத நிலைக்குத் தள்ளிவிடும் புதுமை. "டைட்டானிக்" பட இயக்குனர் Cameron ஆல் 300 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இப்படம் தாயாரிக்கப்பட்டது. Cameron 1994 இல் இப்படத்தின் கதையை 80 பக்கங்களில் எழுதினார். ஆனால் அவரின் எதிர்பார்ப்பிற்கு கணினியின் வளர்ச்சி அன்று போதாததால், ஆறப்போட்டு, பின்னர் 2009 இல் பிரமாண்ட அளவில் கணினி தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டபின் படமாக்கியிருந்தார்.

நியுசிலாந்திலுள்ள Weta Digital எனும் கணினி நிறுவனம் இப்பட உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தது. ஒரே தருணத்தில் 4000 அதிதிறன் கணினிகளில் 900 கும் மேற்பட்ட கணினி நிபுணர்கள் தொழில்புரிந்தனர். இப்படத்தில் உலகத்தில் முதன்முதலாக Cameron ஒரு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளார். இதன்படி 'கமெரா'வின் முன்னால் நாம் காட்டும் முகபாவங்களை அச்சொட்டாகக் கணினி உள்வாங்கி கணினித் தொழில்நுட்பத்தில் உருவான கதாபாத்திரங்களின் முகத்திலே ஏற்றிவிடும்! [04-03]

உலகத்தில் இன்றுவரை வெளியான திரைப்படங்களில் அதிகளவு வசூலான 2.7 பில்லியன் அமெரிக்க டொலரைத் தேடித்தந்த படம் Cameran இன் Avatar. இதற்கு அடுத்தது, அவரே தயாரித்த 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் தேடிதந்த "டைட்டானிக்" திரைப்படமாகும்!

Avatar படத்தின் கதை சற்று சிக்கலானது. ஐந்து பாட்டு, நாலு சண்டை, மூன்று 'நகைச்சுவை', இரண்டு அழுகை என்ற மசாலா வாய்பாட்டை மீறி அமைந்தது. 2154 ஆம் ஆண்டில் கதை நடக்கின்றது. புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் மனிதர்களால் சூறையாடப்பட்ட நிலையில், Pandora எனும் கிரகத்திலுள்ள இயற்கை வளங்களை மனிதர்கள் சூறையாடத் திட்டமிடுவார்கள். அக்கிரகத்தில் இயற்கையுடன் மிகவும் அன்னியோன்யமாக வாழும்



'நாவி' மனிதப் பெண்

மனித முகபாவத்தை, கணினியில் சிருஷ்டித்த கதாபாத்திரத்தில் ஏற்றுதல்



படிப்பகம்

www.padippakam.com

10 அடி உயரமான, நீலநிற மேனி கொண்ட 'நாவி' எனும் சாந்தமான உயிரினம் வாழ்கின்றது. 2154ல் மனிதன் கொண்டுள்ள தொழில்நுட்பம் மனிதனை தேவையானபோது 'நாவி' ஆக உருக்கொடுக்க, அதாவது அவதாரம் கொடுக்கவல்லது. மனிதர்கள் 'நாவி'யாக மாறி அக்கிரகத்தை சூறையாட முயல்வார்கள். இதன்போது கால் முடமான ஒருவனும் 'நாவி'யாக அவதாரம் கொடுக்கப்படுவான். 'நாவி' அவதாரத்தில் அவன் முடமில்லை! இறுதியில் அவன் Pandora கிரகத்தையும் 'நாவி' இனத்தையும் மனித 'அரக்கர்களிடம்(!)' இருந்து காப்பாற்றுவான். [04-03]

இந்த Avatar படத்தைப் பார்த்திருந்த அந்த ஆங்கிலேயர், நான் கிருஷ்ணரின் அவதாரங்களை ஆங்கிலத்தில் "அவதார்" என்று குறிப்பிட்டபோது முதலில் குழம்பிப்போனார்.

சிற்பங்களுக்கு அருகில் இருந்த கிருஷ்ணர் சிலையைக் காட்டி எனக்குத் தெரிந்த அரைகுறை கிருஷ்ண அவதாரக் கதைகளை அவ்வெள்ளையரிடம் ஒப்பேற்றினேன்.

மகன் உலாவியபடி 'மைலோ' குடித்துக் கொண்டிருந்தான். மனைவியின் கையில் 'பாண்' இல்லை. மிகவும் விரைவாக எனது இரண்டு வயது மகன் 'பாணை'ச் சாப்பிட்டிருக்கவேண்டும்!!

தன் 'கமெரா'வால் எம்மூவரையும் படமெடுத்தார் அவ்வெள்ளையர். பின் நன்றி கூறி அப்பால் நகர்ந்தார்.

அங்கோர் கோயிலின் அனைத்துச் சிற்பத் தொதிகளிலும் 'அப்சரஸ்' எனும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தெய்வ மங்கையர்களைப் படைத்திருந்தார்கள். சுவர்களின் ஒவ்வொரு அங்குலத்தையும் சிற்பங்களால் நிறைத்திருந்தார்கள். அனைத்திலும் பிரமாண்டம் தொனித்தது.

தேவ-அசுரர்கள் வாசுகிப் பாம்பால் திருப்பாற்கடலை கடையும் காட்சி ஒரு கோடியிருந்து மற்றொரு கோடிக்கு வியாபித்திருந்தது. பாம்பின் ஒருபுறம்



அப்சரஸ் - தேவ மங்கையர்



திருப்பாற்கடலை கடையும் இராவணன் - அசுரர்கள்






படிப்பகம்

www.padippakam.com

இராவணனின் தலைமையில் 92 அசுரர்களும் மறுபுறம் 88 தேவர்களும் படைக்கப்பட்டிருந்தார்கள். இராவணனும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடையும் காட்சி எனக்குப் புதுமையாக இருந்தது! [04-04]

'எப்படித்தான் இக்கோயிலை 30-40 வருடங்களுக்குள் கட்டினார்களோ?' என்ற கேள்வி என் ஒவ்வொரு சுவாச உள்வாங்களிலும் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.

அங்கோர் கோயிலில் 5 மில்லியன் தொன் நிறைக்கும் அதிகமான கற்கள் பாவித்திருக்கின்றார்கள். அதிசயம் என்னவென்றால் இக்கற்கள் 50 கிலோமீற்றர் தொலைவிற்கு அப்பாலிலுள்ள Lichi எனும் மலையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. 'சியாம் ரீப்' நதியோட்டத்தைப் பயன்படுத்தி மலைப்பகுதியிலிருந்து 'அங்கோர்' இடத்திற்கு நகர்த்தியிருக்கிறார்கள். இதற்காக ஏழு ஆயிரத்திற்கும் அதிகமான படகுகளையும் ஐந்து ஆயிரத்திற்கும் அதிகமான யானைகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். பத்து இலட்சம் தொழிலாளிகள் 500 ற்கும் அதிகமானோரின் தலைமையில் பணிபுரிந்திருக்கிறார்கள்...... [04-05]

அப்பப்பா......... என் தலை சுற்றியது. என்னை திடப்படுத்திக்கொள்ள சிற்பத்தின் சுவரில் கையை வைத்துக்கொண்டேன். அவதாரக் கிருஷ்ணனின் பாதத்தில் என் கை பதிந்தது!

"அடே கிருஷ்ணா......, இம்மாபெரும் கோயிலின் கருவை எம்மவர்கள் மனதில் விதைத்து, உலகப்பெருங்கோயிலாகக் கட்டவைத்தாய். அப்படிச் செய்த நீ......, என் நாட்டில் மண்ணாசை என்ற கருவை மனங்களில் விதைத்து எம்மவர்களை சிதைத்து விட்டாய். அதுவும் 30 வருடங்கள், இதுவும் 30 வருடங்கள்.... வஞ்சகன் நீ......"

### கி.பி. 2011 - ஸ்ரீ வைகுண்டம்

சயனத்திலிருந்த கிருஷ்ணபகவானின் பாதம் ஆடியது. பரமாத்தா கண்களைத் திறந்துகொண்டார்...

'விழி'த்துக்கொண்ட கிருஷ்ணரை, தேவி அர்த்தத்துடன் பார்த்தாள்....

கிருஷ்ணரைத் தாங்கும் ஆதிசேஷன் தன் பத்துக்கண்களால் "அங்கோரை"ப் பார்த்தவண்ணம் இருந்தான்.

***(தொடரும்)***

[04-01] - தொல்காப்பியம் - பன்முக வாசிப்பு.- (2008) தொகுப்பாசிரியர் - பா. இளமாறன் - பக்கம் - 24

[04-02] - THE MONUMENTS OF THE ANGKOR GROUP by Maurice Glaize (A translation from the 4th French edition) - (1993) - page 58

[04-03] - http://en.wikipedia.org/wiki/Avatar_(2009_film)

[04-04] - "Ancient Angkor" (2011) - Michael Freeman and Claude Jacquse, - page 62

[04-05] - http://angkor-wat-facts.mydigipedia.com/

**ஒளி - 12 சுடர் - 10**

ஞானம்

**பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது
ஞானம்**

**ஆசிரியர்**
*தி.ஞானசேகரன்*

**இணை ஆசிரியர்**
*ஞானம் ஞானசேகரன்*

**ஓவியர்**
*சிவா கௌதமன்*

**தொடர்புகளுக்கு**
*'ஞானம்' அலுவலகம்*
*3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.*

**தொலைபேசி**
*0094 - 11 2586013, 0094 - 777 306506*
*0061 - 2 80077270 (Aus)*

**தொலைநகல்**
*0094 11 2362862*

**மின்னஞ்சல்**
*editor@gnanam.info*

**இணையத்தளம்**
*http://www,gnanam.info*
*http://www.t.gnanasekaran.lk*

**உள்நாட்டு சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | : | ரூபா 1,000/= |
| ஆறு ஆண்டுச்சந்தா | : | ரூபா 5,000/= |
| ஆயுள் சந்தா | : | ரூபா 20,000/= |

| *வெளிநாட்டு சந்தா* | *ஓராண்டு* |
|---|---|
| Australia(AU$) | 50 |
| Europe(•) | 40 |
| India(Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada($) | 50 |
| UK(£) | 35 |
| Singapore(S$) | 50 |
| Other(US$) | 50 |

**வெளிநாட்டு உள்நாட்டு வங்கித் தொடர்புகள்**
SwiftCode :- HBLILKLX
T.Gananasekaran
Hatton National Bank, Wellawatha Branch
A/C No.009010344631

மனியோடர் மூலம் சந்தா அனுப்புபவர்கள் அதனை **வெள்ளவத்தை** தபாற் கந்தோரில் மாற்றக் கூடியதாக அனுப்புதல் வேண்டும் - ஆசிரியர்



படிப்பகம்

## எலும்புத்துண்டுகள்

### சு. முருகானந்தன்

ஏமாற்றி அணிவிக்கப்பட்ட
சங்கிலிப்பிணையில் நிற்கும் நாய்
எப்போதேனும் வீசுகின்ற
எலும்புத் துண்டுகளுக்காய்
ஏமாந்துபோய் வாலாட்டிட
தமிழன் ஒன்றும் சோணகிரியல்ல

சுதந்திரத்தை சுவாசிக்கும்
ஒருநாளுக்கான காத்திருப்பில்
ஆறு தசாப்தங்களுக்கு முன்னர்
தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்த
சோகமான நாளை எண்ணி
இன்னும் அழுது முடியவில்லை
முப்பது வருடம் சாத்வீகமாகவும்
மூன்று தசாப்தமாக அர்ப்பணிப்புடனும்
போரிட்டு ஓய்ந்த பின்னரும்
முன்னைய எலும்புகளை விட
சிறிய எலும்புத் துண்டுக்காய்
வாலாட்டி வருவான் என்று
நீ எதிர்பார்ப்பது எவ்வளவு அபத்தம்
எமக்குத் தேவை எலும்புத்துண்டல்ல
நீங்கள் உண்பதைப்போன்ற
சதைகள் நிறைந்த இறைச்சியே!
தமிழ் நாய்கள் ஒருபோதும்
எலும்புத் துண்டுகளை உண்ணாது.





## தமிழரின் இந்நிலை

### பாடுக கவியே!

தனக்கென நிலமும் தனிப்பெரும் தமிழும்
தம்மைத்தாமே ஆண்டிடும் திறனும்
பற்பல கலைகள் பண்ணிசை முறைகள்
பண்பாட்டுடனே உயரிய வாழ்வு
கொண்டு நிமிர்ந்தார் சிறந்திட வாழ்ந்தார்
தமிழரின் இந்நிலை பாடுக கவியே

ஆண்ட பரம்பரை அடிமைகள் ஆனார்
பண்டு நாள்வரை வாழ்நிலமிழந்தார்
கைகளில் இரும்பு விலங்குகள் தாங்கி
மெய் வழியோடும் குருதியில் நீந்தி
அன்னியர் வகுத்த சிறைகளில் சேர்ந்தார்
தமிழரின் இந்நிலை பாடுக கவியே

வீடுகள் இழந்து உடமைகள் சிதைந்து
வீதியில் அகதியாய் எம்மவர் அலைந்தார்
பெண்விடுதலை பேசிடும் நாளில்
வன்கொடுமையில் மகளிர் சிதைந்தார்
சிறுவர் உரிமை சாசனம் செய்தனம் ஆயினும்
எங்கள் சிறுவரை கொன்றனர் போரினில்
தமிழரின் இந்நிலை பாடுக கவியே

தந்தையின் எதிரே பிள்ளையை கொன்றார்
மனிதம் தன்னை மண்ணில் புதைத்தார்
எந்தையர் முந்தி வாழ்ந்த நிலங்களில்
எம்மவர் உடல்களை உயிருடன் நட்டார்
தமிழரின் இந்நிலை பாடுக கவியே

அடிமை வாழ்வு தொடர்ந்திடலாமோ
அகதியாய் அலைவது நிரந்தரமாமோ
விடுதலை விரும்பி வினையுடன் மக்கள்
எழுவது எந்நாள் ஏங்குது இந்நிலம்
தமிழரின் இந்நிலை பாடுக கவியே

வேலணையூர் தாஸ்



## பழைமையும்

### புதுமையும்

பழைமை கழிதல் புதுமையுடன் சேரல்
வழமைதான் என்றிடிலுந் தீதே - பழுதில்லா
நல்லனவாம் என்ப நிலைப்ப தொழித்தலொடு
பொல்லா தனபுகுத லும்.

ஒரெழுத் தேனும் உகந்தவிடம் மாறிடுங்கால்
சீர்மை தவறிடுமே செந்தமிழில் - ஓராதேன்
வேரறுக்க மாற்றார்தம் வேற்று மொழிவழக்கைச்
சேர்த்தான் தமிழழிக்கத் தான்.

தன்கா லுறுதி தனைநோக்கான் மாற்றார்கால்
பொன்ஆம் எனவெண்ணிப் பற்றிடுவான் - தன்கால்
நடையிழந்த தாம்காக்கை நாடியுவந்(து) அன்ன
நடைபயிலப் போனகதி போல்.

ஒன்றோடொன் றொன்றின் இரண்டாம் அசைசீர்கள்
ஒன்றோடொன் றென்றியுயர் ஓசைதரும் - அன்றேல்
கணக்குத் தவறுவதுபோல் நான்கவியும் சொல்சேர்
பிணத்துக் குவமை பெறும்.

தாயைப் பிழைத்தோன் தமிழைப் பிழைத்தழிப்போன்
சேயாவா ரோர்சூலில் ஈரென்றே - தாயேபோல்
தாய்மொழியை நெஞ்சத்துள் தாங்கு பிழைநேரா
தூய்தாய் வளருந் தமிழ்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்






www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

"டும் . . . டும் . . . . டும் டும் டும் . . . . . . . . . டும் . . . .டும். . . . . .டும்டும்டும். . . . . . . .

டும். . . . . . .படார்டும். . . . . . . .பட . . . . . .பட . . . . . . .படார். . . . . . . .

டபீ. . . . . . .டப். . . . டப் . . . . . . . டும். . . . . . . . . . . .படார். . . . . .டும். . . .படார். . . .டும். . . .டும்"

சண்டை உக்கிரமாக நடந்துகொண்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் சண்டை மிக மோசமான சண்டை

மனித வாழ்வில் கண்டிராத சண்டை. எந்தவொரு மனிதப் பிறவிக்கும் இப்படி ஒரு சண்டை வரக் கூடாது.

அவ்வளவு கொடூரம்!

நினைக்கும் ஒவ்வொரு கணமும் நெஞ்சைத் துண்டு துண்டாகப் பிய்த்து எறிகிறது.

கொலைக்களத்து மாடுகள் போல சனங்கள்..... முள்ளிவாய்க்கால் ஓரமாக.....

இனி ஓட இடமில்லை!

ஒரு நாளா.... இரண்டு நாளா....ஒவ்வொரு நாளும் .... ஒவ்வொரு கணங்களும் ஓடி ஓடிக் களைத்து ... கடைசியாக முள்ளிவாய்க்கால்தான் தஞ்சமென நிற்கிறார்கள்.

வெடிப்புகை மூட்டம் பங்கரை மூடியிருந்தது.

விதுனி படுசுட்டி.

மெதுவாக எழுந்து பங்கருக்கு மேலால் தலையை நீட்டினாள்.

வெளியே பார்க்க.......

"பளீர்........."

ஒரு வெடிச் சத்தம்.

அவளருகே தலையில்லாத உடலொன்று வந்து விழுந்தது.

குருதி குபீரென்று தெறித்தது.

அச்சத்தில் அவளது உயிர் உறைந்து போனது.

இனி ஒரு கணமும் அதற்குள் இருக்க முடியாது.

இல்லையேல்......பங்கர் பதுங்கு குழிகள் இனிப் பிணக்குழிகளாக மாறும்.

ஆயிரம் ஆயிரம் பங்கர்கள் இப்படித்தான் ஆகிப் போயிருந்தன.

நினைவுகள் சுட்டன.

அதற்கிடையில்......ஓடித்தான் ஆக வேண்டும்!



**அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி 2011ல் ஆறுதல் பரிசு பெற்ற கதை**

# முள்ளிவாய்க்கால் குருவி

**(சிறுகதை) ★ ஓ.கே. குணநாதன்**

தொடர்ந்தன வெடிகள்,

வெடிகளின் ஓசைகள் செவிப்பறையைப் பிளக்க....கந்தக நெடி உயிரை சுட்டெரிக்கிறது.

இனி......

எல்லாம் முடிந்தாயிற்று.

எஞ்சிப்போய்க் கிடப்பது முள்ளிவாய்க்கால் மட்டுமே!

அதுவும் எந்த நேரத்திலும் விழுந்து விடலாம்.

தொடரும் தொடரடிகள்.....பல்முனைத் தாக்குதல்கள்.

அவர்கள் பங்கருக்குள்!

அவர்களின் பங்கர்தான் கடைசி பங்கர்

அம்மா.........

அப்பா.............

அவள் விதுனி............

தம்பி கஜன்.............தங்கை நந்தினி.

வெடியோசையோடு சேர்ந்து கேட்கும் அவலக் குரலைத் தவிர வெளியே என்ன நடக்குது என்று அவர்களுக்குத் தெரியாது.

ஓடவும் பயம்.

ஓடினாலும்.....ஓடிய இடமெல்லாம் சிதறி விழும் செல் எறிகள்...வழி நெடுகத் தொடரும் பொறி வெடிகள்.

பொறிவலையில் சிக்கிய மீன்களாக அவர்கள்!

"கடவுளே......... பிள்ளையாரே ........... முருகா.....சிவனே........அம்மாளாச்சி...........

யேசுவே......."

பங்கருக்குள் இருக்கும் ஒவ்வொரு உயிர்களும் அழைக்காத கடவுள்களே இல்லை.

"யேசுவே ........யேசுவே...."

அம்மா கடவுளைக் கூப்பிடுகிறாள்.

அவளின் மனம் கடவுளைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுக் களைத்தும் போகின்றது.

கடவுள் இனி வரமாட்டார்.

வந்தால்....இன்று இங்கு ஆயிரம் யூதாஸ் காரியோத்தர்களும் சிலுவைகளும் காத்துக் கிடக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வளவு சிலுவைகளையும் அவரால் சுமக்க முடியாது.

அதனால் கடவுள் இனி வரமாட்டார்.

கடவுள் காப்பாற்றுவார் என்ற அவளது நம்பிக்கை சிதைந்து.......அறுந்து தொங்குகின்றன.

அச்சத்தின் நிழல் அவளின் முகத்தில் படிகிறது.

“ நாங்கள் வாழ்ந்து அனுபவித்தவர்கள். இந்தப் பிஞ்சுக் குழந்தைகள்....”

அவளையும் அறியாமல் வாய் குளறி, கண்ணீர் பெருக்கெடுக்கிறது.

தாயின் அழுகையைப் பார்த்து தம்பி கஜனும் தங்கை நந்தினியும் அழத் தொடங்குகிறார்கள்.

விதுனி நிதானமாக நிற்கிறாள்.

அவளுக்கும் மரண பயந்தான்!

பயத்தை வெளிக்காட்டவில்லை. தம்பியும் தங்கையும் பயந்து போவார்கள் என்று நெஞ்சுக்குள்ளேயே போட்டுக் குமைகிறாள்.

“ அப்பா என்ன செய்வம்?”

அவள் கேட்கிறாள்.

அப்பாவின் பதில் வார்த்தைகள் மௌனங் களாகின்றன.

மீண்டும் இதே வார்த்தைகளைக் கேட்க வேண்டும். ஆனால் அவள் கேட்கவில்லை.

வார்த்தைகளைத் தொலைத்து நிற்கின்றாள்.

அப்பாவின் முகத்தைப் பார்க்கின்றாள்.

உலர்ந்து வாடிய பூவின் இதழ் போல முகம் ஒட்டிப் போய்க்கிடக்கிறது.

ஒரே கணந்தான்!

அதற்குப் பிறகு அவள் அவளுடைய அப்பாவின் முகத்தைப் பார்க்கவேயில்லை.

பாரிய குண்டொன்று வெடித்துச் சிதறுகிறது.

சத்தம் காதைப் பிளக்கின்றது. பங்கரின் மேலே இருந்த பனைவடலிகள் தூக்கி வீசப்படுகின்றன. பங்கரின் சுவர் இடிந்து கொண்டு வருகின்றது.

ஒரே அல்லோல கல்லோலம்!

சனங்கள் பயந்து ஓடினார்கள்.

அங்கும் இங்கும் ஓடினார்கள்.

நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள்.

வேறு வழியில்லை!

அவளுடைய அப்பா ஓடினார்.

அவளுடைய அம்மா.....

தங்கை .....தம்பி.....ஓடினார்கள்.

அவளும் ஓடினாள்.

எல்லோரும் ஓடினார்கள். திசை தெரியாமல் ஓடினார்கள்.

அதற்குப் பிறகு விதுனி அவளுடைய அம்மாவையோ அப்பாவையோ தம்பி தங்கையையோ காணவில்லை.

அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? செத்துப் போய்விட்டார்களா? என்று அவளுக்கே தெரியாது.

ஆனால்.......

அவள் மட்டும் தனித்துப் போனாள்.

அவள் மயக்கம் தெளிந்து கண்விழித்துப் பார்த்த பொழுது ஒரு அகதி முகாமில் இருப்பதனை உணர்ந்தாள்.

சுற்றிவர முள்வேலி அரண்கள்.....காவலாளிகள் .......துவக்குகள்.......அந்நிய பாஷையின் அதட்டல்கள்.

அது ஒரு அகதி முகாம் என்பதனை சொல்லாமல் சொல்லியது.

ஒரு நாள் ......இருநாள்...பலநாள் ....ஒவ்வொரு நாளும் தேடினாள். முகாம் முழுக்கத் தேடினாள். அம்மா, அப்பா, தம்பி, தங்கை..... கண்களில் படவேயில்லை.

வேறு ஏதாவது முகாமில் இருக்க மாட்டார்களா!

வேறு முகாம்களில் தேடிப் பார்க்க பிஞ்சு உள்ளம் ஏங்கியது. ஆனால் அவளால் முடியவில்லை.

முள்வேலி இறுக்கியிருந்தது.

அவர்களை நினைத்து நினைத்து அழுது கண்களில் நீர் வற்றிப் போனது விதுனிக்கு.

சில நாட்களில்..........

அவளை யாருமற்ற பிள்ளையாகக் கருதியிருக்க வேணும். அவளை அநாதை இல்லத்தில் சேர்த்திருந்தார்கள்

இப்பொழுது அவள் “அநாதை”

சிஸ்டர் மேரிதான் அவளைப் பொறுப் பேற்றிருந்தாள்.

சிஸ்டர் நல்லவங்க.

அவளுக்கு சாப்பாடு ....ஆடை விளையாட பொம்மை......எல்லாமே கொடுத்தாங்க.

ஆனா அவள் சாப்பிடவேயில்லை.... விளையாடவே இல்லை..... அழுதுகொண்டே யிருந்தாள்.

அப்பாவினதும் அம்மாவினதும் அரவணைப்புக் காக ஏங்கினாள். தம்பி, தங்கையின் அன்புக்காக ஏங்கினாள். அவர்களுடன் விளையாட வேண்டும் போல இருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல அவள் கொஞ்சம் கொஞ்சமாக மாறினாள். அந்த இல்லத்தின் சூழலுக்காக தன்னை மாற்றிக் கொண்டாள். சிஸ்டர் மேரி காட்டும் அன்பு அவளை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றியது.

விதுனி நல்ல கெட்டிக்காரி. சுறுசுறுப்பானவளும் கூட. அவள் ஓய்வு நேரங்களில் சும்மா இருக்கவில்லை. ஏதாவது செய்து கொண்டேயிருப்பாள்.

சிஸ்டர் மேரி பூக்கன்றுகளை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார்.

விதுனி அதனை இல்லத்தில் நட்டாள்.

ஒவ்வொரு நாளும் நீரூற்றினாள்.

அவைகள் வளர்ந்து பெரியவையாயின.

பூக்கள் பூக்கத் தொடங்கின.

அழகழகான பூக்கள் பூத்தன. சிறிய பூக்கள்........ பெரிய பூக்கள்.....இன்னும் நிறம் நிறமான பூக்கள்....வெள்ளை, சிவப்பு, மஞ்சள்,றோஸ், ஒரேஞ்,.........

பூக்களில் இருந்து வாசனை வீசியது.

பூக்கள் தேனைச் சுரந்தன.

பூக்களில் இருந்து தேனைக் குடிப்பதற்காக தேனீக்கள் வந்தன. வண்ணத்துப்பூச்சிகள் வந்தன.

சின்னச் சின்ன குருவிகளும் வந்தன.

பூந்தோட்டத்தின் ஓரத்திலே கிடந்த மரக்குற்றியில் இருந்தவாறு அதன் அழகை ரசித்தாள் விதுனி.

பெற்றோரை.....சகோதரங்களைப் பிரிந்த விதுனிக்கு ஏதோ மனதுக்குச் சுகமாக இருந்தது.

இரண்டு குருவிகள் பறந்து வந்தன. அவை அழகான குருவிகள். ஒரு குருவி மஞ்சளும் கறுப்பும். அது கொஞ்சம் பெரிசு நீண்ட ....



படிப்பகம்

www.padippakam.com

மெல்லிய ….வளைந்த சொண்டு.

பூவில் அமர்ந்து தேனைக் குடித்தன. பறந்து போயின.

அந்தக் குருவிகளைப் பார்த்த விதுனிக்கு சந்தோசமாக இருந்தது. அதன் அழகினை ரசித்தாள்.

அந்தக் குருவிகளைப் பார்க்கையில் அவளையும் அறியாமல் ஏதோ உணர்வு அவளை வருடியது.

வன்னியில் அவள் எத்தனை குருவிகளைக் கண்டிருக்கிறாள். இதைவிட அழகான குருவிகளைக் கூடப் பார்த்திருக்கிறாள். ஆனால் அவள் அதனை இப்படி ரசித்ததில்லை.

இந்தக் குருவிகளைப் பார்க்கும் பொழுது ஏதோ ஒரு உணர்வு வந்து நெஞ்சை வருடியது.

ஒவ்வொரு நாளும் இந்தக் குருவிகள் வரவேண்டும். அதனைப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டும் போல இருந்தது.

அந்தக் குருவிகளும் ஒவ்வொரு நாளும் வந்து போயின.

சில நாட்களில்……..

அக் குருவிகள் ஒரு கூடு கட்டத் தொடங்கின.

ஒரு மல்லிகை கொடி இருந்தது. அதில் கூடு கட்டியது.

குருவிகள் ஒவ்வொரு அம்பாக எடுத்து வந்தன.

மெள்ள மெள்ள கூடு கட்டின.

விதுனிக்கு கூடு கட்டும் குருவிகளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

தனிமை……

வெறுமை…..

எங்கோ தொலை தூரத்தி லிருந்து புலம் பெயர்ந்து வந்த குருவிகளாக இருக்குமோ!

பாவம், அகதிக் குருவிகள்!

அவர்களைப் போல……….



ஓடிப் போய் இல்லத்தில் இருந்த தும்புத் தடியைக் கொண்டு வந்து கூடு கட்டும் இடத்திற்கு அருகிலே வைத்தாள்.

தும்புத்தடியில் இருந்த ஒவ்வொரு அம்பாகப் பிடுங்கிப் பிடுங்கி எடுத்துக் கொண்டு போய் கூடு கட்டின.

மீண்டும் ஓடிப்போய் அவள் போட்டுப் படுக்கும் தலையணையைப் பிய்த்து அதற்குள் இருந்த பஞ்சை எடுத்துக் கொண்டு வந்து வெளியே போட்டாள்.

அவற்றைப் பொறுக்கிக் கொண்டு போய் கூட்டுக்குள் வைத்தன.

கூடு கட்டி முடிந்தது.

குருவிகளுக்கு ஒரே சந்தோசம்.

ஒரு கூடு கட்டி முடித்துவிட்ட திருப்தி.

வீச்…..வீச்…..என்று கத்தியபடி பறந்து பறந்து கூட்டை முத்தமிட்டன.

தங்களுக்குள்ளே ஏதோ ரகசியம் பேசிக்கொண்டன.

குருவிகளைவிட விதுனிக்கு சந்தோசம். அகதிக் குருவிக்கு உதவினோம் என்பதில்.

ஆடாது அசையாது குருவிகளின் ஆனந்தத்தையும் குருவிக் கூட்டையும் ரசித்துக் கொண்டு நின்றாள்.

மல்லிகைக் கொடியில் அழகான கூடு தொங்கியது.

அது மெல்லிய காற்றில் ஆடி அசைந்தது.

தொட்டில் போல ஆடியது.

விதுனிக்கு குருவிக் கூட்டைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல இருந்தது.

குருவிகள் வெளியே பறந்து போயின.

அந்தச் சமயம் பார்த்து கூட்டின் அருகே போனாள்.

குருவிக் கூட்டைத் தொட்டுப் பார்த்தாள். அது பஞ்சுமெத்தை போல இருந்தது.

மெதுவாக குருவிக் கூட்டுக்குள்ளே விரலை விட்டாள்.

உள்ளுக்குள்ளே இரண்டு முட்டைகள் தட்டுப் பட்டன.

மெதுவாக வெளியே எடுத்தாள். இரண்டு சின்னச் சின்ன வெள்ளை முட்டைகள்.

மீண்டும் அதனை உள்ளே வைத்தாள்.

அடிக்கடி குருவிக் கூட்டைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல ஒரு உணர்வு.

தாய்க்குருவி அடை காத்தது.

இரண்டு முட்டைகளையும் சிறகுக்குள்ளே அணைத்துக் கொண்டு படுத்துக்கிடந்தது. குருவிக் கூட்டின் வாசலின் வெளியே சொண்டு மட்டும் தெரிந்தது. மெல்லிய கறுப்புச் சொண்டை வெளியே நீட்டிக் கொண்டு படுத்துக் கிடந்தது.

அப்பாக்குருவி கூட்டைச் சுற்றிச் சுற்றி வந்தது.

இரண்டு குருவிகளும் வெளியே பறந்து போயின.

விதுனி கூட்டின் அருகே போனாள்.

கீ….கீ….. என்று மெல்லிய சத்தம் கேட்டது. காதைக் கூர்மையாக்கினாள்.

அந்தச் சத்தம் கூட்டுக் குள்ளே இருந்துதான் வந்தது.

மெதுவாக கூட்டுக்குள்ளே விரலை விட்டாள்.

“ நொளுக்…..நொளுக்….. ” என்றிருந்தது.

உள்ளுக்குள்ளே இரண்டு குஞ்சுகள் …….மயிர் முளைக்காத குஞ்சுகள்.

மெதுவாக வெளியே எடுத்தாள்.

குஞ்சுகள் கண்களை உருட்டி உருட்டி அவளைப் பார்த்தன.

“ஏய் …..செல்லக் குஞ்சுகளா…..” குஞ்சுகளுடன் ஏதேதோ கதைத்துக் கொண்டாள்.

குஞ்சுகளும் ஏதோ “கீச்சுக் கீச்சு” என்றன.

கீச்சுக் கீச்சுச் சத்தம் தாய்க் குருவிகளுக்கும் கேட்டிருக்க வேணும்!

பதறியடித்துக் கொண்டு பறந்து வந்தன.



படிப்பகம்

www.padippakam.com

கூட்டைச் சுற்றிச் சுற்றிச் சிறகடித்துப் பறந்தன. அந்தரப்பட்டன.

மீண்டும் குஞ்சுகளைக் கூட்டுக்குள்ளே வைத்தாள்.

விதுனி ஒவ்வொரு நாளும் வருவாள்.

அந்தக் கூட்டையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

குஞ்சுகள் கீச்சுக்....கீச்சு...என்று கத்தும்.

தூரத்தில் இருந்து குருவிகள் பறந்து வரும்.

வாயினிலே இரை இருக்கும்.

கூட்டினிலே காலால் பிடித்துக் கொண்டு தொங்கும்.

குஞ்சுகள், கூட்டின் வாசலினால் சொண்டை வெளியே நீட்டும்.

ஆ.......... என்று வாயைத் திறக்கும். வாய் சிவப்பு நிறமாக இருக்கும்.

அந்த வாய்க்குள்ளே உணவை ஊட்டும்.

மீண்டும் இரை தேடிப் பறந்து போகும்.

விதுனி கூட்டின் அருகே போனாள்.

கூட்டின் வாசலின் வெளியே இரண்டு சொண்டுகள் மட்டும் தெரிந்தன.

சுற்றும் முற்றும் பார்த்தாள்.

வெளியே போன குருவிகள் இன்னும் திரும்பவில்லை.

மெதுவாக விரலை விட்டாள்.

இரண்டு குஞ்சுகளையும் வெளியே எடுத்தாள்.

குஞ்சுகள் இறகுகள் முளைத்து அழகாக இருந்தன. பஞ்சு போன்ற பிஞ்சு இறகுகள் பளபளத்தன.

இன்னும் சில தினங்களில் குஞ்சுகள் பறந்து விடும்.

குஞ்சுகள் தத்தித் தத்தித் பறக்கும் அழகை ரசிக்க வேண்டும் என்று எண்ணினாள்.

அந்த நினைவுடனே தூங்கிப் போனாள்.

நள்ளிரவு!

திடீரெனக் கண் விழித்துப் பார்த்தாள்.

ஓ! என்று மழை பெய்து கொண்டிருந்தது. வேகமாகக் காற்று வீசிக் கொண்டிருந்தது.

ஐயோ....குருவிக் குஞ்சுகள்!

தட்டுத் தடுமாறி எழுந்தாள். எங்கும் இருளாக இருந்தது.

தடவித் தடவித் போய் யன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே பார்த்தாள்.

எங்கும் “கும்” மென்றிருந்தது.

மழை விடாது பெய்து கொண்டிருந்தது.

குருவிக் குஞ்சுகளுக்காகக் கடவுளை மன்றாடினாள்.

கடவுளே.....குஞ்சுகளைக் காப்பாற்று .....கடவுளே குஞ்சுகளைக் காப்பாற்று......

சில நிமிடங்களில்........

மழை ஓய்ந்தது. காற்றும் தணிந்தது.

மெழுகுதிரி ஒன்றைக் கொழுத்திக் கொண்டு வெளியே வந்தாள்.

மெழுகுதிரி வெளிச்சத்தில் தேடினாள்.

மல்லிகைக் கொடியைக் காணவில்லை. மல்லிகைக் கொடி இருந்த இடம் மட்டுமே இருந்தது.

ஐயோ........குருவிக்குஞ்சுகள்!

நெஞ்சம் பதைத்தது.

மல்லிகைக் கொடியைத் தேடினாள்.

மல்லிகைக் கொடி காற்றில் பிடுங்கப்பட்டு தூர வீசப்பட்டுப் போய்க் கிடந்தது.

ஓடிப் போய்....கொடியில் குருவிக் கூட்டைத் தேடினாள்.

குருவிக் கூட்டைக் காணவில்லை. குருவிக்கூடு இருந்த இடமே இல்லை.

அவளுக்கு அழுகையாக வந்தது.

குருவிக் கூட்டைத் தேடினாள்.

மழைச் சேற்றில் குருவிக்கூடு சிதைந்து போய்க் கிடந்தது.

அவசரம் அவசரமாக குருவிக் கூட்டை எடுத்துப் பார்த்தாள்.

அது வெறுங் கூடு!

ஐயோ! குஞ்சுகுளுக்கு என்ன நடந்ததோ! பாவம், ஒன்றுமேயறியாத பிஞ்சுக் குஞ்சுகள்.

குஞ்சுகளுக்காக அவளுடைய மனம் இரக்கப்பட்டது.

மெதுவாக உதட்டை மடித்து சீட்டி அடித்தாள்.

சீட்டிச் சத்தம் கேட்டதும் குஞ்சுகள் கீச்சி...கீச்சி ...என்று கத்தின.

சத்தம் வந்த திசையிலே பார்த்தாள்.

நிலத்திலே இரண்டு குஞ்சுகளும் கிடந்தன.

ஓடிப் போய் எடுத்தாள்.

அறைக்குள்ளே கொண்டு போனாள்.

குஞ்சுகள் நனைந்து போயிருந்தன. குளிரில் மெதுவாக நடுங்கின.

துவாயால் மெதுவாகத் துடைத்தாள்.

குஞ்சுகள் ஆடாமல் அசையாமல் இருந்தன.

மெழுகுதிரி வெளிச்சத்தில் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தன.

மெதுவாகக் கட்டிலிலே இரண்டு குஞ்சுகளையும் வைத்தாள்.

குஞ்சுகள் இரண்டையும் இறுக்கிக் கட்டிப்பிடித்து, “ஏய்.....செல்லக் குஞ்சுகளா....” ஒரு முத்தம் கொடுத்தாள்.

கட்டிப் பிடித்த படியே தூங்கிப் போனாள்.

காலையில் குஞ்சுகள் “கீச்சுச் கீச்சு” என்று கத்தின.

குஞ்சுகள் கத்திய சத்தம் தாய்க் குருவிகளுக்கு கேட்டிருக்க வேணும்.

கீக்கீ.......என்று கத்திக் கொண்டு பறந்து வந்தன.

குஞ்சுகளுக்கும் தாயைக் கண்ட சந்தோசம். கீகீ என்று கத்த தொடங்கின.

எல்லாம் சேர்ந்து கத்தத் தொடங்கின.

அறை முழுவதும் ஒரே கீச்சு ....கீச்சு....என்று இரைச்சலாக இருந்தது.

குருவிகளின் சந்தோசத்தை பார்க்க விதுனிக்கு ஒரே சந்தோசமாக இருந்தது.

அம்மா....அப்பா....தம்பி....தங்கை......

வாய் முணு முணுத்தது.

சிறிய காட்போட் பெட்டியொன்றை எடுத்து வந்தாள். அதில் சிறிய ஓட்டை ஒன்றைப் போட்டாள்.

பெட்டிக்குள்ளே குருவிக் குஞ்சுகளையும் வைத்தாள்.

சுவரிலே ஒரு ஆணியை அடித்தாள்.

அந்த ஆணியிலே அந்தப் பெட்டியை கொழுவினால்.

அதன் பிறகு குருவிகள் அந்த அறையை விட்டுப் போகவேயில்லை.

அவளை விட்டுப் பிரியவுமில்லை.

இனி.....அவள் அநாதையில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# மொட்டைப்பாறை

தோட்டத்து மூங்கிலில்
இப்பொழுதெல்லாம்
மாடுமேய்க்கும் சிறுவர்கள்
புல்லாங்குழல் வாசிப்பதில்லை
புகைத்துக் கொண்டிருக்கிறார்கள் நகரங்களில்
நெஞ்சில்சளி; கையில் சிகரெட்

மாடுகள் மேயும் பழைய பள்ளத்தில்
மதியத்தில் மந்திரக் கோல்போல்
மரத்தின் நிழல் நீண்டு
தரையை கூட்டிப் பெருக்கும்
ஓடையில் தெண்டைமீன்கள்
வெள்ளிச் சீருடையணிந்து துள்ளும்
தவளைகள் ‘விசில்’ அடித்ததும்
மழைநீர் நூறு மீட்டர் வேகத்தில் வரும்.

விழுதுகளில் ஊஞ்சலாடி
ஓடையில் குதித்து விளையாடிய பெண்கள்
மின்சாதன தொழிற்சாலை
‘சிப்ட்டு’ வேலைக்குப்போய் விட்டார்கள்.

காணி நிலம் வேண்டும் என்று
பராசக்தியிடம் கேட்க - அங்கு
இல்லை அவள் இப்பொழுது
மாற்றிடத்தில் குடியேற்றப்பட்டு
குடமுழுக்கும் செய்யப்பட்டு
ஒளியில் மின்னுகிறாள் அம்பாள்!

புதர்களில் மறைந்து
பி.சுசிலா - டி.எம்.எஸ் குரலில்
பின்னணி பாடும் பறவைகள்
இப்பொழுது அங்கில்லை
‘ராக் இசை’ பாட
இரவு விடுதிகளுக்குப் போய்விட்டன!

மல்லாக்கப்படுத்து சுருட்டுகுடிக்கும்
வின்சன்ட் சர்ச்சிலாய் தொழிற்சாலைகள்
தோட்டத்து மரங்களை - தங்கள்
அடுப்பில் எரித்து விட்டன.

பொன்சாய் மரமாய் குறுகிவிட்ட காடுகள்
தொழிற்சாலை வரவேற்பறையில்
காற்றுக்கும் அசையாமல்
அழகு காட்டுகின்றன!

ஓடையின் மொட்டைப் பாறையில்
பால் உளியில் செதுக்கிய இதயமாக
‘கன்னியப்பன் - முனியம்மா’
இன்னும் அப்படியே இருக்கின்றன
ஓர் இனம் அங்கே வாழ்ந்த
வரலாறாக!



— சை.பீர்முகம்மது

# வளர்ப்பு

– கல்வயல் வே.குமாரசாமி –

முருங்கை இலை வறுவல்,
மொசுமொசுக்கைச் சம்பல்
இரும்புச் சட்டியிலை கிடந்து
என்னைப் பார்க்கும்
சரியான பசி ஆனால்
சாப்பிடவோ மனசு இல்லை
வயிறோ வறுகும்
அன்று
பிள்ளை குட்டி இல்லாத
பாறாத்தைப் பேத்தி வளவில்
களவு எடுத்த
பச்சை தின்னி மாங்காய்
பசிக்கு மருந்தாச்சு
மரம் ஏறி மாங்காயள் ஆஞ்ச
மனுசி கதை
எப்படியோ எங்களின்ரை
அப்பு சிரசு ஏறி
சிரம் ஏறிக்குந்திக்கோ
சீமானோ என்னைச்
சிரைச்சுப் பிடிச்சுக் கொண்டு
ஓடிக் கலைச்சுப் பிடிச்சு
அந்தமா மரத்தில் கட்டி வைச்சு
காஞ்சோண்டி யோடை
முசுத்துக்கூடும் போட்டு
அப்பூ...
அடி எண்டா
ஆச்சி!
குளறக்குளற
வெளுவை எண்டா;
அண்டு விட்டன்
கொண்டலடி எல்லாம்,
‘அழிவாரே
அவளாலை பிள்ளையை ஏன்
கொல்லுறியன்’
அன்னை இட்ட சாபம்
அது இன்னும் கேட்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# மலையகத் தமிழர் நாட்டார் பாடல்கள்
## ஒரு வரலாற்று ஆவணம்

- பா.சுமன், பேராதனைப் பல்கலைக்கழகம்

**(சென்ற இதழ் தொடர்ச்சி )**

மலையகத் தமிழர் சமுதாய வரலாற்றின் ஆரம்ப காலகட்டத்தில் தோட்டத் தொழிலாளிகளுக்கு மிகக் குறைந்தளவிலான ஊதியமே வழங்கப்பட்டிருந்தது. அவ் ஊதியம் அவர்களது நாளாந்தத் தேவை களினைக் கூட பூர்த்தி செய்யவதற்குப் போதுமான தாக இருந்திருக்கவில்லை. (தற்காலத்தில் தோட்டத் தொழிலாளிகளின் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. ஆயினும், அவ்வதிகரிப்புக் கூட தற்கால சூழலில் அவர்களது வாழ்வினைக் கொண்டு நடாத்த போதுமானதாக இல்லை) இந்நிலையில், அவர்கள் பண்டிகைகள், திருவிழாக்கள், ஈமச் சடங்குகள் முதலான வாழ்வின் இன்ப துன்ப நிகழ்வுகளை சமாளிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அச் சிரமங்களில் சிக்கித் தவித்த தொழிலாளிகள் அவற்றை நாட்டார் பாடல்களின் வழி வெளிப்படுத்தியுள்ளனர்.



மலையக மகனொருத்தன் வரவிருக்கும் பொங்கல் பண்டிகையினை முன்னிட்டு தனது மனைவிக்கு சேலை வாங்கு வதற்காக சாயங்காலம் வேலைக்குச் செல்லும் அவல நிலையினைக் கீழ்வரும் பாடலில் காண முடியும்.

"பொங்கல் வருதுன்னு
பொம்பளைக்கு சேல வாங்க
**சம்பளம் பத்தா துன்னு**
சாயங்காலம் மண்ணு வெட்டப் போறேன்
நான் சாயங்காலம் மண்ணு வெட்டப் போறேன்."[33]

காலை முதல் மாலை வரை தோட்டத்தில் தொழிலினை மேற்கொண்ட ஆண்மகன், குடும்பத்தின் மகிழ்விற்காக சாயங்காலப் பொழுதில் கூட மற்றுமொரு மேலதிக வேலையினை நாடிச் செல்லும் பரிதாபகரமான நிலைமையினை மேற்படிப் பாடலில் காணமுடிகிறது.

மலையக மக்கள் அன்றுதொட்டு இன்றுவரை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று அவர்களது ஓய்வு நேரம் தொடர்பிலானது. ஆரம்ப காலங்களில் தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளி களைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டமை யினால், தொழிலாளிகளுக்கு அவர்களது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்குப் போதுமான கால எல்லையினை வழங்கியிருக்க வில்லை. தனது வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்து கொள்வதற்கே போதுமான காலம் அவர்களுக்குக் கிடைத்திருக்காத நிலையில், ஓய்வு என்பது எட்டாக் கனியாவே இருந்துள்ளது. இது தொடர்பிலான செய்தி விடுப்பாக,

"அரிசிருக்குது
பருப்பிருக்குது
ஆக்க நேரமில்லே – நம்ம
அடுத்த வூட்டுல
பொண்ணிருக்கிறது
பாக்க நேரமில்லே...!"[34]

எனவரும் பாடல் அமைந்துள்ளது. மலை யகத்தில் நிலைபெற்றுள்ள ஒருவகை நகைச்சுவை நாடகத்தின் இடையே பாடப்பெறும் பாடலே இது. ஆயினும், தான் சார்ந்த சமுதாயத்தில் வாழும் மக்கள் எதிர்கொண்ட சிக்கல் ஒன்றினை 'பபூன்' என்னும் பாத்திரம் ஏற்று நடிக்கும் நடிகன் ஒருவன் இப்பாடல் மூலம் தெளிவுபடுத்த முனைகிறான்.

நாட்டார் பாடல்கள் யாவுமே அம்மக்களின் இன்ப துன்பங்களின் பதிவுகளாகவே அமையும். இவற்றில் செயற்கைத் தன்மைகளோ கற்பனைப் புனைவுகளோ இராது. இங்கும் மலையக சமுதாயத்தில் தனது இருப்பினை நிலைநிறுத்திய தலைமகன் ஒருவன், தான் அச் சமுதாயத்தில் எதிர்நோக்கிய சிக்கல் ஒன்றினையே நகைச்சுவை வடிவில் புலப்படுத்தி நிற்கின்றான். இங்கு நகைச்சுவையாக பபூன் இப்பாடலைப் பாடியுள்ள போதும், இதற்குள்ளே மலையக மக்கள் யாவரும் எதிர்நோக்கிய, எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை ஒன்று எடுத்தாளப்பட்டுள்ளமையினை உணரக் கூடியதாகவுள்ளது.

தென்னிந்தியத் தமிழர்கள் மலையகத்திற்கு கூலிகளாக அழைத்துவரப்படுவதற்கு முன்பு ஒருவித உணவுப் பழக்கவழக்கத்திற்குள் கட்டுண்டு இருந்தனர். அவர்களது உணவின் பெரும்பகுதி சோளம், குரக்கன், வரகு முதலான தானியங்க ளாகவே இருந்தன. அம்மக்கள் மலையகத்திற்கு வந்த பின்னர், அவற்றிலிருந்து மாறுபட்ட ஒருவகை உணவுப் பழக்கவழக்கத்திற்குள் உள்வாங்கப் பட்டனர். குறிப்பாக, கோதுமை மாவினாலான தின் பண்டங்களே அத்தொழிலாளிகளின் உணவின் பெரும்பகுதியாக மாறியது. அதனோடு இணைந்து நெல்லரிசியும் குறிப்பிடத்தக்க அளவில் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதனை மலையக மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் எடுத்தியம்புகின்றன. இங்கு வருகை தந்த பின்னர் தாம் இதுவரை



படிப்பகம்

www.padippakam.com

கடைப்பிடித்த உணவுப் பழக்கவழக்கங்களில் இருந்து விடுபட்டு, புதியதோர் உணவுப் பழக்கவழக்கத்தினை ஏற்க வேண்டியிருந்தமை தோட்டத் தொழிலாளிகளாக வருகை தந்த மக்களைப் பெரிதும் பாதித்திருந்தது. அப்பாதிப்புக்கள், அதாவது இவ்விரு வேறு உணவுப் பழக்கவழக்கங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் நாட்டார் பாடல்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக,

"சோளம் குரக்கன்
கம்பு கேவரு
மொச்சை மறந்து போச்சே
கண்டிச் சீமைத் துரை
நெல்லுச் சோறு
கோதுமை தின்னலாச்சே."[35]

எனவரும் பாடலில் உணவுப் பழக்க வழக்கம் மாறுபட்ட நிலைமை பதிவாகியுள்ளமையினைக் குறிப்பிட முடியும். இன்றும் மலையக மக்களின் உணவில் பெரும்பாலும் கோதுமை மாவினாலான பண்டங்களே முதன்மை பெறுவதனையும் அவதானிக்க முடியும்.

**மலையக மக்களின் குடியிருப்பு**

இலங்கையில் தேயிலை பயிரிடப்பட்டபோது, தோட்டத் தொழிலாளிகளை நிரந்தரமாக மலையகத்தில் தங்கவைக்க வேண்டிய தேவை தோட்ட உரிமையாளர்களுக்கு ஏற்பட்டிருந்தது. இதனால் பெருமளவான தென்னிந்தியத் தொழிலாளிகள் குடும்பங்களுடன் இலங்கைக்கு குடிபெயரலாயினர். அவ்வாறு குடிபெயர்ந்த தோட்டத் தொழிலாளிகளுக்குரிய நிரந்தர வதிவிடங்களை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பினை அரசாங்கம் தோட்ட உரிமையாளர் களிடமே ஒப்படைத்திருந்தது. இதனை ஏற்று செயற்பட முன்வந்த தோட்ட உரிமையாளர்கள், தொழிலாளர்களை அவர்கள் வேலை புரியவுள்ள தோட்டங்களிலே நிரந்தரமாகக் குடியமர்த்த எண்ணினர். அவ்வாறு செய்வதனால் அதிக நேரம் தொழிலாளிகளை வேலைக்கமர்த்த முடியும் என நம்பினர். நடைப் பிரயாணம் முதலான பல்வேறு காரணிகளால் ஏற்படும் நேர தாமதங்களையும் குறைக்கவே இவ்வாறு திட்டமிடலாயினர்.

உற்பத்தியினைப் பெருக்கி, அதன் மூலமாக சிறந்த இலாபத்தினைப் பெறுவதனையே தமது குறிக்கோளாகக் கொண்டிருந்த தோட்ட உரிமையாளர்கள், அதிகளவிலான பணத்தினைச் செலவு செய்து குடியிருப்புக்களை அமைக்க விரும்பவில்லை. இதன் காரணமாக நீண்ட கட்டிடங்களாக அமைந்த 'லயக்' குடியிருப்புக்களை தொழிலாளிகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர். அந்த லயக் குடியிருப்பு ஒரு தொழிலாளக் குடும்பத்தின் வதிவுக்குப் போதுமானதாக இருந்திருக்கவில்லை. மேலும், இக்குடியிருப்புத் திட்டத்தின் மூலம் காற்றோட்டம், குடிநீர் வசதி, கழிவகற்றும் வசதிகள், சுகாதாரமான சமையல் வசதி போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் காணப்பட்டது. இன்றைய நிலையில், இம்முறையில் சாதகமான சிற்சில மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதனை அவதானிக்க முடிகிறது. ஆயினும், சுமார் நூறு வருட பழமை வாய்ந்த லயக் குடியிருப்புக்களையும் இனங்கண்டு கொள்ள முடிகிறது.

மேற்காட்டியவாறு பல்வேறு குறைபாடுகளைக் கொண்டு தமது வதிவிடங்கள் அமைந்திருந்தமை, தென்னிந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளிகளாக இலங்கை வந்த மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. பல்வேறு கனவுகளைச் சுமந்து வந்த மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த இன்னல்களோடு, தமது குடியிருப்பு தொடர்பிலான பிரச்சினையும் ஒன்றாகியிருந்தது. அதன் தாக்கம் நாட்டார் பாடல்கள் பலவற்றில் பதிவாகியுள்ளது. எடுத்துக் காட்டாக,

"எட்டடி குடிசையிலே
இருப்பது நியாயமில்லே
எமலோகம் போகலாம் வாடி தாயே
எமலோகம் போகலாம் வாடி தாயே."[36]

"காம்பிரா பத்தாதுடா
கங்காணி வடுவா - இங்க
காலு நீட்ட எடமில்லையே
கங்காணி வடுவா — அப்படி
கையை நீட்ட எடமில்லையே
கங்காணி வடுவா."[37]

எனவரும் பாடல்களைக் குறிப்பிட முடியும். இங்கு, இச்சிறிய வாழ்விடத்தில் வதிவதைவிட இறப்பது மேலானது என மலையக மகனொருத்தன் கலங்குவதனையும், தன்னைப் பலவாறு ஆசை வார்த்தை காட்டி அழைத்து வந்த கங்காணியை வஞ்சித்து நிற்பதனையும் காணமுடிகிறது.

**தோட்டத் தொழிலாளிகளின் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்**

தென்னிந்தியாவில் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டிருந்த மக்கள், கங்காணிமார் ஆசை வார்த்தைகளை அள்ளி வழங்கியிருந்த போது, அவற்றை நம்பி இலங்கை செல்வதன் மூலம் தமது வாழ்வு வசந்தமாகும் என்ற நம்பிக்கையுடனேயே இலங்கையில் கால் பதித்தனர். அவர்கள் தென்னிந்தியக் கரையில் தொடங்கி மலைநாட்டை அடையும் வரை சொல்லொண்ணாத் துயரங்கள் பலவற்றை எதிர்கொண்டிருந்தனர். (அவை முன்பு விளக்கப்பட்டது) அவ்வாறு பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டிருந்த போதிலும், மலைநாட்டை அடைந்தவுடன் அதன் சூழலை அவதானித்த மக்கள், தமக்கு ஓர் இன்ப வாழ்வு கிடைத்ததாகவே கருதியிருந்தனர். இதனை,

"காயுதடி கம்பரிசி
கசக்குதடி நம்ம சீமை
இனிக்குதடி கண்டிச்சீமை
இனிப் பயணம் தப்பாது."

"ஆளுகட்டும் நம்ம சீமை
அரிசி போடும் கண்டிச் சீமை
சோறு போடும் கண்டிச் சீமை
சொக்குதடி தேகமெல்லாம்."[38]

"ஆப்பை அரைக்காசு
ஆன சட்டி முக்கா ரூபா
சோத்துப் பானை ஒரு ரூபா
சொகுசான கண்டிச் சீமை."[39]



படிப்பகம்

www.padippakam.com

எனவரும் பாடல்கள் விளக்கும். இப்பாடல்களின் மூலம் இலங்கை, தம்மை வாழ வைக்கும் நாடு என்ற உணர்வு அம்மக்களிடம் இழையோடி இருந்தமையினை உணர்ந்து கொள்ள முடிகிறது. இப்பாடல்கள் மலை நாட்டை அடைந்த மக்கள் பெருந்தோட்ட நிர்மாணிப்புக்குப் பயன்படுத்தப்படுபவதற்கு முன்னர் எழுந்தவையே ஆகும். அம்மக்கள் தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட பின்னரே வாழ்வின் பெரும்பாலான துயரங்களை அனுபவிக்கலாயினர். ஒட்டுமொத்த துயரங்களையும் அனுபவித்த பின்பு மலைநாட்டு வாழ்வினையே வெறுக்கத் தொடங்கினர். இலங்கையில் கிடைத்த வாழ்வினை விட தாம் தமிழ் நாட்டில் வாழ்ந்த வாழ்வு சிறப்பானது என்பதனையும் உணரத் தொடங்கினர். இவ்வெண்ணங்களின் வெளிப்பாடுகள் நாட்டார் பாடல்களாக உருப் பெற்றுள்ளன.

"கண்டி கண்டி எங்காதிங்க
கண்டிப் பேச்சு பேசாதிங்க
கண்டி படும் சீரழிவே
கண்டபேரு சொல்லுவாங்க."

எனவரும் பாடல் மூலம், ஆரம்ப காலங்களில் தோட்ட வேலைக்காக இலங்கை வந்து, அவற்றில் ஈடுபட்டு, தென்னிந்தியா சென்ற தொழிலாளிகள், இலங்கைக்குச் சென்றால் தமது வாழ்வினைச் சிறப்பானதாகக் கட்டமைத்துக் கொள்ள முடியும் என எண்ணியிருந்த மக்களிடம், இலங்கையில் தோட்டத் தொழிலாளிகள் எதிர்கொள்ளும் துயரங்களை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளமையினையும் நோக்க முடியும். இதன் மூலம் இலங்கை வரும் தொழிலாளர்களை இலங்கையில் தோட்டத் தொழிலின் பொருட்டு ஆரம்ப காலங்களில் வந்து, பல்வேறு இன்னல்களையும் அனுபவித்து, தாய் நாடு சேர்ந்தவர்கள் தடுக்க முயன்றுள்ளனர் என்ற வரலாற்றுண்மையையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், இப்பாடல் மூலம் இலங்கையின் மலைப்பகுதிகளில் தொழிலாளிகளாக குடிபெயர்வதனை தென்னிந்திய மக்கள் கண்டிப் பிரதேசத்திற்கு குடிபெயரல் என்றே கருதி வந்துள்ளமையினையும் நோக்கக் கூடியதாகவுள்ளது.

கீழ்வரும் பாடலும், பல்வேறு எதிர்பார்ப்புக்களோடு இலங்கைக்கு குடிபெயர்ந்த தொழிலாளிகள், அவ்வெதிர்பார்ப்புகளுக்கு மாறான வாழ்வு இலங்கையில் கட்டமைந்து விட்டதனை உணர்ந்த பின்னர் எழுந்ததுவே.

"ஆளு கட்டும் நம்ம சீமை
அரிசி போடும் நம்ம சீமை
சோறு போடும் கண்டிச் சீமை
சொந்தமினு எண்ணாதிங்க."[40]

இவ்வாறே, கங்காணி ஆள் திரட்டும் போது கூறிய ஆசை வார்த்தைகளுக்கு மாறான வாழ்வு இலங்கையில் அமைந்திருந்தமையினை,

"குடிக்கப் பாலும்
கொப்பளிக்கப் பன்னீரும்
அடுக்கடுக்காய்
தருவதாகச் சொன்னானே
கங்காணி...! இங்கே
குடிக்கக் கூழ
'டிங்குன்னு'தே."[41]

என்றவாறு கீழ்வரும் பாடல் வெளிக்காட்டி நிற்கிறது.

மலைநாட்டின் தோட்டத் தொழிலாளிகள், தோட்டத் தொழிலினை மேற்கொள்வதிலும், வாழ்வை கட்டமைத்துக் கொள்வதிலும் பல்வேறு இன்னல்களை அனுபவித்த பின்னரே, தாய் நாட்டில் தாம் வாழ்ந்த வாழ்வு இதனை விட சிறப்பானது என்பதனை உணரலாயினர். அவ்வுணர்வு கீழ்வரும் பாடல்களில் வெளிப்பட்டு நிற்கின்றது.

"பாதையிலே வீடிருக்க
பழனிச் சம்பா சோறிருக்க
எருமே தயிரிருக்க
ஏண்டி வந்தே கண்டிச் சீமை."

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நாமறந்தேன்."[42]

"ஈந்தியாவில் பெண்ணைக் கட்டி
எலங்கை வந்து மண்ணை வெட்டி
பட்ட பாடும் கெட்ட கேடும்
போதுமே."[4343]

சிவலிங்கம், மு. (2007) மு.கு..நூ.ப.45

இறுதியாக அமைந்துள்ள பாடல், தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்குத் தோட்டத் தொழிலாளிகளாக குடிபெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர், தமது குடும்பங்களில் பலரைப் பிரிந்த நிலையிலேயே இலங்கை வரத் தலைப்பட்டனர் என்ற வரலாற்றுண்மைக்குச் சான்றாக அமைகிறது. இப்பாடல் மனைவி தென்னிந்தியாவில் இருக்க, அவளைப் பிரிந்து இலங்கை வந்து, தோட்டத் தொழிலில் ஒரு தலைவன் தனது வாழ்வை பல்வேறு துயரங்களுடன் கழிப்பதனைப் பதிவுசெய்துள்ளது.

இதுவரையும் நோக்கப்பட்ட விடயங்கள், மலையகத் தமிழர் சமுதாய வரலாற்றில் கறைபடிந்த ஒரு காலகட்டத்தை புலப்படுத்தி நிற்கும் சான்றாதாரமாக மலையகத்தில் வாய்மொழி மரபில் வழங்கிவரும் நாட்டார் பாடல்கள் விளங்குகின்றன என்ற உண்மையினைப் புலப்படுத்தி நிற்கும். இந்நாட்டார் பாடல்கள் வெறுங் கற்பனைகளோ, புனைவுகளோ அற்ற படைப்புக்களாக விளங்குகின்றன. எனவே, மலையக வரலாற்றைத் திரிபுகளற்ற வகையில் முன்வைக்கும் சான்றாதாரங்களுள் ஒன்றாக அம்மக்களிடத்தே வாய்மொழி மரபில் வழங்கிவரும் பாடல்களையும் கொள்ள முடியும். மலையகத்தில் வழங்கி வரும் நாட்டார் பாடல்களின் தொகுப்பு முயற்சிகள் மேலும் விரிவடையும் பட்சத்தில் இக்கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு விரிவடைய சந்தர்ப்பம் உண்டு.

## (Endnotes)[1]

1. அருணாசலம், க. (1994) மலையகத் தமிழ் இலக்கியம், கொழும்பு, தென்றல் பப்ளிகேஷன். ப.05

[2] வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மலைநாட்டு மக்கள் பாடல் எனும் நூலில் பின்னுரைக்கான சிலகுறிப்புகள் என்ற தலைப்பில்வழங்கியுள்ள நாட்டார் பாடல்கள் சிலவற்றின் மீதான விளக்கம்.



படிப்பகம்

www.padippakam.com

[3]அருணாசலம்,க (1994) மு.கு.நூ. ப.04

[4] சிவலிங்கம், மு. (2007) மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், குறிஞ்சித் தமிழ் இலக்கியமன்றம். ப.45

[5] வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மலைநாட்டு மக்கள்பாடல்கள், சென்னை, கலைஞன் பதிப்பகம். ப.16

[6] மேற்படி நூலில் பின்னுரைக்கான சில குறிப்புக்கள் என்றதலைப்பில் வழங்கி யுள்ள நாட்டார்பாடல்கள் சிலவற்றின் மீதான விளக்கம் ப. 94

[7] சிவலிங்கம், மு. (2007) மு.கு.நூ. ப.167

[8]சந்திரசேகரன் சோ. (1989) இலங்கை இந்தியர் வரலாறு, மதுரை, வைரவன் பதிப்பகம். ப..55

[9] 'ஒத்தக்கட என்பது கினிகத்தேனையில் அக்காலத்தில் காணப்பட்ட கடை ஒன்றினையே குறித்து நிற்கிறது எனவும், அப்பிரதேசத்தில் ஒரே ஒரு கடையே அக்காலத்தில் நிலைபெற்றிருந்தமையால் அக்கடையை ஒத்தக்கடை எனக் குறிக்கும் வழக்கம் தோன்றியதாகவும் வட்டகொடையைச் சேர்ந்த இராஜப்பிள்ளை என்பார் குறிப்பிட்டார்.

[10] சிவலிங்கம், மு. (2007) மு.கு..நூ. ப.156

[11]மேலது. ப.164

[12]வேலுப்பிள்ளை, சி.வி. மலைநாட்டு மக்கள் பாடல்கள் என்ற நூலில் பின்னுரைக்கான சிலகுறிப்புக்கள் என்ற தலைப்பில் நாட்டார் பாடல்கள் சிலவற்றின் மீதான விளக்கம்.

[13]சிவலிங்கம், மு. (2007) மு.கு..நூ. ப.39

[14] வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மு.கு.நூ. ப.26

[15] சிவலிங்கம், மு. (2007) மு.கு..நூ. ப.142

[16]வட்டகொடையைச் சேர்ந்த இராஜப் பிள்ளை என்பவரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பாடல்

[17] மேலது.

[18] மேலது.

[19]சந்திரசேகரன், சோ. (1989) மு.கு.நூ. ப.59

[20] வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மு.கு.நூ.ப.26

[21] சிவலிங்கம், மு. (2007) மு.கு..நூ.ப.162

[22] மேலது, ப.162

[23] வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மு.கு.நூ.ப.25

[24] மேலது. ப.159

[25] வட்டகொடையைச் சேர்ந்த இராஜப்பிள்ளை என்பவரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பாடல்

[26] மேலது.

[27] வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மு.கு.நூ.ப.15

[28] சிவலிங்கம், மு. (2007) மு.கு..நூ.ப.165

[29] மேலது. ப.36

[30] மேலது. ப.163

[31]மேலது.ப.164

[32]தீர்த்தக்கரை,செப்டம்பர் - நவம்பர், 1982, ப.40

[33] மேலது.ப.38

[34] மேலது.ப.21

[35] மேலது.ப.23

[36] மேலது.ப.167

[37]மேலது. ப.57

[38] மேலது.ப.169

[39]வட்டகொடையைச் சேர்ந்த இராஜப்பிள்ளை என்பவரிடம் இருந்து சேகரிக்கப்பட்டபாடல்

[40]வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மு.கு.நூ. ப.15

[41] சிவலிங்கம், மு. (2007) மு.கு..நூ.ப.138

[42]வேலுப்பிள்ளை, சி.வி. (1983) மு.கு.நூ. ப.24

# கனாக்களால் நிறையும் என் இராக்கள்...

- வெற்றி - துஷ்யந்தன் -

உன்னைப்பற்றித்தான்
தொடர் கனாக்களினால்
நிறைந்து போயிருக்கின்றன
என் இராக்கள்.

என் சொற்கள் எல்லாம்
சிதறுண்டு போய்
அகால மரணமடைந்துகொண்டிருக்கின்றன.
உன் மனப்பிரதியில்
பொறிக்கப்பட்டிருக்கும்
என்னைப்பற்றியதான இப்போதைய
எழுத்துக்களை
படித்துவிடவேண்டும் என்ற ஆர்வத்தில்
என் ஆவி அலைந்துகொண்டிருக்கின்றது.

என்னைக்குறித்த கேள்விகளுக்கு
நீ என்ன பதில்களை
உன் இதயத்திற்கு
சொல்லிக்கொண்டிருக்கின்றாய்
என்பது இன்னும் எனக்குள்
புரியப்படாமலே கிடக்கின்றது.

எதுவுமே நமக்குள் இல்லாதது போல
என்னால் ஏதும் பாசாங்கு காட்டமுடியவில்லை
எல்லாமே எனக்குள்
கனத்துக் கிடக்கின்றன

முடிவுறாத எச்ச வாக்கியமாய்
முனகிக்கொண்டிருக்கின்றது நம் தேசம்
புரிந்து கொள்ள முடியாதவை
ஏராளம்தான் என்னுள்ளே.

கனாக்கள் ஒவ்வொன்றிலும்
நீ மட்டும்தான்
காட்சிகளாகின்றாய் என்னுள்.

இரவின் மடியில்
தூக்கமில்லாத யாசகனாய்
நான் இப்போதும்
உன்னைத்தான்
நினைத்துக்கொண்டிருக்கின்றேன் - ஆயினும்
உன்தன் கலைக்கப்படாத
மௌனங்கள் மாத்திரம்
என்னை அணு அணுவாய்
கொண்டுகொண்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# கொற்றாவத்தை கூறும் குட்டிக்கதைகள்

## பொத்தடா வாயை...!

**11**

கொற்றை
பி. கிருஷ்ணானந்தன்



அந்தக்காலத்தில் கூத்து, நாடகம் போடுவதென்றால் தொடர்ச்சியாகப் பாட்டுகள் பாடுவதற்காக இளம் பராயத்தினர்க்கு கற்கண்டு போட்டுக் காய்ச்சிய பசும் பால் தயாராக இருக்கும். வயது வந்தவர்களுக்கு 'பெரல்' நிறையக் கள்ளுத் தயாராக இருக்கும். எல்லோருக்கும் அல்ல.

அன்று வரலாற்று நாடகம் ஒன்று நீண்டநாள் பயிற்சியின்பின் மேடையேறத் தயாராக இருந்தது. பத்துப்போத்தல் கொள்ளளவு கொண்ட பெரல் நிறைய கள்ளைக் கொண்டு வந்து மேடைக் குப் பின்னால் மறைத்து வைக்கப்பட்டாயிற்று.

அன்று பாத்திர மேற்று நடிப்பவர்களில் பெரும்பங்கினர் குடிப்ப வர்கள்தான். என்றாலும் இராசாவும் மந்திரியும்தான் ஆறு, ஏழு போத்தல் கள்ளையும் குடித்து முடிக்கக் கூடிய தகைமை பெற்றவர்கள்.

அரண்மனை முதற்கொண்டு அந்தப்புரம் வரை ஐந்து காட்சிகள் தொடர்ந்து இராசா தோன்றுவதாகத்தான் நாடகம் அமைந்திருந்தது. இந்தக் காட்சிகளுக்கிடையிலே இராசா ஒரு முறையாவது பின்னுக்குப்போய் வாய் நனைத்து [illegible] செய்யலாமென்றால் அதுமுடியாமற் [illegible] இன்னும் [illegible] விடியமுன்னர் நடாத்தி முடிக்கவேண்டுமென்பதற்காக அடுத்தடுத்து திரைச்சீலையை (சீன்ஸ்) இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

நான்காவது காட்சி முடிந்ததும் இராசா ஆவலுடன் பின்னுக்கு ஓடினார்.

"இதோ வீர, தீர, மார்த்தான்ட, பராக்கிரம .............. மகாராஜா அரண்மனைக்கு வருகிறார். பராக், பராக், பராக்"

சேவகன் கட்டியம் கூறவே இராசா திரும்பி மேடைக்கு ஓடிவந்து விட்டார்.

காட்சிமுடிய இராசா தாகத்துடன் - வேகத்துடன் பின்னுக்கு ஓடினார். ஆவலாக தவனத்துடன் கள்ளுப் பெரலைத் தூக்கினார். மீண்டும் அறிவித்தல் தொடர்ந்தது.

"இதோ மகாராஜா நந்த வனம் செல்கிறார்"

நந்தவனத்திற்கு வந்தாயிற்று. இராசா நந்தவனத்தை இரசிக்க வில்லை. கோபம் முகத்தில் கொப்பளிக்க குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறார்.

மந்திரி கூறுகிறார்

"அரசே...! அதோ துள்ளித்திரியும் புள்ளி மான்களைப் பாருங்கள்"

"பொத்தடா வாயை! ஒரு சொட்டுக் கள்ளுக்கூட எனக்கு வைக்காமல் முழுக் கள்ளையும் குடிச்சிட்டு வந்து இஞ்சை எனக்கு துள்ளித்திரியிற புள்ளி மானைக் காட்டுறாய் என்னடா...

மேலும் ஏதேதோ வார்த்தைகள் (அது தூஷணமாகத்தானிருக்க வேண்டும்) நெருப்பாய் வெளிவர இராசா மேடையை விட்டு இறங்கிப் போய்விட்டார்.

---

## உயிர்த்தெழுந்த லோகிதாசன்!

**12**

"அரிச்சந்திர மயான காண்டம்" நாடகம் நடுச்சாமத்தைத் தாண்டி இரசிகப்பெருமக்களின் அமோக "அப்பிளாசுடன்" மேடையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சந்திரமதி லோகிதாசன் சம்பந்தப்பட்ட இத்தியாதி சோகக்காட்சிகள் இரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு துளியும் கண்ணைத் தூங்காமல் விழித்திருந்து பார்க்க வைத்திருந்தன.

லோகிதாசன் நண்பர்குழாத்துடன் தெர்ப்பைப்புல் கொய்யப்போய் பாம்பு கடித்து இறந்து, மயானத்தில் அரிச்சந்திரனிடம் கூலிப்பணம் இல்லாமைக்காக கெஞ்சியழ, சந்திரமதியின் தாலி அரிச்சந்திரனின் கண்ணுக்குத் தெரியவர தன்மனைவியை, மகனை அரிச்சந்திரன் அடையாளங் கண்டுகொண்டான். இந்நேரத்தில் லோகிதாசனாக நடித்த பையனுக்கு வயிற்றுளைவு, வயிற்றோட்டம் ஏற்பட அவன் தாய் தகப்பனுடன் வீட்டுக்கு ஓடிவிட்டான்.



படிப்பகம்

www.padippakam.com



அடுத்த காட்சிக்கு லோகிதாசன் தேவை. அரிச்சந்திரனாக நடித்தவர் உடன் தோசை சுடத்தயாரானார். இரசிகர் கூட்டத்தினுள் மகனுடன் இருக்கும் தன்மனைவியை ஆள்விட்டு மேடைக்குப் பின்னால் அழைத்தார். லோகிதாசனாக நடிப்பவர் இறந்து போனவனாக இனிப் பேசாமல் கிடக்கிற காட்சிதானே நித்திரையில் இருக்கும் தன்மகனை மேடைக்குக் கொண்டு வந்து கிடத்தி காட்சியைத் தொடர்வதற்கு அனுமதி கேட்டார்.

மகனைச் செத்தவனாக மட்டும் சித்திரித்துகிடத்துவதற்கு தாய் ஒப்புதல் அளிக்கவில்லை. எனினும் கணவனின் வற்புறுத்தலுக்கு சம்மதிக்க வேண்டியதாயிற்று. ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபடியே புதிய லோகிதாசன் மேடைக்குக் கொண்டுவரப்பட்டான்.

காட்சி ஆரம்பமாகியது.
அரிச்சந்திரன் மகனின் உடலை எடுத்தணைத்து "புன்னகவராளி" இராகத்தில் பாடத்தொடங்கினான்.
"வாடா என் கண்ணின் மணியே
எனக்கொரு முத்தம்
தாடா என் கண்ணின் மணியே
காடா உனக்கு மனை
வீடோ நீ இங்குறங்கு
பாடா அயன் விரித்த தோடா
நான் பாவி அப்பா வாடா
மனனே வாடா............
மகனே வாடா ................"

இந்தக் கட்டத்தில் பையன் விழித்து விட்டான் தகப்பன்அழுவதை அலங்க மலங்கப் பார்த்தான் பயந்துவிட்டான். எழுந்தான்
"அப்பா ஏனப்பா அழுகிறியள்
அப்பா ஏனப்பா அழுகிறியள்?"
தகப்பனைக்கட்டிப் பிடித்து அழத்தொடங்கிவிட்டான். உயிர்த்தெழுந்த லோகிதாசனைப் பார்த்ததும் சபையிலிருந்து எழுந்த விசிலடிப்பும், கரகோஷமும் வானைப் பிளந்தது.

# சீரழிவு

- வேல் அமுதன்

"ஏன் பிள்ளை இண்டைக்கும் லேற்?" - புனிதவதி தனது மகள் மாலினியிடம் விசாரித்தாள்.

"எக்ஸ்ரா வகுப்பம்மா. சிலபஸ் இன்னம் முடிக்கவில்லை"

" என்னம்மா முந்தியெண்டா நேரத்திற்கு வந்திருந்தாய். இப்ப இப்ப அடிக்கடி வீட்டிற்குச் சுணங்கி வாராய்!?

"அம்...மா! பேப்பர் கிளாஸ். சோதினை நெருங்குதல்லே"

"ஆரடி அவன்? ஆரோடை திறிவீலரிலை வந்தனீ?"

"அவன் பிரண்டம்மா. நல்ல பெடியன். நான் பாவமெண்டு உதவி செய்தவன்"

- அப்படி விசாரிப்பும், மன்னிப்புமாகச் சில வாரங்கள் ஓடி மறைந்து விட்டன.

ஆனால்,

கடந்த சில நாட்களாக மாலினிக்கு குமட்டல் - ஓங்காளம் - வாந்தி.......

மாலினி, வாகீசன் - புனிதவதி தம்பதிக்கு ஒரே ஒரு பிள்ளை. செல்லமாக வளர்க்கப்பட்டவள்.

செல்வச் சீமானான வாகீசன் மாலினியை உடனடியாக வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தினார்.

உண்மை தெரிந்தது. மாலினி கருவுற்று இருந்தாள்! வாகீசன் கெட்டித்தனமாக - இரகசியமாக கருச்சிதைவு செய்துவிட்டார்.

வீட்டை வந்த மாலினியிடம் விசாரணை. துருவித் துருவி துளைத்தார். அவள் தனது கல்லூரி மாணவன் ஒருவனின் கையடக்க கமரா போன் வழியாக ஆபாசக் காட்சிகளை அப்பட்டமாகக் கண்டு - எடுபட்டு மேலதிக வகுப்பு என்ற சாட்டில் சுற்றித் திரிந்ததையும் தெரிந்து கொண்டார். கொப்பளித்த கோபத்தை அவரால் அடக்க முடியவில்லை. பிரம்பை எடுத்துப் பிடித்தார். சுழரச் சுழர- கதறக் கதற - பிரம்பு சுக்கு நூறாகும் வரை வாட்டினார்.

இருந்தும்,

மாலினி கிறுங்கவில்லை! மாறாக " இனி கைநீட்டினால், என்னை உயிருடன் காணமாட்டியள்" என்றாள்.

அந்நேரம் " ஐ....யோ! ....அ....ம்மா!" , என உரக்கக் கோரக்குரல் ஒலித்தது. மரண ஓலம் ஒலித்த வீட்டுக் குசினிப் பக்கம் தகப்பனும் மகளும் ஓடினர். தாய் புனிதவதி மண்ணெண்ணெய்க் குளியலால் எரிந்து- கருகிக் கொண்டிருந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

# மு.பொ. பக்கம்

ஞானம் 140ஆவது இதழில் (ஜனவரி 2012) அவசரக்கோலத்தில் விசயங்களைப் பிரசுரிக்கலாமா - மன்னிப்புக்கேட்கலாமா? என்ற தலைப்பில் விஜயன் எழுதியுள்ள பத்தி, மிகவும் அவசியமான - தேவையான விசயங்களைச் சொல்லியுள்ளது. அதையொட்டி நானும் சில சொல்ல வேண்டிய அவசியத்துக்குட்பட்டுள்ளேன்.

இன்று பல இளந்தலைமுறை எழுத்தாளர்கள் (90களுக்கு பின் வந்தோர்) தம்மை முதன்மைபடுத்துகின்ற வேட்கையால் உந்தப்பட்டு ஈடுபடும் பல 'இலக்கிய' நடவடிக்கைகளில் ஒன்றுதான் 'இதழாசிரியர்' என்ற பேரில் அவர்கள் தம் போன்றவர்களின் ஆக்கங்களோடு சேர்த்து இடைக்கிடை மூத்த எழுத்தாளர்களின் சில படைப்புகளையும் இணைத்து வெளியிடும் சிற்றிதழ்களாகும். ''படிகள்'' வெளியிடும் ஆசிரியர் சிறிது காலத்திற்கு முன்னர் என்னிடம் நேர்காணல் ஒன்றைக் கேட்டபோது, இத்தகையோரின் தரத்தை கருத்தில் கொண்டு நிராகரித்தேன். ஆனால் சென்ற ஆண்டு நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டின் போது மீண்டும் என்னை அணுகினார். மேலும் நிராகரித்தல் முறையல்ல என்று நினைத்து உடன்பட்டேன். இவர் கேட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தேன். ஈழத்து இலக்கிய உலகில் நிகழ்ந்த முக்கியமான போக்குகள் பற்றி சொல்லவந்தபோது சோலைக்கிளி பற்றி நான் 15 வருடங்களுக்கு முன்னர் சரிநிகரில் எழுதியதையும் குறிப்பிட்டேன், அவ்வளவே. இதற்கு இதழாசிரியர் சோலைக்கிளியிடம் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்? இவர் கேட்டிருந்த கேள்வி களுக்கு நான் அளித்திருந்த பதிலை ''ரைப்'' செய்து மின்னஞ்சல் மூலம் என்பார்வைக்கு அனுப்பியிருந்தார். அதில் காணப்பட்ட சகிக்க முடியாத பிழைகளை திருத்தி நான் இவருக்கு மீள மின்னஞ்சல் செய்வதைப் பொருட்படுத்தாது, சஞ்சிகை உரிய நேரத்தில் வரவேண்டும் என்பதற்காக அதே சகிக்க முடியாத பிழைகளோடு வெளியிட்டதற்கு இவர் என்னிடந்தான் மன்னிப்புக் கேட்கவேண்டுமே ஒழிய சோலைக்கிளியிடம் அல்ல! விஜயன் கூறியது போல் இலக்கியம் பற்றி அதன் நடைமுறைகள் பற்றி எதுவும் தெரியாத இவர்களுக்கேன் இதழாசிரியர் மகுடம்?

இத்தோடு சேர்த்து இன்னும் இரண்டு சம்பவங்கள் பற்றி சொல்வது, இளந்தலைமுறை எழுத்தாளர்களின், வெற்றுத்தனமான, தம்மை முதன்மைப்படுத்த எதையும் செய்வர் என்பதற்கு நல்ல உதாரணங்களாக அமையும் என நினைக்கிறேன். 2007 காலப் பகுதியில் ஒரு பெண்கவிஞர் என்னை அடிக்கடி வந்து சந்தித்தார். தனது கவிதைகளைத் தந்து எனது அபிப்பிராயத்தை அறிய முற்பட்டார். நான் அவருக்கு இரண்டொரு கவிதை நூல்களைக் கொடுத்ததோடு மேலும் அவரை பல நல்ல கவிதை நூல்களைப் படித்து தன்னை வளப்படுத்திக் கொள்ளுமாறும் சொல்லி அனுப்பினேன். ஒரு தொகுப்பு வெளியிடப்போவதாகவும் அதற்கொரு முன்னுரை தருமாறும் வற்புறுத்தினார். இப்போது தொகுப்பை வெளியிடாது முதிர்ச்சியான கவிதைகளை எழுதும் நிலைக்கு உயர்ந்ததற்குப் பின்னர் தொகுதியை வெளியிடும்படி சொன்னேன். ஆனால் அவர் கேட்பதாய் இல்லை. தம் போன்ற இளந்தலைமுறையினர்க்கு மூத்த எழுத்தாளர்கள் உதவ வேண்டும் என்ற பாணியில் அவர் கதை இருந்தது. எனவே அவருக்கொரு சிறிய, ஆனால் அர்த்தமுள்ள முன்னுரையை எழுதிக் கொடுத்தேன். இதன் பின்னர் ஒரு நாள் மேற்படி கவிதைத் தொகுப்பு எனது ஆக்கங்களை வெளியிடும் TECHNO PRINT அலுவலகத்தில் அநாதரவாகக் கிடக்கக் கண்டேன். அதைத்தட்டிப் பார்த்தபோது என்னுடைய முன்னுரைக்கு பதிலாக ஓட்டமாவடி அரபாத்தின் முன்னுரை இருந்தது. இதற்கு சிறிது காலத்திற்கு பின்னர் இதே கவிதை தத் தொகுப்பு நீர்வைப் பொன்னையன் அவர்களின் அனுசரணையால் வெளிவந்தது. இப்போ அதன் முன்னுரையாக இருந்தது அரபாத்தினது அல்ல, கவிஞர் இக்பாலுடையதாகும்!

இன்னொரு இளங்கவிஞர் என்னை இரண்டொரு முறை சந்தித்து, தனது கவிதைத் தொகுப்புக்கு முன்னுரை தருமாறு கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க நானும் கொடுத்தேன். அவரின் தொகுப்பு வெளிவந்தபோது அதில் என்னுடைய முன்னுரைக்குப் பதிலாக கவிஞரும் பேராசிரியருமான ஒருவருடைய முன்னுரை இருந்தது!

பின்னர் ஒரு நாள் எதிர்பாராத விதமாக மேற்படி இளங்கவிஞரைச் சந்தித்த போது ''உங்களுடைய முன்னுரை மிக அருமையாக இருந்தது சேர். ஆனால் பேராசிரியருடைய முன்னுரையை இத் தொகுப்புக்கு போட வேண்டியதாயிற்று'' என்றார் அசடுவழிய.

இதுதான் இன்றைய இலக்கியத் தற்குறிகளான ஒருசில இளந்தலைமுறை எழுத்தாளர்களின் ''இலக்கியப் போக்காக'' உள்ளது. நாம் இவர்களின் இந்த இலக்கியப் பரிசோதனைகளின் களமாக இல்லாது பார்த்துக்கொண்டால் சரி.

*(இனி அடுத்த இதழில்..)*



படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணிய எழுத்தாளர்

# கவிஞர் திலகபாமா



**2 நீங்கள் ஒருபெண்ணிய செயற்பாட்டாளராக அடையாளப் படுத்தப்படுகிறீர்கள் என்றால் அதற்கான விசேடம் அல்லது வேறுபாடு என்ன?**

பொதுவாக பெண்ணிய செயல்பாட்டாளார்கள் மேலைத் தேய பெண்ணியத்தை புத்தகங்களில் படித்து அதை வழியொற்றி செயல்படுகின்றனர் .ஆனால் என்னைப் பொறுத்தவரை என் வாழ்வின் கேள்விகளிலிருந்து பெண்ணுக்கான மனித இருப்பு முன்னிலைப் படுத்தப் படுகின்றது. அது வாழ்வுக்கும் எழுத்துக்குமான இடைவெளியை குறைக்கவும், மேலைத் தேய பெண்ணிய செயற்பாட்டாளர்களின் சமூக விலகலை தவிர்க்கவும் பயன்படுவதுதான் விசேடம் என நினைக்கின்றேன்

**1,பெண்ணியம், பெண்ணிலை வாதம் இப்படியெல்லாம் சில சொற்கள் இன்று பேசப்படுகின்றன. இவற்றிற்கான சரியான அர்த்தம் என்ன?**

பெண் இதுவரை தன் குடும்பம் தன் சமூகம் தேவை சார்ந்து சிந்திக்கவும், அது சுமூகமாக இயங்க தன்னை இழந்து வாழ ஒப்புக் கொடுப்பவளாகவும் உருவாக்கப் பட்டிருக்கின்றாள். அதை இதுவரை உணராதபடிக்கும் வாழப் பழகி விட்டிருந்தாள். ஆனால் இன்று இதுவரை காலம் காலமாய் இருந்திருந்த வாழ்விலிருந்து அவளை நகட்டிப் போடுகின்றது. இதுவரை அவள் யாருக்கெல்லாமோ வாழ்ந்தாளோ அவர்கள் யாரும் அவளது செயற்பாட்டில் உடன் வராமல் போகின்ற போது தன் பக்கத் தேவைகளை சொல்லிப் பழகுகின்றாள். நம் தேசத்தில் பெண்ணியம் அப்படித்தான் பழக்கத்தில் வந்தது. அது அவள் தேவை அவள் பார்வை அல்ல, சமூக தேவை அதற்கான பாதை என்பதை உணர்த்துவதற்கான வழிமுறையாக பெண்ணிலை வாதம் செயல்படுகின்றது. தனி மனித உழைப்பு மட்டுமானது அல்ல அவளது உழைப்பும் சமூக அர்ப்பணிப்பே. உணர்வுச் சிதைவுகளைத் பெண்களுக்கு தந்து போகின்ற சமூகம் அதை அவள் உணர முடியாமல் செய்திருப்பதை உணர்வதும் உணர்த்துவதும் அதிலிருந்து மீள்வதுமாக பெண்ணிய சிந்தனையும் செயல்பாடும் இருக்க வேண்டும்.

**சமீபத்தில் அமரர் சோமகாந்தனின் நினைவு பரவலில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்த திலகபாமாவை 'ஞானம் சஞ்சிகைக்காகப் பேட்டி கண்டவர் மூத்த இலங்கைப் பெண்படைப்பாளிகளில் ஒருவரான திருமதி பத்மா சோமகாந்தன்.**

**3. நீங்கள் ஒரு பெண்ணிய செயல்பாட்டாளராக அடையாளப்படுத்த தேவையில்லை என்று கூறுகின்றீர்கள். உங்களது படைப்புகள் பெண்ணியவாதியாக அடையாளம் காட்டுகின்றன. அதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?**

உண்மையில் எழுத்துவே எனது பெண்ணிய செயல்பாடாகவும் இருக்கின்றது. ஆனால் எழுதும் போது பெண்ணிய எழுத்துக்களை அல்லது பெண்களுக்கான எழுத்துக்களை எழுதப் போகின்றோம் என்று ஒரு நாளும் தீர்மானித்துக் கொண்டு எழுதுவதில்லை

-திருமதி. பத்மாசோமகாந்தன்

# நேர்காணல்



படிப்பகம்

www.padippakam.com

என்பதால் பெண்ணியம் எனது வரையறை இல்லை. எல்லைகளற்ற மனித நேயமே எனது விருப்பம் என அழுத்திச் சொல்ல வேண்டியிருகின்றது.

பெண்களுக்கானது மட்டுமானது எனது எழுத்து என்ற வரையறையை ஒரு படைப்பாளியாய் நிராகரிக்கின்றேன். ஒரு விமரிசகனாய் அது பெண்ணின் இன்றைய மனித இருப்பை கோருகின்றன எனச் சொல்லவும் தயாராக இருக்கின்றேன்.

**4.தற்கால இலக்கிய படைப்புகளில் பெண்ணைப் பற்றிய எழுத்துக்கள் எவ்விதம் வெளிப்படுகின்றன? அவ்விதமான எழுத்துக்களில் இருந்து உங்கள் எழுத்துக்கள் எவ்விதம் வேறுபடுகின்றன. உங்கள் எழுத்துக்களுக்கு சக பெண் படைப்புகளில் இருந்து எவ்விதமான எதிர் வினைகள் வருகின்றன. நீங்கள் அவற்றை எவ் விதமாக எதிர்கொள்கின்றீகள?**

இன்றும் மிக முக்கியமான எழுத்துக்களாகவும் , முக்கிய படைப்பாளியாகவும் இருக்கின்றவர்களிடம் கூட பெண் பற்றிய பார்வை மிக மோசமாகவே இருக்கின்றது. உதாரணமாக ஜெயமோஹன் கொற்றவையில் பெண் பாத்திர வார்ப்புகள் அவள் ஆணுக்கானவளாகவும் , அல்லது ஆணின் வக்கிரத் தனங்களுக்கு வடிகாலாக இருக்க வேண்டியவளாகவும் அந்த எழுத்துக்களும் சொல்முறைமைகளும் அல்லது அவளின் இயலாமையை முன்னிருத்தும் விதமாக இப்படியே இருந்து விடுகின்றது. அதே நேரம் இச்சமூகம் வைத்திருக்கின்ற பெண் பற்றிய புரிதலிலிருந்து விலகி, மிக இயல்பாக உறுத்தலில்லாது பெண் பற்றிய சரியான சிந்தனைகளை பார்வைகளை வைத்துப் போகின்ற கூகை, போன்ற படைப்புகளும் ரொம்ப அரிதாகவே கிடைக்கின்றன. சமீபமாக பெண் எழுதுகின்ற எழுத்துக்களிலும் அவள் உடலை மட்டுமே சிந்திக்க வைத்த பெரும் பணியை வணிக நோக்கிலான சிறு பத்திரிக்கைகளும் வளர்த்து விட்டு வருகின்றன. அதிலிருந்து விலகி சிந்திக்கும் பெண்கள் அதிக வெளிச்சமில்லாது ஆனால் வலுவாக தங்களின் எழுத்துப் பணியை ஆற்றி வருகின்றனர். கீதாஞ்சலி பிரியதசினி, அனார், வைகைச் செல்வி, தமிழச்சி தங்கப் பாண்டியன் ஆகியோர்களை அந்த வரிசையில் சொல்லல்லாம்

**தமிழக எழுத்தாளரான திலகபாமா ஒரு பெண்ணியச் சிந்தனையாளர், கவிஞர், விமர்சகர், இலக்கியப் பேச்சாளர். சிவகாசியில் வசித்துவரும் இவர் பாரதி இலக்கிய சங்கம் அமைத்து பல இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்திவருபவர். பல்வேறு நாடுகளுக்கும் இலக்கியப் பேச்சாளராகப் பயணம் செய்து வருபவர். இவரது கவிதைத் தெகுப்புகளாக சூரியனுக்குக் கிழக்கே, சூரியாள், சிறகுகளோடு அக்கினிப் பூக்களாய், கண்ணாடிப் பாதரட்சைகள், எட்டாவது பிறவி, கூர்ப்பச்சை யங்கள், கூந்தல் நதிக்கதைகள் ஆகியவை வெளியாகியுள்ளன.**

**சிறுகதைத் தொகுப்புகளாக நனைந்த நதி, மறைவாள் வீச்சு, ஆகியவையும் கழுவேற்றப்பட்ட மீன்கள் புதினமும் திசைகளின் தரிசனம் என்ற பயணக் கட்டுரையும் வெளிவந்துள்ளன.**



**5, இன்றைய சூழலில் பெண் படைப்பாளிகள் முதன்மைபடுத்தி எழுத வேண்டிய விசயம் என்னவாக இருக்க வேண்டியிருப்பதாக நம்புகின்றீர்கள்?**

தங்களது வாழ்க்கையை மட்டும் என்றில்லாது தாங்கள் வாழ்க்கையில் கண்ட தரிசனங்களை எந்த வித தயக்கமுமில்லாது எழுத முன்வரவேண்டும் அது ஏற்கனவே இருக்கின்ற வரையறைகளுக்குள் இருக்கிறதா என்று தேடித் திரிய வேண்டியதில்லை. பெண்களின் உணர்வுச் சிதைவுகள் மறக்கப் பட்டும் மறைக்கப் பட்டும் வருகின்ற இந்தச் சூழலில் அதுவே இன்றைக்கு பெண் கவிஞர்கள் கவனகப் படுத்த வேண்டிய முக்கிய விசயம் என்று நினைக்கின்றேன்

**6 தமிழில் உங்க ளுக்கு பிடித்த படைப் பாளிகள் யார்?**

லா .சா ரா, பொன்னீலன், சோ. தர்மர், திருமாவளவன், அனார், லறீனா ஹக், தமிழ் செல்வி, வைகை செல்வி, கீதாஞ்சலி, பிரியதர்ஷிணி, தமிழச்சி தங்கப் பாண்டியன், பா. வெங்கடேசன், அமிர்தம் சூர்யா, ரிஷாண் ஷெரீஃப்

உண்மையில் இப்படைப்பாளிகளின் சில படைப்புகள் எனக்கு மிகப் பிடிக்கும். பிடிக்காமல் போன படைப்புகளும் உண்டு. எனவே பிடித்தது என்பது படைப்பை அடிப்படையாகக் கொண்டதே அல்லாது படைப்பாளியை அல்ல



படிப்பகம்

www.padippakam.com




***ஈழத்து தமிழிலக்கியத்தைப் பெருமைப் படுத்தக் கூடியவகையில் பெண் படைப்பாளிகள் எண்ணிக்கையிலும் தரத்திலும் நம்மிடையே பலர் உள்ளனர்.***

**குறமகள்**



ஈழத்தின் மூத்த பெண் படைப்பாளி குறமகள் ஆவார். இயற்பெயர் வள்ளிநாயகி இராமலிங்கம். பயிற்றப்பட்ட ஆசிரியை. பட்டதாரி. 1955 இல் இவரது முதலாவது சிறுகதை 'போலிக்கௌரவம்' ஈழகேரியில் பிரசுரமானது ஈழத்தின் சஞ்சிகைகளிலும் தமிழக ஆனந்த விகடனிலும் தரமான சிறுகதைகள் எழுதியுள்ளார். 'வாழ்வைத்தேடு', 'ஆளுமைகள் அழிகின்றன', 'அவள் கொடுத்த விலை', 'புளியங்கொப்பு', 'சோடி வேட்டி' என்பன குறமகளின் நல்ல சிறுகதைகள். இவரது சிறுகதைகளில் பெண்ணியல் சம்பந்தமான கருத்துக்கள் விரவிக் காணப்படும். குறமகள் கதைகள் என்ற பெயரில் அன்னாரது சிறுகதைகளின் தொகுப்பு வெளிவந்துள்ளது. இன்று கனடாவில் உள்ளார். பெண்ணியல் ஆய்வுகள் நடாத்தியுள்ளார்.



**பத்மாசோமகாந்தன்**

ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க இன்னொரு வர் **பத்மா சோமகாந்தனாவார்**. புதுமைப் பிரியை என்ற புனைபெயரில் தமிழ் மொழி உணர்வு, இனவிடுதலை, பெண்ணியம் ஆகிய கருத்துக்களை வைத்துச் சிறுகதைகள் ஆக்கியுள்ளார். 'ஒரு தளிரும் இரு இலைகளும்,'பனங்காணி','ஒரு தீக்கோழி தலையை உயர்த்துகிறது'. 'உயரப்பறந்தாலும்'என்பன நல்ல சிறுகதைகள். 'ஆரம் பகாலத்தில் இனவுரிமை, பெண்விடுதலை என்பனவற்றில் பெரிதும் ஈடுபாடு காட்டி வந்த இவர், பிற்காலத்தில் தனது படைப்புத்தளத்தை சமூகம், மொழி, பண்பாடு, குழந்தை இலக்கியம் என விரிவு படுத்திக்கொண்டார்' என தமிழக எழுத்தாளர் திலகவதி குறிப்பிடுவார். இவரது சிறுகதைகளின் தொகுப்புக்களாக கடவுளின் பூக்கள், புதிய வார்ப்புகள் என்பன உள்ளன.

**பா. பாலேஸ்வரி**



கிழக்கிலங்கையின் பெண் எழுத் தாளர் பா. பாலேஸ்வரி. ஈழத்துச் சிறுகதைத் துறைக்குக் கணிச மான பங்களிப்பு செய்துள்ளார். பதினொரு நாவல்களையும் நூற் றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். 'அந்த நினைவு', 'இரட்டைக் குழந்தைகள்', 'தியா கம்', 'கடிதம் சிரித்தது'. 'கற்பு நிலை' என்பன சிறப்பான சிறுகதைகள்.

**பவானி**

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முதன் முதலாக பெண்ணியல் வாதத்தை முன்வைத்தவர் பவானி ஆழ்வாப்பிள்ளை ஆவார். பேராதனை சிறப்பு பட்டதாரி. 1960 களில் மிகத் துணிச்சலாக தன் சிறுகதைகள் மூலம் முன் வைத்த பெண்ணியல் சார்ந்த எண்ணங் களை எழுத்தில் வடிக்கும் பவானி, மனிதர்களின் உணர்வுகளைத் தம் சிறுகதைகளில் மரபு மீறிய கருத்துக்களோடு தந்துள்ளார். 'மன்னிப்பாரா?', 'காப்பு', 'விடிவை நோக்கி', 'சரியா தப்பா?', 'பிரார்த்தனை' என்பன பவானியின் தரமான சிறுகதைகளாகவுள்ளன. 'கடவுளரும் மனிதரும்' அவரது சிறுகதைகள் அடங்கிய தொகுதியாகும். 'மன்னிப் பாரா?' என்ற கலைச்செல்விச் சிறுகதை மூலம் எல்லாரதும் கவனத்தையும் ஈர்த்தார்.

**யாழ்நங்கை (அன்னலட்சுமி இராஜதுரை)**

1960களில் ஈழத்தின் சிறுகதைத்துறைக்கு அன்னலட்சுமி இராஜதுரை வந்தார். புனைபெயர் 'யாழ் நங்கை'. கலைச் செல்வி இவரை அறிமுகப்படுத்தியது.



ஈழத்துப் பத்திரிகைகளில் நல்ல பல சிறுகதைகளை எழுதியுள் ளார். இவரது முதற் சிறுகதை தின கரனில் பிரசுரமானது. சமுதாய ஒழுங்கீனங்கள், பண்பாட்டுச் சரிவுகள் பெண்ணிய அடக்கு முறை எனபனவற்றிற்கு எதிராக இவருடைய எழுத்துகள் உள்ளன. கலைச்செல்வி மூலம் சிறுகதைத் துறைக்கு அறிமுகமானார். இன்று இதழியலாசிரியராக விளங்குகிறார். யாழ்நங்கையின் சிறுகதைத் தொகுப் பொன்று வெளிவரில் அவரின் ஆற்றலை அறிந்து கொள்ள இளம் சந்ததியினருக்குச் சந்தர்ப்பம் வாய்க்கும்.

**செங்கை ஆழியான்**



படிப்பகம்

www.padippakam.com

## ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்



ஈழத்தின் மூத்த பெண் படைப்பாளிகளில் ஒருவர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். அவர் லண்டனில் வாழ்ந்து வருகின்றார். சிறந்த பல சிறுகதைகளையும் சில நாவல்களையும் ஆக்கியவர். ஈழத்தினதும் தமிழகத்தினதும் பல சஞ்சிகைகளில் நிறையவே எழுதியுள்ளார். மனித உரிமைக்குரல் இவரது படைப்புகளில் ஒலிக்கும். 'ஏக்கம்', 'அரைகுறை அடிமைகள்' என்பன அன்னாரின் சிறுகதைத் தொகுதிகள். 'தில்லையாற்றங்கரை', 'ஒரு கோடை விடுமுறை', 'உலகமெல்லாம் வியாபாரிகள்', 'பனிபெய்யும் இரவுகள்', 'நாளைய மனிதர்கள்', 'வசந்தம் வந்து போய்விட்டது' என்பன தரமான நாவல்கள். லண்டனில் பல்வேறு சமூகநல அமைப்புகளில் பணியாற்றுகிறார்

## குந்தவை

ஈழத்தின் ஆற்றல் வாய்ந்த பெண் படைப்பாளி குந்தவை சடாச்சர தேவி. பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி . ஆனந்த விகடனில் 'சிறுமைகண்டு பொங்குவாய்' என்ற முத்திரைக் கதையை எழுதியிருந்தார். அதன் பின்னர் எல்லாராலும் அறியப்பட்டார். யோகம் இருக்கிறது, பெயர்வு, வல்லைவெளி, திருவோடு, இணக்கம், மீட்சி, தன்மானம் என்பன தக்க சிறுகதைகள். அன்னாரது சிறுகதைகளின் தொகுப்பாக "யோகம் இருக்கிறது" உள்ளது.



## சிதம்பரபத்தினி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இன்னொரு பெண் படைப்பாளி சிதம்பரபத்தினி எனும் பத்தினியம்மா திலகநாயகம் ஆவார். சிதம்பரபத்தினி தன் சிறுகதைகளில் பல்வேறு குணவியல்புகளுடைய பெண்களை அறிமுகப்படுத்தியுள்ளார். பெண் விடுதலை, ஆண்களின் அடக்குமுறைகள் என்பன இவரின் சிறுகதைகளின் ஊடாக முன்வைக்கப்படுகின்றன. நிஜமும் நிழலும் அன்னாரது சிறுகதைத்தொகுதி. குழந்தைக் கவிதைகள் நிறைய எழுதியுள்ளார்.



## கோகிலா மகேந்திரன்

ஈழத்தின் புகழ்பெற்ற பெண் சிறுகதை, நாவலாசிரியையாக விளங்கும் கோகிலா மகேந்திரனின் 10 சிறுகதைகள், ஈழநாட்டில் வெளியாகியுள்ளன. ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் சிறுகதையின் செல்நெறியைப் புரிந்து கொண்டு எழுதப்பட்டுள்ளன. புதுயுகம் விடிகிறது, நாளைய நாங்கள், வெளிச்சத்துக்கு வருவோம் ஆகிய சிறுகதைகள் மிகச்சிறப்பான வையாகவுள்ளன. கோகிலா மகேந்திரனின் கதைகளில் பெண் விடுதலை, தலைமுறை இடைவெளி, கல்வியுலகு என்பன கருப்பொருளாக அமைந்திருக்கும். 'ஒரு சோகம் இறுகும் போது?' 'சடப்பொருள் என நினைத்தாயோ?' 'ஒலிக்காத ஓலம்' தக்க சிறுகதைகள். முரண்பாடுகளின் அறுவடை, மனிதசொருபங்கள், என்பன அவருடைய சிறுகதைத் தொகுதிகள்.



## யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

ஈழத்தின் முக்கியமான பெண் படைப்பாளி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஆவார். சிறுகதைத் துறையில் முக்கியமான படைப்பாளி. 'பொய்த்தோர், 'கரைதாண்டாத அலைகள்', 'நேசக்கரங்கள்', சோகங்களும் சுமைகளாகி முதலான நல்ல சிறுகதைகளைப் படைத்துள்ளார். ஈன்றபொழுதில், உணர்வின் நிழல்கள், கணநேர நினைவுகள் என்பன சிறுகதைத் தொகுதிகள்.

## தாமரைச்செல்வி



ஈழத்தின் கணிப்புக்குரிய பெண் படைப்பாளி தாமரைச்செல்வி. தமிழ் மக்களது சமகால அவல வாழ்க்கையின் பக்கங்களை அவரது சிறுகதைகள் சித்திரிக்கின்றன. அவரது சிறுகதைகள் ஒரு மழைக்கால இரவு என வெளிவந்துள்ளது, அவள் ஒரு சம்பவம், எங்கேயும் எப்போதும், சாம்பல்மேடு, பசி என்பன தக்க சிறுகதைகள். தாமரைச்செல்வி நாவல்களையும் குறுநாவல்களையும் எழுதியுள்ளார். பச்சைவயல் கனவு தக்கதொரு நாவல்.

## கவிதா



ஈழத்தின் பெண் படைப்பாளி கவிதா ஆவார். முதலில் நாவலாசிரியையாக அறிமுகமானார். நல்ல பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். 'யுகங்கள் கணக்கல்ல' என்பது அன்னாரின் சிறுகதைகளின் தொகுப்பு.



## தாட்சாயினி

ஈழத்தில் வீச்சுடன் சிறுகதைகள் எழுத முன்வந்த இளம் படைப்பாளிகளில் ஒருவர் தாட்சாயினி ஆவர். ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். பல பரிசில்கள் பெற்றுள்ளார். இன்று



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை நிர்வாக சேவை அதிகாரி. ஒரு மரணமும் சில மனிதர்களும் போன்ற சிறப்பான சிறுகதைகள் படைத்துள்ளார்.



**சித்ரா நாகநாதன்**

1980 களில் சிறுகதைத்துறைக்கு வந்தவர் சித்திரா நாகநாதன். துணிச்சலும் சமூகநேசிப்பும் கதை களில் காணப்படும். மருத்துவத் தாதியான அவரின் எழுத்துக் களில் மக்களின் மனக்காயங்கள் பரவிக்காணப்படும். சமகாலக் கதைகள். ஆலைக்கு எட்டிய கரைக்கோலம், தலைவிதி, விடியாத இரவுகள், முகம் இல்லாத மனிதர்கள் எள்பன நல்ல கதைகள். அன்னாரது சிறுகதைகளின் தொகுதியாக 'கிராமத்து மண்கள் சிவக்கின்றன' வெளிவந்துள்ளது. துணிச்சலான படைப்புகள்.



**சந்திரா தியாகராஜா**

1981 களில் சிறுகதைத்துறைக்குள் பிரவேசித்தவர் சந்திரா தியாக ராஜா. ஈழத்துப் பத்திரிகைகள் பல வற்றிலும் எழுதியுள்ளார். பல பரி சில்கள் பெற்றுள்ளார். சிலநேரங் களில் சில நியதிகள், மடமையைக் கொளுத்துவோம், எரியும் தளிர்கள் முதலான நல்ல சிறுகதைகளை எழுதியுள்ளார். "நிச்சயிக்கப்படாத நிச்சயங்கள்" குறுநாவல். இவருடைய சிறுகதைகள் "சில நிழல்கள்" தொகுப்பில் உள்ளன.



**சாரங்கா**

ஈழத்தின் புதிய வரவு சாரங்கா. சிறுகதைகள் பலவற்றை ஆரோக் கியமாக எழுதிய படைப்பாளி. முப் பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். ஒரு கழுத்துச் சதங்கைகள், உயிர்த் திருத்தல், பொட்டைப்புள்ள முதலான நல்ல சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறுகதைகளின் தொகுப்பாக "ஏன் பெண்ணென்று.." என்பதுள்ளது.



**கெக்கிராவை ஸஹானா**

ஈழத்தின் இளம் பெண் எழுத்தாளர் கெக்கிராவை ஸஹானா. சிறு கதைத்துறையிலும் கவிதைத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர். இருவேறு பார்வைகள், செக்கு மாடுகள், பென்சன், சந்தேகக் கோடு முதலான நல்ல சிறுகதைகளை எழுதியுள்ளார். 'ஒரு தேவதையின் கனவு' சிறுகதைகளின் தொகுப்பு.



**சந்திரா தனபாலசிங்கம்**

ஈழத்தின் கணிப்புக்குரிய பெண் படைப்பாளி. எங்கே போகி றோம்?, ஆச்சி நல்லூர்போகிறாள், கிழக்கு வெளுக்கும் முதலான தரமான சிறுகதைகளை எழுதி யுள்ளார். அவருடைய சிறுகதைகளின் தொகுப்பாக 'உருப்பெறும் உணர்வுகள்' வெளிவந்துள்ளன.

**ராணி சீதரன்**



கிழக்கிலங்கைப் பெண் படைப் பாளி ராணி சீதரன். சிறுகதை, கவிதை, கட்டுரை முதலான துறைகளில் தடம் பதித்துள்ளார். இனியார் எமக்கு, சீருடை, பிரிவு தந்த துயரம் முதலான நல்ல சிறுகதைகளை எழுதியுள்ள்ார். அன்னாரின் சிறுகதைத் தொகுதி 'மாங்கல்யம் தந்துநீயே' ஆகும்.

இவர்களைவிட மூப்பிலும் தகுதியிலும் உயர்ந்த பெண் படைப்பாளிகளுள்ளனர். மூத்த பெண் படைப்பாளி கதிராயிதேவி, ஆனந்தி, சிவானி, சிவமலர் செல்லத்துரை, சிவயோகமலர் ஜெயகுமார், சௌமினி, தமிழ்ப்பிரியா, நயீமா சித்திக், பாலரஞ்சனி சர்மா, பிரியா பாலேந்திரன், பூங்கோதை, பூரணி, மண்டூர் அசோகா,யோகா பாலசந்திரன் ,சந்திரகாந்தா முருகானந்தன், யோகேஸவரி கணேசலிங்கம். ரூபராணியோசப், அருண் வியராணி, சங்கீதா, கார்த்திகாயினி சுபேஸ். வசந்தி தயாபரன், பவானி சிவகுமாரன், ஆதிலட்சுமி சிவகுமார் , பிரமிளா பார்த்தீபன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்



**சந்திரகாந்தா முருகானந்தன்**



**கார்த்திகாயினி சுபேஸ்**



**பிரமிளா பார்த்திபன்**



**பவானி சிவகுமாரன்**



படிப்பகம்

www.padippakam.com

# இருப்பைத் தேடி...

-லோககீதா கணேசலிங்கம்

அவன் சிந்தையில் இப்பொழுது வியாபித்திருப்பதெல்லாம் எப்போது திரும்பிப் போவோமென்ற எண்ணம்தான். முப்பது நாட்கள் போதாது என்று வரும்போது நினைத்தவனுக்கு வந்த ஒரு கிழமையிலேயே எல்லாம் வெறுத்து ஏமாற்றப் பெருவெளியில் நிற்பது போல உணர்ந்தான்.

பண்பாடு கட்டிக் காக்கப்பட்டு பண்பாட்டுக்காகவே வாழ்ந்த மக்களின் பூமியில் தினமும் இடைவிடாது நடக்கும் வன்முறைகளால் நிரம்பும் பத்திரிகைகள், வீதிகளில் பெண்பிள்ளைகள் கூட அவலட்சணமான உடைகளில் இவர்களை சீர்படுத்தி அனுப்புவதற்கு யாருமே இல்லையா? ஏன் இவர்களுக்கே தெரியவில்லையா? தம் உடைகளின் அவலட்சணங்கள்.

பேருந்தில்..........அவற்றின் நாகரிகம் சொல்லவே தேவையில்லை. அந்தரங்கமெல்லாம் ஊர்வலமாய் அரங்கேறும்.

ஏன்? சுற்றுலாத் துறையின் முக்கிய ஸ்தலங்களாக மாறிவிட்ட வழிபாட்டுத் தலங்கள். இங்கு ஆன்மா லயப்படுமா? அல்லலுறுமா? ச்சீ.......எனது தாய் நாடா இந்நிலையில்? இவற்றையெல்லாம் பார்க்கவா எனது குழந்தைகளையும் கூட்டி வந்தேன்.

தலையைச் சாய்த்து ஜன்னலோரம் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அருகில் இருந்த வயதானவளின் இருமல் திரும்பிப் பார்க்க வைத்தது. அவளின் தொண்டையில் சளி அடைத்திருக்க வேண்டும். ஜன்னல் கதவைத் தள்ளி துப்புவதற்கு எத்தனிக்கிறாள்.

“அம்மா! நீங்க இங்கால உட்காருங்க, நான் மாறி இருக்கிறன்”

தலையை அசைத்து எழும்பினாள்.

சளியைக் காறித் துப்பி விட்டு, “தம்பி வெளிநாடோ?” அவன் உடல்கட்டு அவளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்.

“ஓமோம் அம்மா?”

“நான் உரும்பிராய், வெளிநாடு எங்க கனடாவோ? அவள் கூறி முடிப்பதற்குள்

“இல்ல பிரான்ஸ். அம்மாவுக்கு ஆரும் பிரான்ஸில இருக்கினமோ?”

**புதிய தலைமுறைப் படைப்பாளிகள் அறிமுகம்-52**



யாழ்ப்பாணம் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி லோககீதா கணேசலிங்கம் தற்போது திருநெல்வேலியில் வசித்து வருகிறார். சிறுகதை, சிறுவர்பாடல், இலக்கியக் கட்டுரை ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரது முதற்படைப்பு ஜீவநதி 2009 புரட்டாதி -ஐப்பசி இதழில் வெளியாகியது. றாதிகா, கீதா, கணேஸ், நிவேதா ஆகிய புனைபெயர்களில் எழுதிவரும் இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சிறப்புக்கலை பயின்றவர்.

ஓமோம் தம்பி! எங்கட ஆக்கள் கனபேர் பிரான்சிலதான். மற்றப் பிள்ளையள் கனடாவிலும் லண்டனிலும் இருக்கினம். பெருமையாய் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் கேட்காமலேயே.

“என்ர தம்பி முதல் போனவர். அவர் போய் எங்கட வீட்டுக்காறர எடுத்தவர், பிறகென்ன மூத்தவனும் வளந்திற்றான் இஞ்ச வைச்சிருக்கவும் ஏலாது அனுப்பீற்றன்.”

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனுக்கு சங்க இலக்கியம் ஒன்றில் எப்போதோ வாசித்தது நினைவில் தட்டியது.

சங்கப் போருக்கு தன் கணவனை அனுப்பி சகோதரனை அனுப்பி, அவர்களின் இழப்பையும் பொருட்படுத்தாது தன் ஒரே மகனையும் வேல் கொடுத்து அனுப்பி வைத்த வீரத்தாயின் வம்சத்தவர்களா இவர்கள்?

இவள் மட்டுமா? எத்தனை தாய்மார் இன்று இப்படி வெளிநாட்டு மோகத்தில் தனக்குள் எண்ணிப் பெருமூச்சு விட்டவன்.

“மகனோட பெயர்?”



படிப்பகம்

www.padippakam.com

"கார்த்தி"

"ஓ.......கார்த்தியா?"

"தம்பிக்கும் தெரியும் போல....."

"தமிழ்ப் பெடியள் தானே சும்மா தெரிஞ்சிருக்கும் கதைச்சுப் பழகிறதுக்கு எங்க நேரம்?"

கார்த்தியை நன்றாகத் தெரியும் என்று சொல்லிக் கொள்வதில் அவனுக்கு உடன்பாடில்லாததால் மெதுவாக மழுப்பி விட்டான்.

"பேருந்து அல்லைப் பிட்டியும் தாண்டி பண்ணை றோட்டிலும் ஏறியாயிற்று இன்னும் தாலாட்டு குறைந்தபாடில்லை. இந்த லட்சணத்தில் குத்துப் பாட்டு வேற வேண்டிக்கிடக்கு" தனக்குள் எண்ணிக் கொண்டு மெதுவாய்த் தலை சாய்த்தான் கோகுலன். அவனுள் ஆயிரம் ஆயிரம் எண்ண அலைகள்.

எல்லாம் தன் தாய் நாட்டைப் பற்றியும் உறவுகளைப் பற்றியுமே ஓடிக் கொண்டிருந்தன. தனது பிள்ளைகள் வெளிநாட்டில் வளர்ந்தாலும் தமது பண்பாட்டைக் குலைக்காமல் தமிழ்ப் பிள்ளைகளாகவே தனது பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும். இங்குள்ள பழக்க வழக்கம் கலைகள் என எல்லாவற்றையும் அவர்களுக்கு நேரே காட்ட வேண்டும். ஆலயங்களின் சிறப்புக்கள் சொற்பொழிவுகள், பண்ணிசைகள் என எல்லாவற்றுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும் முப்பது நாட்கள் எப்படிப் போதும்?

"நீங்கள் ஸ்ரீலங்கா போனா திரும்பி வர விரும்பமாட்டீங்கள் போய்ப் பார்த்தாப் பிறகு சொல்லுங்களன் எப்படியென்று" இப்படித்தான் அவன் அடிக்கடி கூறுவதுண்டு. ஆனால் இங்கு.......... அவற்றையெல்லாம் தேடி அலையவேண்டிய நிலை. எங்கும் வெளிநாட்டு மோகம்.

"தந்தையால் வன்புணர்வுக்குட்படும் மகளும் பாட்டனாரால் பாலியல் வல்லுறவுக்குள்ளான சிறுமியும் அவனால் நினைத்துப் பார்க்கவே முடியாத அசிங்கமான நிகழ்வுகள். இதுதான் அபிவிருத்தியா? முன்னேற்றமா? வேண்டாம். அவன் மனம் தனது நாடு இதுதான் என ஏற்றுக் கொள்வதற்குப் பிடிவாதம் பிடிக்கிறது. எப்போதும் தாய் நாட்டு நினைவுகளுடன் வாழ்ந்தும் தன் நாட்டைக் கற்புடைய பெண்ணாகவுமே பார்த்துப் பழகியவனுக்கு இருபத்தைந்து வருடங்களின் பின்னான வருகை எல்லாவற்றையும் எட்டாக் கனியாக்கியது.

கோகுலனின் வளர்ப்பு வெளிநாடு போயும் மாறாது, எப்போதும் எல்லோரையும் இரக்கமாகவே பார்க்கும் இளகிய மனமும் அவன் தன்னைப் போல் யாரும் கஸ்ரப்படக் கூடாது என்ற எண்ணம் இரத்தத்தில் கலந்து விட்டது.

தாய் பார்வதி பதினைந்து வயதிலேயே அவனைக் கூலி வேலைக்காக அனுப்பியவள். தோட்டம் கொத்துதல், வேலியடைப்பு, முட்டாள் வேலை என அவனும் படித்துக் கொண்டே வேலணை வீடுகளில் வேலை செய்தான்.

மூன்று பெண் சகோதரிகள், தந்தையின் பொறுப்பற்ற தன்மை. இப்படியே விட்டால் இவனும் காவாலி ஆகிவிடுவான் என்ற எண்ணம் அடிக்கடி பார்வதியின் மனதில் உந்தித் தள்ள அவனை ஒரு நிமிடமும் ஓய்வெடுக்க விடமாட்டாள். அவனுக்கு இருபது வயதானபோது தன் தூரத்து உறவுக்கார மாணிக்கத்தின் உதவியுடன் இத்தாலிக்கு அனுப்பி வைத்தாள். பிறகென்ன? வீட்டுக்கொரு பிள்ளை வெளிநாட்டில் அவள் வீட்டிலும் அமுலாகியது. அவன் இத்தாலி சென்று மூன்று வருடங்களுக்குள் மூத்தவள் பவானிக்கு திருமணமும் செய்து அவன் வெளிநாடு போவதற்காக வாங்கிய கடனும் கொடுத்து, பார்வதி நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள். ஆனாலும் அவளால் தொடர்ந்து அப்படியே இருக்க முடியவில்லை.

"கோகுலன் தன் பொறுப்பு முடிந்ததென்று எண்ணி விடுவானோ என்ற ஏக்கம் பார்வதியைப் பற்றிக் கொள்ளும் போதெல்லாம்,

"தம்பி! இனிமேலும் இப்படியே இந்த வீட்டில இருக்கேலாது. பொம்பிளப் பிள்ளையள் வைச்சிருக்கப் பயம், யாழ்ப்பாணப் பக்கம் வீடு பாக்கிறம். வேலணையில் போக்குவரத்தில இருந்து எல்லாமே பிரச்சனை. அங்கால போயிற்றா கொக்காளுக்கும் உதவியாயிருக்கும். இனியென்ன அவள் தாரணிக்கும் வயசு வந்திட்டுது. அக்காள மாதிரி வைச்சுக் கொண்டு இருக்கேலாது.

உனக்குத் தெரியும் தானே தம்பி இங்கத்த நிலமையள். வெளிநாட்டுக் காசுகளால சீதனமும் ஏறிக் கொண்டு போகுது. அங்க ரெண்டு மூண்டு வேல செய்யலாமாம் கொஞ்சக் காலத்துக்கு கஸ்ரப்பட்டால் பிறகென்ன? நாங்க தானே சந்தோசமா இருக்கப் போறம்........" என்று தொடரும் கடிதங்களில் சந்தோச வாழ்க்கையைப் பணத்தில் தேடும் தாயின் முகம் தெரியும்.

அம்மாவின் கடிதங்கள் என்று பாசத்தோடு பிரிக்க மறுக்கும் கைகள். சிலவேளை வேலையலுப்பில் வாசிக்கப்படாமலே குப்பைக்குள் போகவும் தப்புவதில்லை.

"கோபப்பட்டு என்ன என்ன செய்வது? மூன்று பெண்களோடு கூடப் பிறந்த துரதிஸ்டம்" கோகுலன் தன்னைத் தானே தேற்றிக் கொள்வான்.

இத்தாலியிலிருந்து பிரான்சுக்குப் போனவன் அங்கு கால்வாய் கழுவுவதிலிருந்து கால் துடைப்பு எனப் பல வேலைகளைச் செய்தும் கடைசியில் தஞ்சம் கிடைத்தது றொய்லற் கழுவும் வேலையில் தான். மீதி உள்ள இரண்டு சகோதரிகளுக்கும் தாலி ஏறுவதற்காக என்ன வேலை செய்தும் காசு அனுப்ப வேண்டும்.

வீடு வாங்க வேண்டும் என்ற அவள் கனவும் ஆறு மாதங்களில் நிறைவேற பார்வதி தன் பிள்ளைகளுடன் வேலணையிலிருந்து அத்தியடியில் மாளிகை வீட்டிற்கு மாற்றலாகினாள். அன்றிலிருந்து அவளிலும் மாற்றம். அவளின் செல்வந்த நினைப்பு மற்றவர்களை ஏளனமாகப் பார்க்க வைத்தது. எல்லோரையும்



படிப்பகம்

www.padippakam.com

வளர்த்து ஆளாக்கி விட்ட அந்த வேலணைக் கிராமத்து வீடு பராமரிப்புகளற்று பற்றையாகியது.

பார்வதியைப் பொறுத்தவரை மகன் பிரான்ஸில் பெரிய ஒவ்வீஸில் வேலை செய்கிறான். தனக்குள் நினைத்துப் பெருமிதப்படுவதை தன்னோடு ஒத்த பெண்களுக்கும் பெருமையாய்ச் சொல்லிக் கொள்வாள்.

இனியென்ன? அவளைப் பொறுத்தவரை மாப்பிள்ளை வீடு தேடி வரும் காலம். தாரணிக்குக் கனடா மாப்பிள்ளையும் அடுத்தவள் வாசுகி லண்டனுக்கும் அடுத்தடுத்த வருடங்களில் ஏற்றுமதியாகினர். இவர்களுக்கெல்லாம் வாழ்க்கை கொடுத்த பிறகுதான் பிரான்ஸிலேயே வாசுகியைத் தன் துணையாக்கிக் கொண்டான்.

“பார்வதிக்கென்ன மகன் பிரான்ஸ் போனதே ஏதோ வெள்ளி திசை போல. எப்படிக் கஸ்ரப்பட்டுக் கூலி வேலை செய்தவள் இண்டைக்கு வீட்டில கூலிக்கு வேலயாள். ஆரால ஏலும்? ஏதோ புருசன்தான் பொறுப்பில்லாம நடந்தாலும் ஒரு பிள்ளையால குடும்பத்தையே முன்னேற்றீற்றாளே” அயல் வீட்டுக்கார லக்சுமி கூறியதைக் கேட்ட பாக்கியம் அக்கா,

“ஓமடியப்பா அவள் சிங்கி ஆரால இப்படிச் சாதிக்கேலும்? மூண்டு பிள்ளயளின்ர வெளி நாட்டுக் காசையும் என்ன செய்யிறது? சொந்தங்களுக்குத்தான் குடுக்காட்டியும் அந்த வேலகாரப் பிள்ளைக் காவது சுவறட்டும்” அவள் கூறி முடிப்பதற்குள்,

“அவள் எங்க பாக்கியம் அக்கா சம்பளம் குடுக்கிறது. அவளின்ர சீலை சட்டையளும் குடுத்து சாப்பாட்டையும் குடுத்து விடுவாளாம் சும்மா கைச்செலவுக் கெண்டு குடுக்கிறதுதானாம்.

“அவள்தானே காத்தால வந்து வீடு கூட்டிறதில இருந்து இரவுச் சாப்பாடு வரைக்கும். இவவுக்கும் கனக்க வருத்தங்கள் போல இல்லாட்டி மனுசி அதுகள வீட்டுக்கும் அடுக்காது.” பாக்கியம் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி பாக்கையும் வைத்து மடித்துக் கொண்டே கூறினாள்.

“எல்லாப் பொறுப்புகளும் முடிஞ்சாப் பிறகுதான் மகனப் பார்க்கோணும் என்ற ஆசை வந்திருக்குப் போல”



பார்வதியின் மகன் இருபத்தைந்து வருடங்களின் பின் நாடு திரும்புவது எங்கும் காற்றாய்ப் பரவியது. பார்வதி வீட்டில் கோகுலன் குடும்பத்தை வரவேற்கும் பணிகள் துரிதமாக இடம் பெற்றன. வேலைக்காரி தாமரையின் கணவனும் சேர்ந்து வீட்டின் வெளிவேலைகளையும் செய்து புற்களை அழகாக வெட்டி வீட்டுத் தோட்டத்தையும் அழகுபடுத்தினான். எதிலும் திருத்தமாகவே தன் வேலையைச் செய்தவனிடத்தில் பார்வதிக்கும் ஒரு நல்லபிப்பிராயம். அவனுக்கான பதவியுயர்வாக நினைத்தாளோ என்னவோ, வீட்டின் பின்னாலுள்ள ரொய்லற்றை அவன் பொறுப்பில் விடலாமென எண்ணினாள்.

ஒரு கிழமைக்கு முன்புதான் முனிசிபல் கவுன்சிலால் குப்பை அள்ள வரும் ஒருத்தனைக் கேட்டு அவன் ஆயிரம் ரூபாய் கேட்க பார்வதியின் கைகள் கொடுக்க மறுத்தன.

இப்போது, தாமரையின் கணவன் ராசன். அவளைப் போலவே அவனும் செலவு இல்லாது செய்து தருவான் கொஞ்சக் காசை மீதப்படுத்தும் எண்ணம்.

“ராசன் உன்னுடைய வேலையெல்லாம் நீற்தானே இதையும் ஒருக்காப் பார்த்துத் துப்பரவாக்கி விடுறது உன்னுடைய பொறுப்புத் தான்.” அவனின் உச்சி குளிரக் கூறியவள் அவன் கைக்குள் ஒரு சுருளையும் திணித்தாள்.

அவள் புகழாரத்தில் அவன் பற்கள் தாமாகவே பளிச்சிடுகின்றன. அப்பால் சென்று சுருட்டப்பட்டிருந்த தாளை விரிக்கிறான். வெறுமையாய் அவன் மனம். காவிப்பற்களை, சுழித்த உதடுகள் மூடுகின்றன. வெறும் இரட்டை நூறு ரூபாய்த் தாள்கள்தான். எப்படி மறுப்பது?

சுற்றி நின்ற புற்களை வெட்டி ஒன்றாக ஒதுக்கியவன் நாளை வருவதாகக் கூறிச் சென்றான். சென்றவன் சென்றதுதான். வருவதாகத் தெரியவில்லை.

“தாமரை! எங்க இண்டைக்கும் ஆள் வரான் போல. ஒருக்கால் வரக்காட்டி விடு” இது மூன்றாம் நாள் அழைப்பு.



படிப்பகம்

www.padippakam.com

கோகுலன் குடும்பம் பிரான்ஸில் இருந்து வந்திறங்கியும் ராசன் வரவில்லை.

தாமரையின் உறவுக்காரரின் செத்த வீடாம் செலவு முடித்து வருவதாகச் சொல்லி ஆள் அனுப்பியிருந்தாள் தாமரை. இப்போது தாமரையும் இல்லாதது பார்வதியின் தலைமேல் எல்லா வேலைகளும்.

“இந்த ரொய்லெற்றத் துப்பரவாக்கிக் கழுவுவம் என்றால் அவனும் என்னப் பேக்காட்டிக் கொண்டு திரியிறான். இனி இது வழிய ஆரைப் பிடிக்கிறது?”

தாய் பார்வதி பாத்திரங்களைக் கழுவியவாறு புலம்பிய வார்த்தைகளைக் கேட்டு,

“அம்மா இது நாங்களே கழுவி விடலாம் இதுக்குப் போய் ஒரு ஆளக் கூப்பிட்டு இப்ப நான் வந்தே ஒரு கிழமையாச்சு அவன் வரேல்ல, இந்தக் காலத்திலயும் ஆரும் இந்த வேலையளுக்கு வருவினமே?”

“தம்பி அவன் செய்வானப்பா வெறியில செய்யிறவங்களுக்கு அந்த அரிகண்டங்கள் தெரியாது. நீ போய் அதுக்க நாள் முழுக்கக் கிடந்திற்று என்ன செய்யப் போறாய்? பரிசு கெட்ட கதை, வெளிநாட்டில பெரிய ஒவ்வீசில வேல செய்யிறவன் இங்க வந்து ரொய்லற் கழுவிறானெண்டு. இப்பென்ன அவசரமே ராசன் வந்தாப் போல வேலையோட வேலையா செய்திருவம் எண்டு பார்த்தன். அவன் என்ன மடக்கீற்றான். இனி எழுநூறு எண்ணூறு என்று குடுக்க வேணும்.”

தாயின் ஆடம்பரமும் ஏழைகளை அடிமைகளாய் வைத்து வேலை வாங்குவதும் வெளிநாடுகளில் தமிழர்களை அடிமைகளாக நடத்தும் வெள்ளைக்காரர்களைப் பார்க்கும் போது ஏற்படும் வெறுப்பும் கோபமும் கலந்து தாயைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

“அம்மா! நீங்களும் அந்த நாளேல கஞ்சி குடிச்சுத்தான் சீவிச்சனீங்கள். நீங்களே எத்தின வீடுகளில வேலைக்குப் போயிருப்பீங்க. இப்ப ரொய்லற் கழுவுறதுக்கு ஏலாமல் அவன்தான் வரவேணும் எண்டு. அந்த நாளேல விவரம் தெரியாத வயசில எங்கள உரிமையோட ஆட்டிப் படைச்சியள். எங்களுக்கும் பொறுப்பு இருந்ததுதான் இல்லையெண்டில்ல. அவன்ர மனுசி விடுவாளே இப்படியான வேலையளுக்கு? அவங்களுக்கு உங்கட காசெல்லாம் பெரிசில்லை. நீங்கதான் வெளிநாட்டுக் காசக் கண்ட உடன நடக்கத் தெரியாம நடக்கிறியள்.

“சரிவிடு இதைப் பிறகு பாப்பம். இண்டைக்கு ஒருக்கா நல்லூருக்குப் போயிற்று வாமோனே, நேத்தியும் ஒப்பேத்தக் கிடக்குது. இண்டைக்கு பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு போயிற்று வாவன்.”

அவனை ஒருவாறு சமாளித்துத் தன் நேர்த்தியைச் சொல்ல எத்தனிக்க,

“நான் ஒருக்கா வேலணை வீடு போய்ப் பார்க்க வேணும். என்னோட வேல செய்யிறவன் ஒருத்தனையும் சந்திக்க வேணும். இண்டைக்கு வாற என்று போன் பண்ணீற்றன்.”

பார்வதியால் மீறிக் கதைக்க முடியவில்லை.

“சரிமோன வெள்ளிக்கிழமை கோயில் அலுவலப் பார்ப்பம்.” இனியும் மகன் தனக்கு அடங்கியிருப்பவன் அல்ல என்பதை உணர்ந்து விலகிக் கொண்டாள்.

கோகுலன் வேலணைக்குச் சென்று திரும்பி வரும் போதுதான் மாலையில் அவன் கண்ட காட்சிகள். பேருந்தில் கார்த்தியின் தாயின் சந்திப்பும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் எவ்வளவோ முன்னேறியிருந்தாலும் பண்ணைப் பாலத்தைத் தாண்டிய ஊர்கள் வெறும் காணிகளாய் இப்போதும் போரின் நினைவுச் சின்னங்களாகக் காட்சி அளித்தன. வெளிநாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் தீவு மக்கள் ஏன் இவற்றைக் கவனிப்பதில்லை? வீடுகள் மனித நடமாட்டமின்றி கிடக்கின்றது. ஆங்காங்கே ஒரிரு வீடுகளைத் தவிர. அப்படித்தான் கோகுலன் வீடும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

எங்கட சனங்களுக்கு வெளிநாட்டுக் காசென்றால் ஏதோ சொர்க்கம் என்ற நினைப்பு. இல்லாட்டி அங்க நாங்க கக்கூசு கழுவி அனுப்பிற டொலரக் கண்டதும் இஞ்ச தங்கட கக்கூசுகள் கழுவுறதுக்கு ஆள்பிடிச்சும், கோயில்களுக்குப் பவுண் கணக்கில நேத்தியும் வைக்குங்களே? நேத்தியெண்டு சொல்லி ஊருக்குள்ள பெருமை எடுக்கிறது தானே. லட்சுமியின்ர மகன் நல்லூரானுக்கு ரெண்டு பவுண் செயின் குடுத்ததாமெண்டு”

தன் தாயிலிருந்து எல்லோர் மீதிலும் வெறுப்பு. சொந்த ஊரைப் புறக்கணித்து ஆடம்பரமான வாழ்க்கை. அங்க நாங்கள் சாப்பாட்டுக் காசையும் மிச்சம் பிடிச்சு அனுப்புறதும் மாடி வீடு கட்டிறதுக்கு அகதி முகாமில இருந்து மாடா உழைக்கிறதும், எங்கட நிலம இதுகளுக்கு விளங்கவே போகுது?

இவையெல்லாவற்றினதும் பிரதிபலனாகத்தான் பிரான்சுக்குத் திரும்பிப் போக வேண்டும் என்ற நினைப்பு கோகுலனுக்கு. யாழ்ப்பாணத்தில் இறங்கியவன் வீடு செல்லும் பேருந்தில் ஏறினான். பத்து நிமிட ஓட்டம்.

வீட்டு வாசலில் அவன் மனைவி பிள்ளைகளுடன் பார்வதியும் காத்திருக்க,

“அப்பா எங்களக் கனக்க இடம் கூட்டிக் கொண்டு போய்க் காட்டுறனென்று சொல்லீற்று இங்க வந்து தானே போயிற்று வாறார்.”

மூத்த மகன் தமிழவன் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியும் ஏதும் பதில் சொல்லாது,

“வாசுகி!” என்ற அவன் அழைப்பால் அவளைத் தொடர்ந்து தாய் லட்சுமியும் வர இண்டைக்கு நான் எங்கட ‘வேலணை சென்றலுக்குப்’ போய்ப் பிறின்சிப்பலோட கதைச்சனான். வீடுகளில் இருந்து படிக்கிறதுக்கு வசதியள் இல்லாத பிள்ளையளுக்கு கொஸ்ரல் அரேன்ஜ் பண்ணப் போகினமாம். இப்பவும் எத்தின வீடுகளில கரண்ட் இல்லாம விளக்கில படிக்கிதுகள் பிள்ளையள். கொஸ்ரல் பிள்ளையளின்ர படிப்புச் செலவுக்குக் காசு தாற என்று சொல்லீற்று வந்தனான்.”



படிப்பகம்

www.padippakam.com

அவன் முடிவுகள் எப்போதும் சரியாகவே இருக்கும் என்பதை வாசுகி உணர்ந்து ஆமோதித்தாலும் பார்வதிக்கு இதில் உடன் பாடில்லை.

"தம்பி இந்தக் கோயில்களுக்கு நேத்தியள் செய்ய வேணும் அதுகள விட்டிட்டு அங்க போய் ஸ்கூலுக்குக் காசு குடுக்கப் போறன் என்கிறாய் அதுக்கு அரசாங்கம் செய்யும் தானே. ஊரில இருக்கிற சனங்களும் வெளிநாட்டு வசதி இல்லாமல் இல்ல."

"அம்மா! அது நான் படிச்ச பள்ளிக் கூடம். நானும் உதவி செய்யோணும். மற்றவன் செய்வான் எண்டு விலகி இருந்துதான் இண்டைக்கு இப்படி ஒருத்தரும் முன்னேறாமல் ஊரே காடாக் கிடக்கிது. நாங்களெல்லாம் சுயநலக்காரர்தானே. இனி வளர்ற பிள்ளையளுக்காகவென்றாலும் எங்கள நாங்க மாத்தி முன்மாதிரியா இருக்க வேணும். எங்கட நாட்டில படிச்சு சொந்தக் காலில நிற்கப்பழகி, ஊரை முன்னேற்றுறதுக்கு உதவி செய்யோணும். இது ஒவ்வொருத்தனுக்கும் கட்டாய கடமை."

"நீ என்னத்தைச் செய்தாலும் அந்த நல்லூரானுக்கும் நைனாதீவுக்கும் ரெண்டு பவுண் நேத்தி அதுகள ஒப்பேத்திப் போடவேணும்." அவள் சொல்லிக்கொண்டு போக அவன் செவிகளால் கேட்க முடியவில்லை.

"என்ன? பவுண் விக்கிற விலையில கடவுளுக்குக் கொண்டு போய்க் கொட்டி என்னத்தைச் செய்யப் போறீங்கள்? கடவுள் உங்களிட்ட அந்தளவுக்கு எதிர்பாக்கேல்ல. கடவுளுக்குத் தங்க நகையும் ஆடம்பரத் திருமண மண்டபங்களும் சுற்றுலா விடுதிகளும்தான் குறையில்லாமல் கட்டிக் கிடக்கு."

அவன் முழங்கிக் கொண்டிருக்கவே முற்றத்தில் ராசன்.

"அம்மா ரொய்லற் கழுவ வேணுமாம் வரச் சொல்லி ஆள் அனுப்பினவ"

"என்ன ராசன் வீடு தேடி வரவேணும் போல அந்த ரொய்லற்றக் கழுவ வேணும் எண்டு எவ்வளவு நாள் சொல்லி" பார்வதியின் அதிகாரக் குரல் கேட்டு அவன் குறுகிப் போய்,

"அம்மா......... அப்பிடியெல்லாம் இல்ல"

"சரி சரி இப்ப வந்தத்தோட அதை ஒருக்கால் பாத்திற்றுப் போ."

அவன் தலையை ஆட்டி காவிப் பற்களால் இழித்தான், மன்னிப்புக் கேட்கும் தோரணையில்.

ஜீன்ஸ் கால்களை மடித்து ஆயத்தங்களோடு சென்றவனால் மேற்கொண்டு நகரமுடியவில்லை.

"என்ன ராசன் அப்பிடியே நிண்டிட்டாய்?..."

அவளும் நகர்ந்து போனபோதுதான் உள்ளே சுத்தம் செய்து கொண்டு நின்ற கோகுலன் அவள் கண்ணிலும் தென்பட்டான்.



அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த இராயப்பு திருத்துவராசா தென்மராட்சி வடமட்டுவிலில் 21-3-1951ல் பிறந்தவர். கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரால் 2009ல் பரு-பிரதேச கலாசாரகீதம் இயற்றப்பட்டது. 2009 கல்வி அமைச்சின் கட்டுரைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். பிரதேசம், மாவட்டம் சார்ந்த பல்வேறு போட்டிகளிலும் பரிசில்கள் பெற்றுள்ளார். 28-01-2012ல் பரு-கலாசாரப்பேரவையால் **கலைப்பரிதி** என்னும் உயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

# புதுமையான மரண ஊர்வலம் - கே.ஆர். திருத்துவராஜா

நாற்பதுகளில்
வண்டில் சக்கரங்களால்
புழுதி மேலெழுப்பிச் செல்லும்
குறுக்கு ஒழுங்கையில்
மணல் அள்ளி விளையாடிய காலமது
இன்று...
கற்கள் இடப்பட்டு
"வைத்திய சாலை வீதி"
என்னும் பெயர்தாங்கிய பெருமையோடு
சோபையிழந்து நிற்கின்றது
வைத்தியசாலை அதிபரின் மறைவு!
டாக்டர் ஒருவரின் தலைமையில்
அஞ்சலி உரைகள் தொடர்ந்தன
பாடசாலை அதிபர்...
பொது நிறுவன தலைவர்..
செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி...
மதகுருமார், நகரபிதா போன்றோரின்
நீட்சியான அஞ்சலியுரைகளில்
அமரரின் ஆரோக்கியமான பணிகள்
பேசப்பட்டன.
வைத்தியராய் ஜே.பியுமாய்
கரம் கொடுத்துதவுகின்ற
சமூகசேவகனாய்
உலவிய பெருமகனார்
இறுதிப்பயணத்திற்குத் தயாரானார்
ஒன்றித்த அழுகைக் குரல்களும்
மாடிவீட்டினைத் தொட்டுத் தெறித்தது.
அன்னாரை சுமந்து செல்ல
வாயிலில் வாகனமும் காத்து நின்றது
வைத்தியரைத் தோள்மீது சுமந்தோர்
வீதிக்கு வந்தனர்
இடுகாடு சற்றுத் தொலை தூரம்தான்,
ஊர்வலம் நகர்ந்து செல்ல
திரளான மக்களின் பின்னே
வாகனமும் வெறுமையாய் ஊர்ந்தது.
பலதோள்களில் தாங்கிய பேளை
கல்லறையில் வைக்கப்பட்டு
மண்ணோடு சங்கமமானது..
புதுமையான மரணஊர்வலமாய்
மறைந்த வைத்தியரின் நினைவோடு
வாகனம் பிரதான வீதியால்
தரிப்பிடம் நோக்கி சென்றது



படிப்பகம்

www.padippakam.com

## மார்ச் 8 – மகளிர் தினம்

# ஒற்றைப் பரிமாண ஆணாதிக்க வக்கிரங்களே பெண்களுக்கெதிரான வன்முறைக்கான காரணம்

-யுகாயினி

இன்று நாளுக்கு நாள் பெண்களுக்கெதிரானதும், சிறுவர்களுக்கு எதிரானதுமான வன்முறைகள் அதிகரித்து வருவதை பத்திரிகைச் செய்திகளில் தரிசிக்கின்றோம். பெண்ணியம் முன்னேற்றப் பாதையில் தன் இலக்குகளை நோக்கி நேரிய பயணத்தை மேற்கொள்வதாகவும், பெண்ணுரி மைகள் மெல்ல கிடைத்து வருவதாகவும் கூறிக்கொள்ளும் இன்றைய புத்தாயிரம் ஆண்டில்தான் இந்த கொடுமைகள் இன்னும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. பெண் என்பவள் சக மானுடப் பிறவி என்ற கருத்தோட்டம் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளப் படாமையும், பெண் பற்றிய ஒற்றைப்பரிமாண ஆணாதிக்கப் பார்வையும் பாரம்பரியமாக இன்னும் தொடர்ந்து வருவதைப் புறந்தள்ள முடியாமைதான் இதற்குக் காரணம். ஆண்களின் பார்வையில் பெண் என்றதும் அவளது உடல் தான் முதன்மையாகத் தோன்றுகின்ற அவலநிலை இன்னும் தொடரவே செய்கிறது. பெண் என்றதும் பெண் எவ்வளவு படித்தவளாக, ஆற்றல் செயற்திறன் மிக்கவளாக இருப்பினும் ஆணாதிக்கப் பார்வையில் அவளது உடற் தோற்றத்தின் சிந்தனை, ஏனைய அவளது திறமைகளைப் பின் தள்ளிவிடுவதோடு, பெண் பற்றிய மனிதநேயப் பார்வையும் குறுகிவிடுகிறது.

ஆண் பெண் இருவரும் பரஸ்பரம் ஒருவரில் மற்றவர் சார்ந்து வாழ்பவர்கள். ஒரு பெண்ணின் வாழ்வுக்கு ஓர் ஆண் எவ்வளவு முக்கியமோ, அதேயளவு ஆணின் வாழ்வுக்கும் அவள் முக்கியம். நிலைமை இவ்வாறு இருக்க பால் நிலை சமத்துவமற்று ஆண் பெண்ணைவிட மேலாதிக்கமானவனாக நினைத்துக் கொள்வது எவ்வளவு அபத்தமானது! அதிலும் பெண்ணைத் தனது சொத்துடமையாக ஆண் நினைக்கிறான். தனது தேவைக்கான ஒருத்தியாக மட்டும் நினைக்கிறான். பாலியல் தேவை கூட இருபாலாருக்கும் அவசியமான ஒன்றென ஆண் நினைப்பதில்லை. தான் இன்பம் அனுபவிப்பதற்கான ஒரு சாதனமாகவே பெண்ணை ஆழ்மனத்திலாவது நினைக்கின்ற நிலையில் இன்னமும் பூரண மாற்றம் ஏற்படவில்லை. இதனால் தான் தமது உணர்வுகளை முதன்மைபடுத்தும் ஆண் பெண்ணின் உணர்வுகளுக்கு தடை போடுகின்றான். அதாவது இயல்பாக இருக்கின்ற உணர்வுகளைக் கூட கொச்சைப்படுத்தி தனக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என வரையறை செய்துள்ளான். இந்த ஒற்றைப் பரிமாண ஆணாதிக்க வக்கிரம்தான் பெண்களுக்கெதிரான எல்லாவிதமான வன்முறைகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் தூபமிடுகின்றது என்றால் அது மிகையாகாது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் மிகவும் கொடூரமானது பாலியல் வன்முறைதான். இது முதலாவதாக பெண்ணின் ஆழ்மன உணர்வுகளை ஏற்றுக்கொள்ளாமையைக் குறிப்பிடலாம். அதாவது பெண்ணுக்கு பாலியலை ஆர்வம் இருப்பதை அங்கீகரிக்காமை, அடுத்து வெளித்தெரியும் ஆர்வத்தை கொச்சைப்படுத்தல். இதில் வேடிக்கை என்னவென்றால், பாரம்பரியமான கட்டமைப்பில் இக் கொச்சைப்படுத்தலை பெண்களின் ஊடாகவே செய்யப்படுவது தான். அதாவது பெண்களின் பாலியல் உணர்வுகள் வெளிப்படும் போது இதர பெண்களே மும்மரமாக இதைப்பற்றி விமர்சிக்கும் நிலையைச் காண்கிறோம். இவ்வாறே பெண்களிடம் சீதனம் சீர்வரிசை எதிர்பார்க்கும் விடயங்களிலும் பெண்களே முதன்மையாகவோ மூர்க்கமாகவோ நிற்பதைக் காணமுடிகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கெதிரான வன்முறை களை பெண்களின் துணையுடனோ, பெண்களி னூடகவோ ஆணாதிக்க சமுதாயம் சாதுரியமாக நிறைவேற்றுகிறது. இதைப் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த இலக்கை அடைவதில் பெண்ணியவாதிகளின் செயற்பாட்டின் போதாமையை தடுக்க முடியாமலிருப்பதற்கான முக்கிய காரணம் எனலாம்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளில் மிகவும் மோசமானதும், ஏற்றுக்கொள்ள முடியாததும் அவர்களுக்கெதிரான பாலியல் வன்முறையே ஆகும். புனிதமாக இருவர் மனமொத்து அடைய வேண்டிய இன்பப் பகிர்தலை, ஆண்கள் பலாத்காரமாக அடைவது எவ்வளவு நியாயமற்ற கொடுமையான செயல்! அதுவும் இந்த ஆணாதிக்க சமுதாயத்தில் பாலியல் ரீதியில் களங்கப்பட்ட பெண்ணின் எதிர்காலமே சூனியமாகி விடுகிறதல்லவா? பாலியல் வக்கிரப் போக்குடைய ஆண்கள் இது பற்றி சிந்திப்பார்களா? ஆண்களில் பலர் மனிதாபிமான முள்ளவர்களாக இருப்பினும், மனிதநேயமற்ற சில ஆண்களின் செயற்பாட்டால் எத்தனை அபலைப் பெண்களின் வாழ்வு பாழாகின்றது. பாலியல் வன்முறையில் உச்சமாக கொலையும் செய்யப்படும் நிலை உள்ளது. மனமுடைந்த பாதிப்புக்குள்ளான பெண்களில் சிலர் தற்கொலையும் செய்கின்றார்கள். இந்த கொடுமைகளுக்கு முடிவு காண்பது சமூகம்தான். சட்டங்கள் இறுக்கமாக இருந்தும் கூட இக்கொடுமைகளைத் தடுக்க முடியவில்லை. சில பெண்கள் தமது எதிர்காலம்



படிப்பகம்

www.padippakam.com

முழுமையாக அஸ்தமிததுவிடும் என அஞ்சி சட்ட உதவிகளை நாட பின் நிற்கிறார்கள்.

வெறும் பாலியல் வல்லுறவுகளுக்கு அப்பால் பெண்களை நம்ப வைத்து காதலிப்பது போல் பழகி அவளுடன் உறவு கொண்டுவிட்டு ஏமாற்றும் ஆண்களையும் காணமுடிகிறது. சிலர் தமது பதவி மேலாதிக்க நிலையை முன்வைத்து பெண்களை அடிபணிய வைத்து உறவு கொள்கிறார்கள். இன்னும் சிலர் பெண்களின் வறுமையையும் அறியாமையையும் தமக்கு சாதகமாக்கி உறவு கொள்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக பெண் சிறுமிகளை வல்லுறவுக்கு உள்ளாக்கும் கொடியவர்களையும் காண முடிகிறது. இதில் நெருங்கிய உறவு முறையில் உள்ளவர்களும் அடங்குவர். பெண் சிறுமிகளை மாத்திரமின்றி சிறுவர்களையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் அவலம் அண்மைக்காலமாக ஒரு தொற்று நோய் போல் தொடர்கிறது. இவை எல்லாம் முடிவுக்கு கொண்டுவரப்படாவிட்டால் பெண்ணிய இலக்குகளை எட்ட முடியாது.

பாலியல் பாதுகாப்பு உணர்வை பெண் சிறார்களுக்கு ஊட்டுமளவுக்கு, அவ்வாறு ஈடுபடுவதால் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் பற்றி ஆண் சிறார்களுக்கும் எடுத்துரைக்க வேண்டும். ஒழுக்க நெறிகளை சிறுவயதிலிருந்தே ஊட்டுதல் பெற்றோரினதும், ஆசிரியர்களினதும், பெரியோர் களினதும் கடமையாகும்.

## மலேசியமடல்

# வல்லினம் இலக்கியவிழாவில் நான்கு நூல்கள் வெளியீடு

ஆ. குணநாதன், கோலாசிலாங்கூர்

வல்லினம் இணைய மாத இதழ் ஏட்டின் ஏற்பாட்டில் நான்காம் ஆண்டாக இலக்கியவிழா கோலாலம்பூர் சோமா மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் முதல் அங்கமாக மலேசியா முன்னணி இளம் பெண் எழுத்தாளர் யோகி "எழுதிய "துடைபடாத "இரத்தக் கறைகள்" (பத்திகளின் தொகுப்பு), ரேணுகா எழுதிய புதுக்கவிதைத் தொகுப்பான "என்னை நாயென்று கூப்பிடுங்கள்" கே.பாலமுருகன் எழுதிய கட்டுரைத் தொகுப்பான "தீர்ந்து போகாத வெண்கட்டிகள்", ம.நவீன் எழுதிய பத்திகளின் தொகுப்பான "கடக்க முடியாத காலம்" ஆகியவை வெளியீடு கண்டன.

வழக்கமான நூல் வெளியீடுகளில் காணப்படும் அரசியல் தலைவர் வருகை, மாலை பொன்னாடை, குத்துவிளக்கேற்றல், அதிகமான தொகை கொடுத்து நூல் பெறுதல் போன்றவை இல்லை.

பிரபல வழக்கறிஞரும் செம்பருத்தி மாத இதழ் வெளியீட்டாளருமான பசுபதி விழாவிற்குத் தலைமை யேற்றார். இளைய தலைமுறை எழுத்தாளர்கள் சமூக உணர்வுமிக்கவர்களாக இருந்து பல அரிய படைப்புகளை வெளிக்கொணர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

நான்கு நூல்களையும் சமுதாய நோக்குடைய சேவையாளர்கள் பெற்றுக் கொண்டனர். அவர்கள் நால்வரின் பெயர்கள் பலருக்கு ஞாபகமில்லை. ஆனால் அந்த நால்வரும் மிகவும் அமைதியாக, ஆரவாரம் விளம்பரமின்றி சமூகப்பணிகளில் ஈடுபாடு காட்டி வருபவர்கள்.

ஏற்கனவே ரிங்கிட் ஐம்பது அனுப்பி பெயர் பதித்து கொண்டவர்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியன்றும் வேண்டுவோர் உரிய தொகையைச் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

நூலாசிரியர்கள் யோகி, சிவா பெரியண்ணன், பாலமுருகன், நவீன் ஆகியோர் தங்களின் எண்ண ஓட்டங்களை வந்திருந்தோரிடம் பகிர்ந்து கொண்டனர்.

இரண்டாவது அங்கமாக, இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து தற்போது ஜெர்மானியில் வசிக்கும் எழுத்தாளர் தேவதாஸ், புதிய நாட்டில் புதியவாழ்வைத் தொடங்குவதில் நிகழும் சமகால சிக்கல்களை விவரித்தார்.

அதன் பின் தமிழகத்தின் பேராசிரியர் மார்க்ஸ் "அரசியலும் இலக்கியமும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். பிறகு பேசிய ஆதவன் தீட்சண்யா வருகையாளர்களைத் தன் பேச்சால் கவர்ந்தார். ஒவ்வொருவரும் எழுத வேண்டும் எழுதுவதற்கு அனைவரிடமும் கதை, அனுபவம் உண்டு நிறையவசிப்பதாலும் முயற்சி செய்வதாலும் எழுதலாம், மேலும் சமூக அவலங்களை எழுத்து வடிவில் கொண்டு வருவதாலும் தங்களின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கலாம் என்றும் கூறினார்.

இவ்விழாவில் வல்லினம் இதழ் ஆலோசகர் எழுத்தாளர் டாக்டர் சண்முகசிவா, நயனம் வார இதழ் ஆசிரியர் ஆதி. இராஜகுமாரன், எழுத்தாளர் அ.ரெங்கசாமி, ந.பச்சைபாலன், ஏ.தேவராஜன், ப.இராமு உட்பட பல இளைய தலைமுறையினர் கலந்து கொண்டனர்.

வழக்கம் போல் ஒளிவட்டம் கொண்ட மூத்த எழுத்தாளர்களைக் காணோம்!.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழில் இலக்கியத் திறனாய்வியல்

## அடிப்படைகள் — வரலாறு — புதிய எல்லைகள்

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

(18)



**4. தமிழின் சமகால இலக்கியத் திறனாய்வியல் - தோற்றமும் தொடர்ச்சியும்**

**4.1.3. 1960களின் நிறைவு வரையான செல்நெறி தொடர்பான பொதுக்குறிப்பு**

தமிழின் சமகாலத் திறனாய்வியலின் செல்நெறி பற்றிய பார்வையிலே 1950கள்வரையான காலப்பகுதியின் வரலாற்றிலே கல்வியாளர் மற்றும் இலக்கியச் சிந்தனையாளர்களின் செயற்பாடு களூடான வளர்ச்சியின் முக்கிய கட்டங்களை முன்னைய கட்டுரைகளில் நோக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக 1960களின் நிறைவு வரையான காலகட்டத்தின் பொதுவான வரலாற்றியக்கம் இங்கு கவனத்துக்கு வருகிறது.

உயர்கல்விச் சூழல்களில் - பாடத்திட்ட நிலையில்...

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1941ஆம் ஆண்டு பி. ஓ. எல். ஆனர்சு என்ற பட்டப்படிப்புக்கான பாடங்களிலொன்றாக திறனாய்வியல் இடம்பெறத் தொடங்கியதையடுத்து தமிழகம் மற்றும் ஈழம்சார் உயர்கல்விச் சூழல்களில் அது தனிக்கவனத்தைப் பெறத் தொடங்கியது. தமிழகத்தில் பேராசிரியர்கள் மு. வரதராசனார், அ. ச. ஞானசம்பந்தன் ஆகியோர் இவற்றைக் கற்பிக்கத் தொடங்கினர். அக்காலப்பகுதிவரை ஆங்கில மொழியில் வெளிவந்திருந்த திறனாய்வு நூல்களின் பொருட்பரப்பை ஒட்டி இவர்களது பாடத்திட்டப்பரப்பும் கற்பித்தல் அணுகுமுறைகளும் அமைந்திருந்தன.

W. H. Hudson (1841- 1922) எழுதிய Introduction to the Study of Literature , A.C. Bradly(1851-1935)யின் Oxford Lectures in Poetry, L. Abercrombie (1881-1938)யின் Theory of Poetry, I. A. Richards(1893-1979) எழுதிய Principles in Literary Criticism, முதலிய பல நூல்களின் உள்ளடக்க அம்சங்களை அடியொற்றியே இவர்களது அக்காலப் பாடத்திட்டப்பரப்பும் கற்பித்தல் அணுகுமுறைகளும் அமைந்திருந்தன. இலக்கியத்தின் இயல்பு, உள்ளடக்கம், உருவம் மற்றும் அதன் உணர்த்துமுறைக் கூறுகளான உவமை, உருவகம் முதலானவற்றைப்பற்றியும் வாழ்வியலுக்கும் இலக்கியத்துக்குமான உறவு பற்றியும் விரித்துரைப்பதே இவர்களுடைய முக்கிய அணுகுமுறையாக அமைந்திருந்தது.

இவ்வாறான அம்சங்கள் தொடர்பாக மேற்சுட்டிய ஆங்கில நூல்களின் கருத்தாக்கங்களை இவர்கள் எடுத்தாண்டபோதும் தமிழின் இலக்கிய இலக்கணங்களை மையப்படுத்தியே இவர்கள் தமது விரிவுரைகளை அமைத்துக்கொண்டனர். குறிப்பாகச் சங்கப் பாடல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம், கம்பராமாயணம், சிற்றிலக்கிய வகைகள், பாரதிமரபு சார்ந்த நவீனகவிதைகள், புனைகதைகள், நாடகங்கள் முதலான தமிழிலக்கியப் பெரும் பரப்பும் தொல்காப்பியம், இறையனார் களவியலுரை, யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களும் இவர்களது இவ்விரிவுரைகளில் முக்கிய சான்றாதரங்களாக அமைந்து விளக்கம் பெற்றன. சமகால மேலைப்புலத் திறாய்வு முறைமைகளுடன் தமிழிலக்கியப்பரப்பைப் பொருத்திநோக்கிப் பொருத்தம் காண்பதான அணுகுமுறையாக இவர்களின் இக்கல்விமுறை அமைந்திருந்தது. இவ்வாறாக மு. வரதராசனார் மற்றும் அ. ச. ஞானசம்பந்தன் ஆகியோர் தொடக்கிவைத்த இக்கற்பித்தல் முறைமையைத் தமிழகச் சூழலில் பேராசிரியர்கள் ந. சுப்புரெட்டியார், அ. மு. பரமசிவானந்தம், தா. ஏ. ஞானமூர்த்தி, ந. சஞ்சீவி முதலிய பலர் தொடர்ந்தனர்.

இவ்வாறு திறனாய்வியலைக் கற்பித்த இவர்கள் அச் செயற்பாடுகளுக்காகத் தாம் தயாரித்த குறிப்புகளைப் பின்னாளில் விரிவுபடுத்தி நூல்களாக வெளியிட்டனர். இவ்வகை ஆக்கங்களில் மு.வரதராசனாரின் இலக்கியத் திறன், இலக்கிய மரபு ஆகியனவும் அ.ச. ஞானசம்பந்தனின் இலக்கியக்கலையும் முக்கிய முன்னோடி முயற்சிகளாக அமைந்தன.

மேற்கண்டவாறு தமிழக உயர்கல்விச் சூழலில் பாடத்திட்டநிலையில் கவனத்தைப் பெறத் தொடங்கியே திறனாய்வியலை ஈழத்தில் 1950களில் காலூன்றச் செய்தவர் பேராசிரியர் வி. செல்வநாயகம் (1907-1973) அவர்களாவர். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் (கொழும்பு மற்றும் பேராதனை) தமிழ்த் துறையிற் பணியாற்றிய அவர் தமது மாணவர்களுக்கு Practical Criticism (செயன்முறைத் திறனாய்வு) என்ற ஒரு தலைப்பிலே 'இலக்கியநயம்' காண்பதான பயிற்சியைத் தந்தவர் என்பது வரலாற்று முக்கியத்துவமுடைய செய்தியாகும். 'இலக்கியத்தை - குறிப்பாக, ஒரு பாடலை



படிப்பகம்

www.padippakam.com

அல்லது ஒரு உரைப்பகுதியை - க் குவிமையப்படுத்தி நோக்கி அதன் நயம் மற்றும் தகுதி என்பவற்றைக் காண்பதான' ஒரு திறனாய்வுப் பயிற்சிமுறையாக இவருடைய அணுகுமுறை அமைந்தது. இவ்வணுகுமுறையில் புறநானூறு, திருவாசகம், கம்பராமாயணம் மற்றும் கம்பதாசன் கவிதைகள் முதலியவற்றின் சில பாடல்களும் பி. இராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம் மற்றும் புதுமைப்பித்தன் சிறுகதைகள் என்பவற்றின் சில பகுதிகளும் குவிமையப்படுத்தி நோக்கப்பட்டன.

இவருடைய இவ்வாறான கற்பித்தல் செயற்பாடானது குறித்த ஒரு பாடப்பகுதியை ஊன்றி வாசிப்பதான (Close reading) முறைமையில் அமைந்ததாகும். குறித்த பாடப்பகுதியை அதற்குப்புறம்பான தளங்களில் நின்று அணுகாமல் அந்த பாடத்தை - Textஐ- மட்டுமே கருத்துட்கொண்டு அணுகும் முறைமையாக இது அமைந்தது. இவ்வாறான கற்பித்தல் முறைமையானது 1930-40களில் கேம்பிறிட்ச் பல்கலைக்கழகச் சூழலில் வளர்த்தெடுக்கப் பட்டதாகும். இப்பல்கலைக்கழகத்தின் இம்முறைமைசார் கல்வியாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்த E.F.C. Ludowyk(1906-1985) என்பார் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்தவராவார். அவருடைய விமர்சன வகுப்புகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருந்தவரான வி.செல்வநாயகம் அவர்கள் தமிழுக்கும் அந்த அணுகுமுறையை இட்டுவர விரும்பினார் என்பதான வரலாற்று முக்கியத்து வமுடைய தகவல் பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் மூலம் நமக்குக் கிடைக்கிறது. (பார்க்க: பேராசிரியர் வி. செல்வநாயகம் கட்டுரைகள் - 2004 - நூலின் *'பேராசிரியர் வி. செல்வநாயகத் தைத் தெரிந்துகொள்ளல்'* என்ற தலைப்பிலான அணிந்துரை ப.XV).

இவ்வாறாக 1940-50களில் தமிழகத்திலும் ஈழத்திலும் உயர்கல்விச் சூழலில் பாடத்திட்ட நிலையில் நிலையான இடத்தைப்பெற்ற திறனாய்வியல் கற்கைநெறியானது இலக்கியத்தை ஒரு 'அழகியல் வெளிப்பா'டாகக் காண்பதற்கும் அதனடிப்படையில் அதைச் சுவைப்பதற்கும் தகுதிகாண்பதற்கும் அறிவுறுத்தும் முறைமையாகவே அமைந்ததாகும். 20ஆம்நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஆங்கில மரபையொட்டி செல்வக்கேசவராயர் தொடக்கிவைத்த இவ்வகைப் பார்வையானது, தமிழகத்திலே மேற்குறித்தவாறான மு.வரதராசனார், அ.ச. ஞானசம்பந்தன் முதலிய வர்களின் செயற்பாடு களூடாகவும் ஈழத்தில் வி. செல்வநாயகம் அவர்களது கற்பித்தல் முறைமையூடாகவும் திட்டப்பாங்கான ஒரு வடிவநிலையை வந்தடைந்தது எனலாம். அவ்வகையில் இது தமிழிலக்கியத் திறனாய்வியலில் ஒரு வளர்ச்சிக்கட்டம் என்பது வெளிப்படை.

'மணிக்கொடி மரபின'ரின்தொடர் இயங்குநிலை - உருவவியல் அணுகுமுறையின் மேற்சுட்டியவாறு உயர்கல்விச் சூழலில் திறனாய்வியல் திட்டப்பாங்கான வளர்ச்சிக் கட்டத்தை எய்தியபோது சமகாலத்திலே அச்சூழலுக்கு வெளியே படைப்புலகு சார்ந்தோர் மத்தியிலும் திறனாய்வியல் சார்ந்த சமாந்தரமானதொரு வளர்ச்சிநிலை உருவாகி வந்தது. சமகால இலக்கிய வெளிப்பாடுகளை உடனுக்குடன் விமர்சிப்பது, புதிய படைப்பியல் உத்திமுறைமைகளை அறிமுகம் செய்வது மற்றும் இலக்கியத்துக்கும் இலக்கியமல்லாத எழுத்து களுக்கும் இடையிலான வேறுபாடுகளை வாசகர் மத்தியில் அழுத்தியுரைப்பது ஆகிய செயற்பாடுகளாக அவ்வளர்ச்சிநிலை அமைந்தது. இவ்வாறான செயன்முறைகளில் ஈடுபட்டோர் 'இலக்கிப் படைப்பாளுமை' மற்றும் 'திறாய்வுப்பார்வை' ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் நோக்கில் இதழ்வெளியீடுகளிலும் தனிக் கவனம் செலுத்தினர். இவ்வகையில் குறிப்பாக க. நா. சுப்பிரமணியம்(1912-1988) மற்றும் சி. சு. செல்லப்பா(1912-1998) ஆகிய இருவரின் செயற்பாடுகள் தனிக் கவனத்துக்குரியன. இவ்விருவரும் *மணிக்கொடிக் குழுவினர்* என்பதையும் அக்குழுவினர் *நவீனத்துவம்* என்ற கோட்பாடு சார்ந்த உணர்வோட்டங்களுடன் இயங்கிநின்றவர்கள் என்பதையும் முன்னர் (கட்டுரை 16இல்) நோக்கியுள்ளோம்.

*நவீனத்துவம்* என்ற கோட்பாட்டினது முனைப்பான அம்சம் 'மனக்காட்சியிலிருந்தும் அநுபவ அம்சங்களிலிருந்துமே இலக்கியம் ஊற்றெடுக்கின்றது' என்பதாகும். இக் கோட்பாட்டுத் தளம்சார் குறித்த படைப்பாளியொருவர் தனக்கு முற்பட்ட மரபுகள் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றைக் கேள்விக்குட்படுத்துவார். தேவைப்பட்டால் அவற்றைக் கலைத்துப்போடுவார். மேற்படி மரபுகள், நம்பிக்கைகள் மற்றும் சமூகநிர்ப்பந்தங்கள் ஆகியவற்றுக்கு அப்பால் 'தன்னிலை'யை - அதாவது தன்னுடைய அடிமன அசைவுகளை - முன்னிறுத்துவார். அத்துடன் அடிமன உணர்ச்சிகளை அழுத்தமாகப் பதிவுசெய்யும் முயற்சியில் மொழியை ஒரு முக்கிய பரிசோதனைப்பொருள் ஆக்குவார். இப்பண்புசார் *நவீனத்துவ* இயக்கமானது மேலைத்தேயத்திலே 'மரபிலிருந்தும் வரலாற்றி லிருந்தும் தம்மை விடுவித்துக்கொள்ள முயன்ற' சுதந்திர சிந்தனையாளர்களின் வெளிப்பாடாகவே உருவான தாகும். இவை முன்னரே நாம் அறிந்த செய்திகளாகும். *மணிக்கொடிக் குழு* சார்ந்த முக்கிய படைப்பாளிகளான புதுமைப்பித்தன், கு.ப.ரா. மற்றும் மௌனி முதலியோரின் படைப்புகளில் இவ்வம்சங்கள் வெவ்வேறு விகிதாசாரங்களில் வெளிப்பட்டன என்பதையும் முன்னரே நோக்கி யுள்ளோம். இவ்வம்சங்களை மணிக்கொடி காலகட்டத்தின்(1933-39) பின்னரான வரலாற்றிலும் தொடர்ந்து முன்னெடுக்கும் முயற்சிகளாகவே க. நா. சு. மற்றும் சி. சு. செல்லப்பா ஆகியோரின் செயற்பாடுகள் அமைந்தன என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய வரலாற்றம்சமாகும். உலக இலக்கியப் பரப்பு தொடர்பான நெருங்கிய பரிச்சியமுடையவராகத் திகழ்ந்த இவர்கள் படைப்பு, திறனாய்வு மற்றும் இதழியல் ஆகிய பல தளங்களில் இயங்கிநின்றவர்களாவர்.



படிப்பகம்

www.padippakam.com

க.நா.சு அவர்கள் ஒரு படைப்பாளி என்றவகையில் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் ஆகிய துறைகளில் இயங்கிநின்றவர். பிறமொழி களின் இலக்கிய ஆக்கங்களை தமிழுக்கும் தமிழிலக்கியங்களைப் பிறமொழிகளுக்கும் மொழிபெயர்ப்பதில் தனி ஈடுபாடு காட்டிநின்றவர். இவருடைய திறனாய்வுசார்ந்த எழுத்துகள் விமர்சனக் கலை, இலக்கிய விசாரம், நாவல் கலை, படித்திருக்கிறீர்களா?, இந்திய இலக்கியம் முதலிய தலைப்புகளிலான நூல்களாக வடிவங்கொண்டுள்ளன. இவர் மணிக்கொடி, சரஸ்வதி, எழுத்து முதலிய இதழ்களில் எழுதிவந்ததோடு சூறாவளி, சந்திரோதயம், ராமபாணம், இலக்கியவட்டம் ஆகிய இதழ்களின் ஆசிரியராகச் செயற்பட்டு நின்றவருமாவார்.

சங்க இலக்கியம் முதல் சமகாலப் படைப்புகள்வரையிலான பல்வேறு காலகட்ட இலக்கியங்களைப் பற்றிய தனது மதிப்பீடுகளைத் துணிவுடன் பதிவுசெய்துவந்தவரான இவர் இலக்கியமானது இலக்கியமாகவே இருக்கவேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுவதும் வாதங்கள் நிகழ்த்தி வந்தவராவார். அவருடைய திறனாய்வுசார் எழுத்துகள் பலவும் *'அபிப்பிராயங்கள் என்ற வகையிலான மனப்பதிவுக'*ளாகவே அமைந்தவை என்பதும் 'எதிர்ப்பலைக'ளை உருவாக்கியவை என்பதும் தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் பொதுவாக அறியப்பட்ட செய்திகளாகும்.

க.நா.சு அவர்களின் திறனாய்வுசார் இயங்குநிலை தொடர்பாக இங்கு நமது கவனத்துக்குரிய முக்கிய அம்சம், அவை மேலே முற்சுட்டிய உயர்கல்வித்துறைசார் கல்வியாளர்களுக்கு எதிரான உணர்வடிப்படை சார்ந்து வெளிப்பட்டவை என்பதாகும். '*மேலை நாடுகளின் இலக்கிய அளவுகோல்களை அப்படியே விழுங்கிவிட்டு அவற்றினடிப்படையில் தமிழிலக்கியத்தை அணுக முற்படுபவர்கள்'*, என்பதும் *'திறனாய்வுக்கான 'விமர்சனச் சட்டக'ங்களை 'யந்திரப்பாங்காக'ப் பிரயோகிப்பவர்கள்'* என்பதும் *'புதிய வகை இலக்கிய வெளிப்பாடுகளை ஆரம்பநிலையிலேயே இனங்கண்டு விமர்சிப்பதற்கான ஆளுமை அற்றவர்கள்'* என்பதும் இக் கல்வியாளர்கள் மீது க.நா.சு. வைத்துள்ள முக்கிய விமர்சனங்களாகும். இதனை நோக்கும்போது நாம் மேலே நோக்கிய உயர்கல்விச் சூழலின் திறனாய்வியல் இயங்குநிலைக்குப் புறம்பானதாக மட்டுமன்றி எதிரானதாகவும் அமைந்த தளநிலை வெளிப்பாடாகவே க.நா.சு. அவர்களின் திறனாய்வியல் இயக்கம் அமைந்தமையை உணரமுடிகின்றது.

ஜீவனாம்சம், வாடிவாசல் ஆகிய புனை கதைகளைத் தந்தவரான சி. சு. செல்லப்பா அவர்கள் திறனாய்வியல் தொடர்பான கட்டுரைகளைப் பலகாலம் தொடர்ந்து எழுதிவந்தவர். அவருடைய இவ்வகை எழுத்துகள் தமிழில் இலக்கிய விமரிசனம், தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது, மணிக்கொடிச் சிறுகதை முதல்வர்கள், ஊதுவத்திப் புல், வெண்மரக்கிளை, படைப்பியல் ஆகிய தலைப்புகளிலான நூல்களாக வடிவங்கொண்டுள்ளன. இவருடைய திறனாய்வுநிலை எழுத்துகள், க.நா.சு. அவர்களுடைய இவ்வகை எழுத்துகள் போல *'அபிப்பிராயங் கூறும் பதிவு'*களாக அமையாமல் காரணகாரிய விளக்கங்களுடன் *பகுப்பாய்வு நிலை*யில் அமைந்தவை என்பது தமிழ்த் திறனாய்வுலகம் அறிந்த செய்தியாகும். புதுமைப்பித்தன், கு.ப.ரா, ந.பிச்சமூர்த்தி முதலிய *மணிக்கொடிக் குழு*சார் படைப்பாளிகள் பற்றிய இவருடைய இவ்வகை எழுத்துகள் குறிப்பிடத்தக்க வரலாற்று முக்கியத்து வமுடைய பதிவுகளாகும்.

தமிழிலக்கியத் திறனாய்விலுக்கு சி.சு.செல்லப்பா அவர்களின் பங்களிப்புகள் என்ற வகையில் மேலே நோக்கிவை தவிர நமது சிறப்பான கவனத்துக் குரியவை இரண்டு. அவற்றுள் ஒன்று, 'தமிழ் திறனாய்வியலின் வரலாற்றை எழுத முற்பட்ட முதல்வர்களுள் ஒருவர், அவர்' என்பதாகும். தமிழில் இலக்கிய விமர்சனம் (1974) என்ற தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள இதே தலைப்பிலான முதலாவது கட்டுரை தமிழ்த் திறனாய்வியலின் வரலாற்றைப் பேசுவதாகும். தொல்காப்பியம் மற்றும் 'உரைமரபு' என்பவை முதல் 1960கள் வரையான ஒரு வரலாற்றோட்டத்தைக் கோடிட்டுக்காட்டுவதான முயற்சி இது. இன்றைய நோக்கில் இக்கட்டுரை ஆழமற்றதும் தகவல் குறைபாடுகள் பல கொண்டதுமாகும். இக்கட்டுரை, 'தொல்காப்பியத்தை - குறிப்பாக அதன் பொருளதிகாரத்தை - இலக்கிய விமர்சனத்துக்கான ஒரு தொல் சான்றாகக் கருதமறுத்து, ஒரு இலக்கண முயற்சியாக மட்டுமே கணித்துள்ளது. இது அவருடைய பார்வைக் குறைபாடேயாகும் என்பது வெளிப்படை. இக்கட்டுரை இவ்வாறான விமர்சனங் களுக்குரியதெனினும் *'தமிழுக்கு ஒரு திறனாய்வியல் வரலாறு உளது'* என்பதான எண்ணக்கருவை வெளிப்படுத்திய தொடக்கநிலை ஆக்கமுயற்சி களுளொன்று என்றவகையில் வரலாற்று முக்கியத்துவ முடையதாகும்.

சி.சு.செல்லப்பா அவர்களின் பங்களிப்புகளில் சிறப்பான கவனத்துக்குரிய மற்றொன்று எழுத்து என்ற இலக்கிய இதழைப் பன்னிரு ஆண்டுகள்(1959-71) நடத்தியமையாகும். இலக்கிய விமர்சனம், இலக்கியப் பிரச்சினைகள் தொடர்பான சிந்தனைகளை வளர்த்தல் மற்றும் புத்தாக்க முயற்சிகளுக்கு வாய்ப்பளித்தல் என்பன அதன் குறிக்கோள்களாக அமைந்திருந்தன. இலக்கியத் திறனாய்வை முன்னிறுத்தி உருவான இவ்விதழின் முதன்மையான பங்களிப்பாகக் கணிக்கப்படுவது புதுக்கவிதையின் வரலாற்றை முன்னெடுத்த செயற்பாடாகும். மரபுவழி யாப்பை மீறிய கவிதையாக்க முயற்சி என்றவகையில் மணிக்கொடிக் காலத்தில் உருவான *'வசன கவிதை'*யைப் *'புதுக்கவிதை'* நிலைக்கு வளர்த் தெடுத்தமையே இப்பங்களிப்பாகும். இவ்வகையிலே, *புதுக் கவிதை*யை ஒரு 'எழுத்தியக்கமாக' இயக்கிநின்ற இதழ், இது. இம்முக்கியத்துவம் காரணமாக, *புதுக்கவிதை*யின் வரலாற்றின் ஒரு காலகட்டத்தை 'எழுத்துக் காலகட்டம்' எனப் பெயர் சுட்டுவது மரபாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கண்டவாறாக உயர்கல்விச் சூழலுக்கு வெளியே, க.நா.சு மற்றும் சி.சு. செல்லப்பா ஆகியவர்களாலும் அவர்களுடனிணைந்தியங்கிய வேறு பலராலும் முன்னெடுக்கப்பட்ட திறனாய்வியல் செயற்பாடுகள் பொதுவாக *'உருவவியல் அணுகுமுறை'*(Formalistic Approach)என்ற பொதுப் பெயரில் சுட்டப்படுவன. *உருவவியல்* என்பது *நவீனத்துவச்* சிந்தனைகள் சார்ந்தது. படைப்பியற் கோட்பாட்டுத் தளமாக மட்டுமன்றித் 'திறனாய்வியல் அணுகுமுறை' யாகவும் திகழ்வது, இது.

1916இல் ரஷ்யாவிலே Viktor Borisovich Shklovsky(1893-1984) என்பாரால் எழுதப்பட்ட கலை ஓர் உத்தியாக (Art, asDevice) என்ற கட்டுரையே இந்த *உருவவியலின்* அடிப்படைகளை வகுத்தளித்த முக்கிய முதலாக்கமாகக் கருதப்படுகிறது. கலைச் செயற்பாடுகள் முழுமையுமே ஒரு உத்திமுறைதான் என்பதே இக்கட்டுரையின் சாராம்சமாகும். அவ்வகையில், இலக்கியம் என்ற கலையும் ஒரு உத்தியாகவே கொள்ளப்படுகின்றது. இவ்வகையில் அதன் மொழிசார் கட்டமைப்பான உருவமே *உருவவியலின்* குறிக்கோளாக அமைகின்றது. இங்கே உருவம் என்பதற்குள் *உள்ளடக்கம், உணர்ச்சி, கற்பனை* மற்றும் அவற்றை வெளிப்படுத்தும் *மொழிநடை* ஆகிய அனைத்தும் அடங்கிவிடுகின்றன. இந்த உருவத்துக் கூடாகத்தான் மேற்படி உள்ளடக்கம் முதலான அனைத்து அம்சங்களையும் சுவைஞர் மற்றும் விமர்சகர் ஆகியோர் தரிசிக்கின்றனர் என்பதே இந்த *உருவவியல் அணுகுமுறையின்* சாராம்சமாகும். இதில் உள்ளடக்கம் வேறு உருவம் வேறு எனபதான பிரிநிலைப் பார்வைக்கு இடமில்லை. குறித்த ஒரு ஆக்கம் எவ்வெக் கூறுகளால் இலக்கியமாகியுள்ளதென்பதை மதிப்பிட்டு விளக்கியுரைப்பதே இதன் செயல்திட்டமாகிறது.

இவ்வாறான *உருவவியல் அணுகுமுறையினைச்* சார்ந்தவர்களாகவே க.நா.சு. முதலியவர்கள் இயங்கிநின்றனர் என்பதைப் பொதுவாக அவர்களது திறனாய்வுசார் எழுத்துகளில் உய்த்துணரமுடியும். க.நா.சு அவர்கள் இவ்வணுகுமுறையினை உணர்வு பூர்வமாகவே மேற்கொண்டிருந்தவர் என்பதை அவரது பின்வரும் வாக்குமூலம் உணர்த்தும்:

*" நான் ஒரு நூலையோ, சிறுகதையையோ இலக்கியம் என்று ஏற்றுக் கொள்ளும்போது அதை அதன் 'விஷயத்தைப் பொறுத்து' இலக்கியம் என்று சொல்வதில்லை. எந்த விமர்சகனுமே அப்படிச் சொல்வதில்லை. ஏனென்றால் அது வாழ்வுக்கும் இலக்கியத்துக்கும் பொதுவானதொன்று. வாழ்வு எது, இலக்கியம் எது என்று தனியாகப் பிரித்துப் பார்க்கமுடியாது. ஆனால் இலக்கிய விமர்சகனாக நான் இலக்கியத்தை அணுகி அலசிப்பார்க்கும்போது உருவத்துக்குப் பிரதான்யம் தந்தே அலசிப் பார்க்கிறேன். இலக்கிய விமர்சகன் என்பவனால் தவிர்க்கமுடியாத ஒரு காரியம் , இது.* (எழுத்து ஏப்ரல் 1959)

க.நா.சு. அவர்களின் தன்னிலை விளக்கமாக அமையும் இக்கூற்றானது *உருவவியல் அணுகு முறையின்* விளக்கவுரை போலவே திகழ்கின்றமை வெளிப்படை.

கடந்த கட்டுரையிலே, *'அழகியல் திறனாய்வு' (Aesthetic Criticism)* என்ற பெயர்சுட்டி நோக்கப்பட்டதான டி.கே.சியின் *ரஸனை அணுகுமுறையும்* உருவவியல் சார்ந்ததேயாகும். திறனாய்வாளரான பேராசிரியர் சி. கனகசபாபதி அவர்கள் டி. கே. சி., க.நா.சு. மற்றும் சி.சு.செல்லப்பா ஆகிய மூவரையும் 'உருவவியல் அணுகு முறையினர்' என்றே அடையாளப்படுத்தி யுள்ளார் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியது. (பார்க்க: தமிழ் இலக்கிய விமர்சகர்கள்- தொகுப்பாசிரியர் : பாலா-2ம்பதி. 1992-ப.70).

இவ்வாறு இம்மூவரும் பொது *உருவவியலாளர்* என்பதான அடையாளத்துக்குட்பட்டாலும் டி.கே.சியின் *ரஸனைக்கும்* மற்றவர்களது அணுகுமுறைகளுக்கு மிடையிலான வேறபாடுகள் இங்கு சுட்டப்பட வேண்டியன. *ரஸனையிலே* சுவைஞனின் மனப்பதிவே முக்கியம். அவ்வகையில் அது முற்றிலும் 'அகவய'மானதும் 'தனிமனிதப்˙ பாங்கான'துமாகும். ஏனைய இருவரின் *உருவவியல் அணுகுமுறைகள்* அகவயத்தைக் கடந்தன. அவ்வகையில் அவை தனிமனிதம் கடந்தவை. செல்லப்பாவின் பார்வை காரணகாரிய விளக்கங்களுடனும் அமைவதால் முழுநிலையில் சமூகப்பாங்கானதுமாகின்றது.

மேலே முதலில் நாம் நோக்கிய உயர்கல்விச் சூழலின் பாடத்திட்டநிலையில் அமைந்த திறனாய்வுக் கல்வியானது *'இலக்கியத்தை அழகியல் வெளிப்பாடாகக் காண்பது'* என்பதும் *சுவைப் பதற்கும் தகுதி காண்பதற்கும் அறிவுறுத்துவது* என்பதும் முன்னர் சுட்டப்பட்டன. அவ்வகையில் அதுவும் இலக்கியத்தின் உருவம் தொடர்பான தாகவே அமைவது. எனவே அது *உருவவியல்* தொடர்பானதேயாகும். க.நாசு. மற்றும் சி.சு.செல்லப்பா முதலியோரின் திறனாய்வுச் செயற்பாடுகளில் படைப்பாளியின் அநுபவநிலைக்கு முதன்மையளிக்கப்பட்டது. கல்வியாளர் அணுகு முறையிலே திறனாய்வானது இலக்கணக் கல்விபோல ஆகி, பாடமாக்குவதும் ஒப்படைப்பதும் என்ற நிலையிலே மூளைசார்ந்த ஒரு பயிற்சிக்குரியதாகியது. இவற்றின் பொதுமை மற்றும் வேறுபாடுகள் இவையே.

இவ்வாறாக இலக்கியத்தை ஒரு 'அழகியல் வெளிப்பாடாக' நோக்கும் அணுகுமுறைகள் கல்வியாளர் நிலையிலும் படைப்பாளிகள் நிலையிலும் உருவாகிவளர்ந்துவந்த காலப் பகுதியில் இவற்றுக்கு எதிர்நிலையில் புதிய சிந்தனையொன்று 1940களிலிருந்து உருவாகி வளர்ந்தது. இலக்கிய ஆக்கமொன்றை உருவம் உள்ளடக்கம் என இருகூறுகளாக வேறுபடுத்தி நோக்கி, அவற்றுள் உள்ளடக்கம் என்ற அம்சத்துக்குத் தனிமுதன்மை வழங்கியது. ஒரு படைப்பாக்கம் பற்றிய திறனாய்விலே அதனுடைய உள்ளடக்கத்தின் பிரச்சினை அம்சமே முதற்கவனத்துக்குரியது என்பதும் அப்பிரச்சினை யின் முக்கியத்துவத்துக் கேற்பவே அவ்வாக்கத்தின் தகுதி மதிப்பிடப்படல் வேண்டும் என்பதுமே இச்சிந்தனையின் தெளிபொருளாகும். *'முற்போக்கு இலக்கியம்'* என்ற பெயர் தாங்கிய 'இலக்கிய இயக்க'மாக உருவாகி வளர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

இச்சிந்தனை *மார்க்ஸியம்* என்ற தத்துவ அடிப்படையிலான இலக்கியப் பார்வையாக வெளிப்பட்டது. இப்பார்வை பொதுவாக *மார்க்ஸிய நோக்கு* என வழங்கப்பட்டு வருவது. முற்போக்குச் சிந்தனையும் மார்க்ஸிய நோக்கும்

*'முற்போக்கு இலக்கியம்'* என்ற சொற்றொடர் 'சமூகத்தை வளர்ச்சிநிலை நோக்கி முன்னெடுப் பதான உணர்வோட்டத்தின் வெளிப்பாடாக அமையும் இலக்கியம்' என்ற பொருளைத் தருவது. இலக்கியநிலைச் செயற்பாடுகள் என்பன அநுபவப்பகிர்வு மற்றும் சுவையுணர்வு என்பவற்றோடு மட்டும் எல்லைப்பட்டு நின்றுவிடாமல் சமூகக்குறைபாடுகள் மற்றும் முரண்நிலைகள் என்பவற்றைக் களைவதற்கான செயலூக்கத்தை வழங்குவனவாகவும் அமையவேண்டும் என்பதே இதன் பொருள்விரிவாகும். 'இலக்கியத்துக்கு ஒரு சமூகநிலைப் பயன்பாட்டம்சம் உளது' என்பது நமது தமிழ் மரபில் பண்டைக்காலமுதலே உணரப்பட்ட ஒன்றேதான். *"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே"* என்ற மரபுசார் கூற்று(*நன்னூல்* நூற்பா:10) இதனை உணர்த்தும். அதாவது ஒருவர் தமது வாழ்விலே அறத்தைப் பேணிப் பொருளீட்டுவதற்கும் அப் பொருளினூடாக இவ்வுலக இன்பத்தை முறைப்படி அநுபவிப்பதற்கும் அதன் தொடர்ச்சியாக வீடுபேறு எனப்படும் பேரின்பநிலையை எய்துவதற்கும் வழிகாட்டிநிற்பதே நூலின் பயன் என்பது இந்த மரபின் தெளிபொருளாகும். இங்கே நூல் என்பது இலக்கிய ஆக்கங்களையும் உள்ளடக்கி எல்லா எழுத்தாக்க முயற்சிகளையும் சுட்டிநிற்பதாகும்.

இவ்வாறான பண்டைய மரபுசார்ந்த சமூகப்பயன்பாட்டு நோக்கினின்று இங்கு நாம் நோக்கும் *'முற்போக்கு இலக்கியம்'* என்பது சுட்டும் சமூகப்பயன்பாட்டுநிலையானது குறிப்பிடத்தக்க வேறுபாடுடைய ஒன்றாகும். பண்டைய மரபுசார் சிந்தனையானது தனிமனித மனத்தை மையப் படுத்தியது. மனிதமனம் தன்னளவில் மாற்றமடையக்கூடியது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு போதனை முறைமையாக அமைந்த சிந்தனை அது. தனி மனிதர்கள் தம்மளவில் அறத்தைக் கடைப்பிடிக்கும் நிலையில் ஒட்டுமொத்த சமூகமும் மாற்றமடையும் என்பதான நோக்கு அதில் உள்ளுறைந்திருந்தது.

ஆனால், *'முற்போக்கு இலக்கியம்'* என்ற கருத்தியலானது மனித மனத்துக்குப் பின்னால் இருந்து அதனை இயக்கிநிற்கும் சமூகத்தளத்தை மையப்படுத்தியதாகும். சமூகம் என்ற ஒட்டுமொத்த அமைப்பின் ஒரு கூறாக மட்டுமே தனிமனிதரை அது தரிசிக்கிறது. அவ்வகையில் அது சமூகமாற்றம் என்ற எண்ணக்கருவுடன் அமைந்தது. அச்சமூகமாற்றத்துக்குத் துணைநிற்கும்வகையில் தனிமனிதர்களான இலக்கியவாதிகளின் உணர்வு நிலைகள் குவிமையப்பட்டு இயங்கவேண்டும் என்பதே 'முற்போக்கு இலக்கியவாதிக'ளின் நிலைப்பாடாகும். இந்த அடிப்படையிலே இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது அவை அநுபவ வெளிப்பாடு மற்றும் சுவையுணர்வு ஆகிய அம்சங்களோடு மட்டும் நின்றுவிடாமல் அவற்றுக்கு அப்பால், சமூகநலன் சார்ந்த பொதுநோக்கிலான செயற்பாடுகளுக்கான இயக்குசக்திகளாக - கருவிகளாக - வும் வடிவம் எய்திவிடுகின்றன. *முற்போக்கு இலக்கியம்* என்ற இயக்கவடிவத்தின் சிந்தனைச் சாராம்சம் இதுவே.

இவ்வாறான முற்போக்குச்சிந்தனைக்கான அடிப்படை உணர்வாக அமைந்தது துன்ப துயரங்களும் ஏற்றத்தாழ்வுகளும் அற்ற சமூகவாழ்வியலைக் கட்டமைக்க வேண்டும் என்ற எண்ணப்பாங்காகும். இதற்கான செயன்முறைத் தத்துவமாக அமைந்ததே *'மார்க்ஸியம்'* என்ற சமூக அறிவியல் ஆகும். சமூக வரலாற்றை வர்க்கப்போராட்டங்களின் வரலாறாகக் காணும் அத்தத்துவம் அடக்கியொடுக்கப்பட்ட அடிநிலை மாந்தரின் விடிவுக்கான வழிமுறைகளை முன்வைத்துச் சமநிலைச் சமூக அமைப்பு முயற்சிக்கு வழிகாட்டிநிற்பது என்பது பொது வாக அறியப்பட்ட செய்தியாகும். தொழிலாளர் மற்றும் விவசாயிகள் எனப்படும் உடலுழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்ட மாந்தரும் தம்மளவில் இணைந்து செயற்படுவதன் மூலம் தம்மை அடக்கியொடுக்கும் மேல்தட்டு வர்க்கத்தினரின் அதிகாரமையங்களின் அடக்குமுறைகளினின்று விடுபடமுடியம் என்பதை உணர்த்திநிற்கும் செயன்முறைத் தத்துவம் இது. இத்தத்துவசார்பால் சமூக உணர்வு பெற்ற இலக்கியவாதிகளின் கூட்டுச் சிந்தனையாகவே *'முற்போக்கு இலக்கியம்'* என்ற கருத்தியல் உருப்பெற்று இயக்கவடிவம் பெறலாயிற்று. ஆங்கிலத்தில; Progressive Literature என்பதன் தமிழாக்கமாக இச்சொற்றொடர் தமிழில் பயிற்சிக்கு வந்தது.

இந்திய மண்ணில் 1930களின் நடுப்பகுதியில் (1935-36 காலப்பகுதியில்) 'அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' உருவாகியது. அதன் தொடர்பால் 1940களில் தமிழகச் சூழலிலும் ஈழத்திலும் மேற்படி *'முற்போக்குஇக்கிய'*க் கருத்தியல் பரவியது. ஈழ-தமிழகச் சூழல்களில் 'முற்போக்கு எழுத்தாளர்சங்கம்', கலைப்பெருமன்றம், தேசிய கலை இலக்கியப் பேரவை முதலியபெயர்கள் தாங்கி உருவான கலை-இலக்கிய இயக்கங்கள் மேற்படி கருத்தியலை வளர்த்தெடுத்தன.

தமிழகச் சூழலிலே மார்க்ஸியத்தை அறிமுகம்செய்து அதனூடாகக் கலை இலக்கியங் களையும் சமூக பண்பாட்டுவரலாற்றையும் தரிசிக்க முற்பட்டவர்கள் என்றவகையில் தோழர்கள் ப. ஜீவானந்தம், தொ.மு.சி. ரகுநாதன், நா.வானமா மலை முதலியோர் முக்கியமானவர்களாவர். இவ்வகையில் ஈழத்திலே கே.கணேஷ், கே.ராமநாதன், அ.ந.கந்தசாமி, கலாநிதிகள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி மற்றும் இ. முருகையன என ஒரு நீண்ட பெயர்ப்பட்டியலை நாம் இங்கு முன்வைக்கமுடியும். இவர்களுள் ஒருசாரார் சமூகசிந்தனையாளர்களாகவும் கல்வியாளர் களாகவும் மட்டும் திகழ்ந்தவர்களாவர். இன்னொரு சாரார்



படிப்பகம்

www.padippakam.com

மேற்கூறிய ஆளுமையம் சங்களுடன் படைப்பாளி களாகவும் இயங்கி நின்றவர்களாவர். இவ்விரு சாராரையும் முன்னோடிகளாகக் கொண்டு புதிய முற்போக்குப் பரம்பரையொன்று உருவாகித் தொடர்ந்தது. தொடர்கின்றது.

இவ்வாறான இவர்களின் செயன்முறைகள் மூலம் முற்போக்கு இலக்கியத்துக்கு படைப்புநிலை மற்றும் திறனாய்வுநிலை ஆகிய இரண்டிலும் உறுதியான திட்டப்பாங்கான அடித்தளங்கள் இடப்பட்டன. இவ்வாறு இவர்களால் முன்னெடுக்கப்பட்ட இவ்விலக்கிய இயக்கமானது சமகாலத்தில் சமாந்தரமாக வளர்ச்சியெய்திவந்த *அழகியல்* சார்ந்த கோட்பாடுகளை முன்னெடுத்த *உருவவியல்* வாதிகளுடன் விவாதங்களை மேற்கொண்டது. *'இலக்கியத்தில் எது பிரதானம்? உள்ளடக்கமா? அல்லது உருவமா?'* என்பதான வினாவை முன்னிறுத்தியமைந்த இவ்வகை விவாதங்கள் பலமட்டங்களில் நிகழலாயின. அதேவேளை முற்போக்குவாதிகளிடையிலும் தத்துவநிலைப்பட்ட விவாதங்கள் உருவாயின. குறிப்பாக, *மார்க்ஸிய நோக்கு* என்பதை விளக்கியுரைப்பதில் இவர்கள் முரண்பட்டுநின்றனர். இவ்வகைகளில் தொடர்ந்து நடைபெற்றுவந்த விவாதங்கள் பலவற்றாலும் சமகாலத் தமிழ்த் திறனாயவியல் புதிய வளர்ச்சிநிலைகளை எய்தியது.

(தொடரும்)

# கொ(ை)ல வெறி

முகவரி பதித்த
மூத்த தமிழ்
நிலை கெட்ட கரத்தினால்
நிர்வாணமாக்கப்பட்ட
கொலை வெறி!

அமுதென்று அழைத்து
அருந்தும் தமிழும்
உயிருக்கு நேர் என்ற
உறவுக் கண்ணும்
குருடாக்கப்பட்டு
கொலைத் தளத்திற்கு
கொண்டு போய்ச் சேர்த்த
ஒருகோழையின்
கோலிது!

மறத் தமிழனின்
அறத்தமிழ்
அந்நியமாக்கப்பட்டு
ஆங்கில மொழியாளை
அசிங்கமாய் நக்கிய
அற்பப் புத்தி!

தட்டுப்பாடு
தமிழுக்கில்லை என்று சொன்ன
தாரக மந்திரம்
தவிடு பொடியாகி
மாற்றான் தோட்டத்தில்
மானம் தொலைத்து
டேக் இட் ஈஸி என்று
உளறிக் கொட்டிய
உள நோயாளியின்
பட்டியலில்
இந்தக் கொலையாளியும்!

பட்டுச்சால்வை
பதக்கம் பாராட்டு
இவைகளுடன்
துட்டுக்கும் துணைபோன
பாட்டு வரம்
தமிழ்த் தாயை விற்ற
தமிழ் மகனின்
மட்டத்தைத் திறந்து காட்டிய
மனக்கதவு!

ஓ!
பாட்டுக்குப் பக்குவம் சொல்ல
பாரதி இருந்தான் என்றால்
சாரதியாகிச்
சரித்திருப்பான்
கவிதைக்குக் கண்வைத்த
கண்ணதாசன் கேட்டிருந்தால்
அவனது
காலணிகூடக்
காறித்துப்பியிருக்கும்!

வடமிழுக்கும் எங்களின்
வண்ணத் தமிழை
கடப்பவன் எவனோ
அவன்
கபோதி என்றாலும்
கண்டிப்பாய்
மன்னிக்க மாட்டோம்!



- பதியத்தளாவ பாறூக்



படிப்பகம்

www.padippakam.com

தமிழகச் செய்தி மடல்

# முட்டிமோதும் அரசியல் கட்சிகள்! அ.தி.மு.க.தேர்தல் வியூகம் பலிக்குமா?

–கே.ஜி.மகாதேவா

தமிழ் நாட்டில், முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் உயிர்த்தோழி சசிகலா கலைஞர் ம.நடராஜன் உட்பட நெருக்கமான உறவினர்கள் கைது செய்யப்படுவது கடந்தகாலம் அரங்கேறியிருக்கும் அதே நேரம் மறுபக்கம், ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கின் உச்சநிலை களைகட்டத் தொடங்க, இம் மாதம் 18ஆம் திகதி, அ.தி.மு.க.அரசின் நாடித்துடிப்பைப் பார்க்கும் சங்கரன் கோவில் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தலைதூக்கியிருக்கும் நான்கு முனைப் போட்டி தமிழக அரசியலில் ஒன்பது மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஜெயா மாற்றத்தை மாற்ற, சற்று உரசிப்பார்க்கும் கணக்காக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் எடைபோடுகின்றனர்.

வெற்றி நமதே என்றும், தேர்தல் திருவிழாவில் தேரில் அமரப் போவதும், தேரை அ.தி.மு.க.ஊர் கொண்டு இழுக்கப்போவதும் நிழலல்ல நிஜம் என்றும் உரத்துக் குரலில் கூறும் அ.தி.மு.க.மேலிடம் தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே 'பந்திக்கு' முந்தி வீடு தோறும் 'விளக்கு' ஏற்றி, தனது தேர்தல் உழவாரத்தை, கனகச்சிதமாக செய்து முடித்து விட்டனர். சுமார் இரண்டு லட்சம் வாக்காளர்களைக் கொண்ட சங்கரன் கோவில் வட்டத்தையே, விலையில்லா (இலவச) பொருள் கொண்டு சுருட்டி மடக்கி வெற்றிக்களிப்பில் திளைக்கின்றனர் அ.தி.மு.க.சூப்பர் தேர்தல் பட்டாளம்! அடேங்கப்பா... அந்தத் தனித்தொகுதியை 'கவனிக்க' இம்மாதம் முதல் 32 அமைச்சர்களுடன் 11 கழக முதன்மை நிர்வாகிகளுமாக மொத்தம் 43 பேர்கொண்ட தேர்தல் பணிக்குழுவினர் முழுவீச்சில் இறங்கியதன் மூலம் மதுரையையும் மிஞ்சிவிட்டது இப்புதிய 'தூங்கா நகரம்' சங்கரன் கோவில்! 'கடந்த வருடம் நடை பெற்ற சட்டமன்றத் தேர்தலில் 10,000 அதிகப்படியான வாக்குகளினால் அ.தி.மு.க.இங்கு வெற்றிபெற்றது. இம்முறை முப் பதினாயிரம் கூடுதல் வாக்குகளினால் அ.தி.மு.க. இத்தெகுதியை தக்கவைக்க வேண்டும்...' என்பதே தொண்டர்கள் உச்சரிக்கும் அம்மாவின் மந்திரவார்த்தைகள்.

ஆயிரம் உண்டு இங்கு சாதி என்றார் பாரதி. அவர் கணிப்பு இன்றும் பொய்க்கவில்லை. சங்கரன் கோவிலிலும் சாதித்துவம்தான் வெற்றிக்கு தோள் கொடுக்கப்போகின்றது. ஆட்சியாளரின் தப்புத் தாளங்களைக் கண்டுபிடிக்கும் எதிர்க்கட்சிகள் சட்டப்பேரவையில் ஒட்டுமொத்தக்குரல் எழும்பினாலும், அரசுக்கு பாடம் போதிக்க ஒரு பொது வேட்பாளரை நியமிக்க பின்வாங்குவது அரசியல் அநாகரீகம் என்று கருதுகிறார்கள் போலும்!

**கைது படலத்தின் பின்னணியில் இப்படி ஒரு அரங்கேற்றமா?**

"அக்காவுக்கு எதிராக வாய் திறக்க மாட்டேன்' என்று ஜெயா - சசி பெயர்ச்சிக்குப் பின்னர் உறவுகள் மத்தியில் விடாக் கண்டனாக நீடித்த சசிகலாவுக்கு,மிகவும் நெருக்கமானவர்கள் மந்திரப் பொடிவீசி மனதை மாற்றி, ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் திசை திருப்பலாம் என்ற செய்தி அம்மா காதுகளுக்கு எத்தனை வேகத்தில் பறந்ததோ அதே வேகத்தில் 'பூமரங்' திருப்பிவிடப்பட்டது. வாக்கு மூலமளிக்க சசிகலா பெங்களூர் நீதிமன்றம் நுழைந்த அதே நாள் சசி கணவர் ம.நடராஜன் சென்னையில் கைது செய்யப்பட்டார். சசிகலா மட்டுமல்ல இவரது அண்ணி இளவரசி, சுதாகரன் ஆகிய மூவரும் , சொல்லிக் கொடுத்ததை கிளிப்பிள்ளை மாதிரி ஜெயா வழக்கில் வாக்கு மூலம் அளிக்கவேண்டும் என்பதற்காகத்தான் சசிகலா தம்பி திவாகரன், உறவினர் ராவணன் ஆகியோரும் கம்பி எண்ணுகிறார்கள் என்பது தமிழக ஊடகங்களின் மகா கண்டுபிடிப்பு. "ஜெயலலிதாவுக்கு எதிலும் தொடர்பில்லை, செயல்படாத பங்குதாரர், நான்தான் பொறுப்பு" எனும் மந்திரவார்த்தையை சசிகலா மாதிரி ஏனைய இருவரும் 'ஜெபிக்க' வேண்டும் என்பது தான் எதிர்பார்ப்பாம். அதாவது, வழக்கு மூலங்கள் பதிவாகும் வரை 'உள்ளே'தான் போலும்!.

**சாதிவாக்குகள் பிரிவு எதிரொளி அ.தி.மு.க.வுக்கு சாதகமான நிலை!**

சட்டப்பேரவையில் முதல் அமைச்சர் ஜெயலலிதா உரையாற்றுகையில், சங்கரன் கோவில் இடைத்தேர்தலில் போட்டியிட உங்களுக்கு திராணி உண்டா என்று தே.மு.தி.கழகத்தினரையும் அதன் தலைவர் விஜயகாந்தையும் பார்த்து சவால் விட்டாலும் விட்டார்... விழுந்தாலும் மீசையில் படாது என்று சவாலை ஏற்றுக்கொண்டு களத்தில் இறங்கிவிட்டார் விஜயகாந்த். இதன் மூலம் இத் தொகுதியில் அ.தி.மு.க., தி.மு.க, ம.தி.மு.க. வுடன் தே.மு.தி.க.வும் தேர்தலில் குதித்துவிட்டது. கட்சி ஆதரவாளர்களைவிட சாதி வாக்குகள் இங்கு கொடிகட்டிப்பறக்கிறது. இந்த நிலையில், சங்கரன் கோவில், அ.தி.மு.க.வின் கோட்டையாக இதுவரை நீடித்தாலும், 43 பேரைக் கொண்ட தேர்தல் படையுடன், இலவசப் பொருட்களை ஒரு பங்கீட்டு அட்டை விடாமல் வீடு தோறும் வாரிக்கொடுத்து. அரசு இயந்திரத்தையும் முழுவீச்சில் அ.தி.மு.க. முடுக்கிவிட்டதைப் பார்க்கும் போது, நிச்சயம் அ.தி.மு.க.வுக்கு உள்காய்ச்சல் இருக்கிறது! மின்வெட்டும் பயமுறுத்துகிறது! இதனையும் மீறி அ.தி.மு.க.வுக்கு வெற்றி முகாம் கிடைக்க வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

என்றால் சாதி, கட்சிகள், அடிப்படையில் வாக்குகள் பிரிந்து, சாதகமான நிலை உருவாகவேண்டும்! இம்மாதம் 21ஆம் திகதி மக்கள் தீர்ப்பு தெரிந்துவிடும். சுய செல்வாக்குகளுடன் தனிமுகங்களாக களத்தில் நிற்கும் மூன்று அரசியல் கட்சிகளுக்கும் அ.தி.மு.க.வுக்கு மூக்கணாங்கயிறு போடுமா? வியூகம் பலிக்குமா?

**ராஜராஜசோழன் மன்னனுக்கு சாதி பார்க்கப்படுகிறது!**

சாதிகள் இல்லையடிபாப்பா... சாதி இரண்டொழிய வேறில்லை...ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றெல்லாம் முழக்கங்கள் ஓங்கி ஒலித்து மறையும் நிலையில், சாதியை விட்டால் அரசியல் நடத்தமுடியாத அளவுக்கு சாதிக்கட்சிகள் வேரூன்றி விருட்சமான தமிழ்நாட்டில், ஆயிரம் ஆண்டு கண்ட மன்னன் ராஜராஜசோழனையும் இன்று சாதி விட்டுவைக்க வில்லை! ராஜராஜசோழன் என்ன சாதியைச் சேர்ந்தவர் என்பது குறித்து சில அமைப்புகளும், இந்த அமைப்புகளைச் சேர்ந்த சமூக ஆய்வாளர்களும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டு உரிமை கொண்டாடிவரும் பிரச்சனை, விரைவில் நீதிமன்றப்படிகள் ஏறும் என்று பேசப்படுகிறது.!

ராஜராஜசோழன் தேவர் இனத்தைச் சேர்ந்தவர் என்று தேவர் சமூகப் பிரமுகர்கள் வெளியிட்டு வரும் கருத்தை முற்றிலுமாக மறுக்கும் மள்ளர் சமூக ஆய்வாளர்கள், ராஜராஜ சோழன் தேவேந்திர குல வேளாளர் இனத்தைச் சேர்ந்த மள்ளர் மரபினர் என்று ஆதாரங்களுடன் முத்திரை குத்துகின்றனர். இது சம்மந்தமாக மள்ளர் நாடு அமைப்பின் தலைவர் சு.ப.அண்ணாமலை கருத்து வெளியிடுகையில் "ராஜராஜ சோழன் வழிபட்ட தெய்வம் இந்திரன். இந்திரனுக்கு விழா கொண்டாடியிருக்கிறார். மன்னரின் நிலம், ஐவகை நிலங்களில் ஒன்றான மருதம் மருதநில மக்களின் கடவுள் இந்திரன் மள்ளர்கள்தான் மருத நிலத்துக்கு சொந்தக்காரரர்கள். அங்கிருந்துதான் சேர, சோழ, பாண்டியர்கள் தோன்றினார்கள் என்று இந்திய பல்கலைக்கழக தமிழாசிரியர் மன்றம் மற்றும் மதுரை பல்கலைக்கழகம் இணைந்து, மள்ளரியம் குறித்து நடத்திய ஆய்வில் தெரிவித்திருக்கிறார்கள். திருமுருகாற்றுப்படையில் நக்கீரரும், இராமாயணத்தில் கம்பரும், மள்ளர்கள் வேளாண் மக்களாகவும், படைவீரர் களாகவும் காட்டியிருக்கிறார்கள். ராஜராஜசோழன், மள்ளர் வம்சாவழி என்று அகநானூறு, புறநாநூறு, கலித்தொகை. பரிபாடல் என்று 49 இலக்கியங்களில் வருகிறது......" என்று அடித்துக்கூற. முக்குலத்தோர் பாதுகாப்பு பேரவை நிறுவுநர் செங்குட்டுவன், வாண்டையார்,

"1910 ம் ஆண்டு கல்வெட்டுகளில் மன்னரை ராஜராஜதேவர் என்று வெட்டப்பட்டுள்ளது. தேவர் என்பது கள்ளர் சமுதாயத்தில் ஒரு பட்டப்பெயர். ராஜராஜசோழனின் இயற்பெயர் அருண் மொழித்தேவன். தேவன் எனும் பெயர் தேவர் பட்டத்தையே குறிப்பிடுகிறது. ராஜராஜதேவன் பெயரில் வெள்ளிக்காசுகள் இன்றும் வரலாற்றுச் செப்பேடுகளாக உள்ளன. தந்தை சுந்தரசோழத்தேவர். அவரது தாயார் வானவன்தேவி, கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். மன்னரின் பாட்டி, மழவராயர் மகள் செம்பியன் மாதேவி என்று அழைக்கப்பட்டாள். மழவராயர் என்பது, கள்ளர் பட்டத்தின் ஒரு பிரிவு. சோழ மன்னர் கள்ளரே என்று " தமிழக ஊரும் பேரும்" நூலில் ரா.பி சேதுப்பிள்ளை வலியுறுத்தி உள்ளார். ராஜ ராஜ சோழன் கள்ளர் என்பதற்கு வரலாற்று சுவடுகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள் என்று நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன'. என்று முத்திரை பதிக்கிறார் செங்குட்டுவன் வாண்டையார். ராஜ ராஜ சோழன் மன்னரா? கள்ளரா? ஆயிரம் ஆண்டுகள் ஆகியும்....?.!

**இப்படியும் நடக்கிறது**

✤ கனடாவிலிருந்து தமிழ்நாடு வந்து "விஜய்" தொலைக்காட்சியின் பிரபல 'சூப்பர்சிங்' சிறந்த பாடகர் போட்டியில் கலந்து கொண்டு, தொலைத்துவிட்ட ஈழத்து தாயக உறவை எண்ணி "மறந்து போகுமோ மண்ணின் வாசனை" என்று ஒலித்த வல்வெட்டித்துறை கெருடாவிலைச் சேர்ந்த நவநாதன் சரிகா எனும் சிறுமியின் குரலில்..... அந்த வேப்ப மரம், மரத்தில் இருக்கும் பறவை , அதன் கூடு, கடல், காற்று , சுவர்க்கம் என்று எல்லாமே மண்ணின பெருமையை உணர்வூற்றுச் சித்திரமாக வடிவத்தை உருக்கமாகப் பார்த்து, நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் மட்டுமல்ல நீதிபதிகளின் கண்களும் குளமாகிவிட்டன. இந்தச்சிறுமி பிறந்தது கனடாவில். ஈழத்தில் கால் பதிக்காவிட்டாலும்,உணர்வுகள் எல்லாம் அந்த மண்ணை எண்ணித்தான். தொலைக்காட்சியில் மட்டுமமின்றி, இணையத் தளத்தில் கண்ணுற்ற பலரும் கண்கலங்கினார் என்று தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

✤ மட்டக்களப்பின் சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இராணுவக் கொடுமையில் வாழ்க்கையைத் தொலைத்த 13 வயது சிறுமி எதிர்கொண்ட பாலியல் கொடூரம் அவள் வயிற்றில் ஒரு சிசு. சிறுமிக்கு எய்ட்ஸ் என்றால், பிரசவித்த குழந்தைக்கும் எய்ட்ஸ் என்று திரைச்சித்திரத்தை உணர்வூற்றியிருக்கிறார் இயக்குனர் புகழேந்தி தங்கராஜ். "உச்சிதனை முகர்ந்தால்" சிறுமியின் நடிப்புக்கு அந்த பாத்திரத்தின் அச்சுக்கு எந்த உயர் விருதும் தாராளமாக வழங்கலாம். திரையில் ஒலித்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் "எழுவாய் தமிழா நெருப்பாய்" வைரவரிகள் நெஞ்சில் ஊடுருவியது மட்டுமல்ல. தமிழகத்தின் பலரது செல்போன்களின் அழைப்பு இசையாக தமிழுணர்வை மீட்கிறது.

✤ இந்திய காங்கிரஸ் கட்சிக்கு, இலக்கம் 40 மிகவும் பொருத்தம். நேரு, தனது தந்தை மோதிலால் நேருவிடமிருந்து காங்கிரஸ் தலைமையை ஏற்றபோது நெருவுக்கு வயது 40. மகள் இந்திரா காந்தி காங்கிரஸ் தலைவியானபோது அவள் வயது 40. இப்பொழுது தலைமைப்பதவிக்கு ராஜீகாந்தி மகன் ராகுல்காந்தி பெயர் அடிபடுகிறது. ராகுலுக்கு இப்போது வயது 40 வயது.



படிப்பகம்

www.padippakam.com

# படித்ததும் கேட்டதும்



கே.விஜயன்

## திருச்சியில் இருந்து நாமக்கல் வரை

பட்டாபிராமன் இருக்கிறாரே இவருக்கு பத்திரிகை மன்னன் என்ற பெயரும் உண்டு. பத்திரிகைகளை வாசிப்பதே அலர்ஜி என்றாகிவிட்ட எங்களுக்கெல்லாம் ஐயோ பாவம் உலகம் தெரியாத அப்பாவியாக பட்டாபிராமன் இருக்கிறாரே! அச்சுக்கலை கம்பியூட்டர் மயமாகிவிட்ட இவ்வுலகில் அடப்பாவமே ஏன் இப்படி பத்திரிகை பத்திரிகையாக பப்பிளிஸ் பண்ணியிருக்கிறார்? என்ற பரிதாப உணர்வு மனதிற்குள் அங்கலாய்ப்பு அலையாக எழுவது இயல்புதானே.

அய்யய்யோ தவறான எண்ணத்தால் ரொம்பவும் அங்கலாய்ப்பில் அலட்டிக் கொள்ளாதீர்கள். பட்டாபிராமன் பத்திரிகையாளரும் அல்லர், பத்திரிகை பப்பிளிஸ் பண்ணுபவரும் அல்லர். மனுஷன் பழம் பத்திரிகை சேகரிப்பாளர். ப்பூ அம்பிடுதானா? என்று அலட்சியப்படுத்துபவர்கள் மத்தியில் அடடா நல்லதா போய்டுச்சி என்று ஆர்வமுடன் சூள்கொட்டுபவர்களும் இருக்கிறார்கள். பத்திரிகைகளின் விலை எக்கச்சக்கமாக ஏறிவிட்ட காலம் இது. நாளிதழ் ரூபா 25 என்றால் ஞாயிறு மலர் ரூபா 50 க்கு மேல்தான். பழம் பத்திரிகை சேகரிப்பு வியாபாரியிடம் தள்ளிவிட்டால் செலவில் கொஞ்சம் தேறும். ஐயா அது அந்தக்காலம் நிலைமை தலைகீழாகிவிட்டது ஆசியாவின் கனவாகிவிட்ட ஸ்ரீ லங்காவில் பாணைக் கூட செய்திப்பத்திரிகைகளில் பொதி செய்யக்கூடாது என்று அதிகார பூர்வமான அறிவித்தல் வந்ததோ இல்லையோ மள மளவென பழம் செய்திப் பத்திரிகையின் விலை கிலோ ரூபா 5 வரை அதலபாதாளத்திற்கு தலைகுப்புற கரணமடித்து விட்டது.

இந்த நிலையில் தமிழகத்தின் திருச்சியில் ஒரு மனிதர் பழம் பத்திரிகை சேகரித்து பத்திரிகை மன்னன் பெயர் எடுத்திருக்கிறார் என்றால் விழுந்தடித்துக் கொண்டு வந்து ஐயாவின் முகவரியைக் கொடுங்கள் கொடுங்கள் என்று பிச்சுப் பிடுங்காமல் இருக்கவா போகிறீர்கள்.

பொதுப்பணித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருக்கும் பட்டாபி பன்னாட்டு கண்காட்சிகள் நடத்தும் பழக்கமுள்ளவர். நாங்கள் திருச்சியில் இருந்தபோது இவருடைய கண்காட்சியைப் பார்க்கப் போயிருந்தோம்.

“அடேயங்கப்பா!”

என்று மலைத்துப்போனோம். திருச்சி வாசவி மகாலில் ரோட்டரி கிளப்பின் சார்பில் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கிட்டதட்ட 6 ஆயிரத்திற்கும் அதிகமான தழிழ்ப்பத்திரிகைகளை மனுஷன் குவித்து வைத்திருந்தார். அனைத்தும் பல்வேறு நாடுகளில் பிரசுரமான தமிழ்ப்பத்திரிகைகளின் ஒவ்வொரு பிரதிகள் பார்வைக்கு அழகாக வரிசைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. உலக நாடுகளில் 3 ஆயிரம் தமிழ் வார இதழ்கள் வெளிவருகின்றன. இவற்றில் 2900 பத்திரிகைகள் பட்டாபியிடம் உள்ளன. தமிழில் 10 ஆயிரம் பத்திரிகைகள் தோன்றி மறைந்துள்ளன. அவற்றில் 3 ஆயிரம் பத்திரிகைகளை சேகரித்து வைத்துள்ளார். இவருக்கு பத்திரிகை மன்னன் என்று பாராட்டு கொடுக்காமல் இருக்க முடியுமா என்ன?

தமிழ் அன்னை மீது காதல் என்றால் இதுவன்றோ காதல்.

நான்காம் நாள் நண்பர்கள் எல்லாரும் சென்னைக்கு சென்றுவிடவே, ரம்யா ஹோட்டலில் நான் தனித்துவிட்டேன். பகல் பொழுதில் டென்மார்க் எழுத்தாளர் ஜீவகுமாரன் இருந்தார், அவர் ஒரு லெக்சருக்கு செல்ல வேண்டியிருந்தது. கூடவே நானும் கொஞ்சம் சுகயீனமாகவே தவிர்த்துவிட்டேன். பட்டாபி அறைக்கு வருவதாக கோலடித்தார். சரி, அவருக்காக காத்திருப்போமே என்ற முடிவுடன் அறையில் இருந்தேன். அதற்கிடையில் சாரதா புடைவைக் கடைக்கும் சென்று வந்தேன்.

இரவு செறியத் தொடங்கிவிட்டது. பட்டாபியைக் காணோம். வீதியில் ஒரு சுற்றுச் சுற்றி கலகல! வென்றுருந்த வாகன வீதியில் அச்சத்துடன் அங்குமிங்கும் ஒரு புத்தகக் கடையில் மூச்சிறைக்க நின்றேன். பக்கத்தில் சிரிப்புச் சத்தம் கேட்டது. முதுகைத் தட்டிய ஒருவர்! சேட்டன் ஹோட்டல் ரம்யாவிலானு தாமசிக்கினது.- அண்ணன் ஹோட்டல் ரம்யாவிலா இருக்கிறீர்கள்.

“ அதே! ஆம்!”

அவர் ஒரு கேரளாக்காரர். நண்பர்களாகி விட்டோம்.பசையுள்ளவர் போலும். அவரும் சகதர்மிணியுமாக வந்திருந்தார்கள். சாப்பாட்டுக் கடைக்கு கூட்டிக்கொண்டு போனார். சுவையான டிபன் தாராளமாக வாங்கித் தந்தார். ஸ்ரீலங்காவிற்கு கொண்டுபோமன் என்று ஒரு டசின் மாதுளம்பழம் வாங்கித்தந்தார். அசந்துதான் போனேன். திருச்சியில் பல இடங்களில் இந்த அனுபவம் எனக்கு ஏற்பட்டது. நான் சந்தித்த பலருக்கும் என்னை நன்றாகப் பிடித்து



படிப்பகம்

www.padippakam.com

விட்டது. ஏனோ தெரியவில்லை. இந்த அனுபவம் எனது நண்பர்கள் உட்பட பட்டாபி, ஒரு ஆட்டோ ரைவர், சாரதாவில் ஒரு சேல்ஸ் பையன், விமான நிலையத்தில் ஓர் ஆபிசர், விமானத்தில் எனக்கருகில் அமர்ந்து வந்த ஓர் இளம் வாலிபர் அனைவரும் பெரும் பெரும் உதவிதான் செய்தார்கள்.

நண்பர்கள் சென்னை சென்ற அன்று மாலை ரம்யாவிலிருந்து ஏதாவது சின்ன லாட்சிக்கு செல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன். லண்டன் எழுத்தாளர் உதயணன் என் அறைக்கு வந்தார் "விஜயன்" நீங்கள் எங்கும் போகவேண்டாம். இங்கே இருங்கள் ஹோட்டலுக்கான செலவு அனைத்தையும் கொடுத்து விட்டேன். நீங்கள் போகும் போது கையை ஆட்டிக் கொண்டு சுகமாகப் போய்விடுங்கள்' என்றார். மலைத்துப் போனேன்.

ஹோட்டல் ரம்யாவிற்கு கேரள தம்பதிகளுடன் மறுபடியும் நுழைந்தால் பட்டாபியை இன்னும் காணவில்லை. கேரள தம்பதிகளுடன் அவர்கள் அறையில் உரையாடிவிட்டு வெளியில் வந்தால் பட்டாபியை காணவில்லை. கொஞ்ச நேரம் லொபியில் பத்திரிகை வாசித்துக் கொண்டு அறைக்கு வந்தபோது திக் கென்றது. பாக்கெட்டில் அறைச் சாவியைக் காணவில்லை.

கொஞ்சம் யோசித்தபோது நினைவு வந்தது.ஓ ! அந்த கேரள தம்பதிகளின் அறையில் வைத்துவிட்டேன் போலும்

" அடடா!" அவர்கள் எந்த அறையில் இருந்தார்கள் தெரியவில்லையே! அரட்டிக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தேன். அறைகளெல்லாம் பூட்டியே கிடக்கின்றன. தட்டிக் கேட்பது சரியில்லையே தலையை பிய்த்துக்கொள்ளலாம் போலிருந்தது.

சந்தேகத்துடன் சில கதவுகளின் அருகில் போய் முழுசி முழுசிப் பார்த்தேன். இதைக் கவனித்துவிட்ட முரட்டுத் தோற்றம் கொண்ட ஒரு ஹோட்டல் சேவகனுக்கு சந்தேகம் வந்துவிட்டது.

'சார்! என்னதேடுறீங்க?"

அடித்துவிடுவது போலக் கேட்டான்

ரூம் நம்பர் தெரியல்ல! நான் முக்கி முணங்கினேன்.

"என்னது ரூம் நம்பர் தெரியல்லியா? வந்து சேர்ந்துட்டாங்கடா சாமி! என்று எகிறிப் பாய்ந்த அவன் " வாங்க சார்" வாங்க என்று சொல்லி லொபிகு கூட்டிக் கொண்டே வந்துவிட்டான். அடித்து இழுத்து வராத குறைதான். வரவேற்பறையில் இரு இளம் பெண்கள்தான் இருந்தார்கள் "கேட்டீங்களா கதையை, நம்ம ஸ்ரீலங்கா துரைக்கு ரூம் நம்பர் தெரியல்லியாம் ரூம் நம்பர் மதுரை வீரன் எம்.சி.ஆர் மாதிரி சுத்திச் சுத்தி வந்துகிட்டிருக்கார்.சொன்ன தோரணையில் பெண்கள் இருவரும் கன்னங்கள் சிவக்க விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

எப்படியோ விசயம் பைசலாகி அறைக்குள் நுழைந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அறை மணி அடித்தது. சட்டென கதவைத் திறந்ததும் அம்மாடி! என்று நான்கடி பின்னால் பாய்ந்தேன். தமிழ் மக்கள் வாழும் யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பையும் ஆட்டிப்படைக்கும் கிறீஸ் மனிதன், தலையிலும் காலிலும் பெரும் கட்டுகளுடன் வாசலில் நின்று பல்லைக்காட்டிக் கொண்டிருந்தான். பாவி மகனே! வாசம் பிடித்து இங்கேயும் வந்துட்டியான்னு நடுங்கித்தான் போனேன்.

அது நம்ம பட்டாபிராமன் தான். ஹோட்டல் ரம்யாவை நோக்கி மோட்டார் சைக்கிளில் மாலை 6 மணிக்கு பறந்து வந்திருக்கிறார். முழுநாளும் என்னோடு இருக்கிறது தான் திட்டம். வரும் வழியின் பாதையில் சறுக்கி பலத்த அடி. சிகிச்சை பெற்ற பின்னர் அத்தனை படுகாயமடைந்தும் என்னை விமான நிலையம் அழைத்துச் செல்வதற்கு வந்திருந்தார்.

எனக்காக ஓர் ஆட்டோவை இரவு ஒரு மணிக்கு ஒழுங்கு படுத்துவதற்காக திருச்சி வீதியெல்லாம் அலைந்து திரிந்து களைப்புடன் திரும்பினார். ஒரு பயலும் முடியாது என்கிறான் என்று கவலையையும் சொல்லி, தாராளமாக பஸ் வண்டி இருக்கு போய்வரலாம் என்றார். ஈஸ்வரா! நட்பின் ஈரம் இதுவன்றோ.

நடுச்சாமத்தில் லொபியிலிருந்து அழைப்பு வந்தது. யாரோ தேடி வந்திருக்கிறார்களாம். இந்த நேரத்தில் யாருடா இது என்று நடுக்கமுடன் சென்றால் முருகன் என்றொரு ஆட்டோ டிரைவர். விஜயன் சார் தானே! மூணு நாளைக்கு முன்னே எயார்போர்ட் போகனும்னு வரச் சொன்னீங்களே சார். நான் தான் என்றான். திகைப்பால் என் மூச்சடங்கும் போல் இருந்தது. என்னோடு வந்து என் பொதிகளை எல்லாம் பட்டாபியும் அவருமாக சுமந்து விமான நிலையத்தில் டிரொலிகளையும் இழுத்து சொன்ன கட்டணத்தை விட குறைவாக எடுத்து........... மனிதாபிமானம் உலகில் தொலைந்து போய்விட்டது என்கிறார்களே என்னால் நம்ப முடியவில்லை (தொடரும்)

## திலகபாமாவும் வெங்கடேசனும்

கவிதாயினி திலகபாமாவும், எழுத்தாளர் வெங்கடேசனும் ஸ்ரீலங்கா வந்திருந்தார்கள். 17.01.2012 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் ஓர் இலக்கிய உரையாடலில் கலந்து கொண்டார்கள்.

பின் நவீனத்துவம், பெண்ணியம் என்பன குறித்து அவரவர் பாணியில் தெளிவாகச் சொன்னார்கள். பாராட்டத்தான் வேண்டும்.

அடேயங்கா இந்த ஆளுக்கு பாராட்டவும் தெரிகிறதே என்று சில தவறான கணிப்பாளர்கள் அசந்து போகவும் கூடும். அந்த கருத்துகளுக்கு ஏற்புடையவனாக இருக்கக் கூடும்.அதுதான் இந்த பாராட்டு என்று எனது பத்திகளின் மீது கசந்த மனம் கொண்டவர்கள் கண்களை சிமிட்டிக்கொள்ளக் கூடும்.

அதுதான் இல்லை

வெங்கடேசனும், திலகபாமாவும், தாம் எந்த கருத்துத் தளத்திலிருந்து இலக்கியம் படைக்கிறார்களோ அவற்றைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவை குறித்து தெளிவாகப் பேசுகிறார்கள்.

இலக்கியத்தில் அரசியல் உறைந்து கிடக்கிறது என்று அடித்துச் சொல்லும் வெங்கடேசன் எழுதிய படைப்பு வாசகனுக்குச் சென்று. அவன் வாசித்த பின்னர் படைப்பாளி மரணித்து விடுகிறான். வாசிக்க வாசிக்க படைப்பு வாழ்ந்து கொண்டிருக்கிறது. என்று அந்நூல் வாசிப்புக்குள்ளாவது நின்று விடுகிறதோ, அன்று அதுவும் மரணித்து விடுகிறது. அந்த நூலுக்கு "ஆமேன்" சொல்லிவிட வேண்டியதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

"ஐய்யோ அம்மா!" அதற்குமேல் மனுஷன் என்ன சொல்கிறார். என்று புரிந்து கொள்ள முடியாமல் தலையை பிறாண்டித் தள்ளவேண்டியதாயிற்று

பின்நவீனத்தின் இதுவரையிலான வரலாறு எங்களுக்கும் தெரிந்துதான். அவரும் அதை தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார். அதற்குத்தான் பாராட்டு.

"அது சரி" இந்த தளத்திலிருந்துதான் படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். அதனை எவ்வாறு உங்கள் படைப்புக்களில் வெளிப்படுத்துகிறீர்கள்" இன்னும் விசயத்தை தெளிவாக புரிந்து கொள்ளும் எண்ணமுடன் கேள்வியைத் தொடுத்தால்.

தனது பெரும் நாவலான தாண்டவராயன் நாவலின் கதையைச் சொன்னார். அச்சடா! அப்படியே பல புராணங்களின் கலப்படமான பிரதாபமுதலியார் சரித்திரம்தான்.

கவிதாயினிக்குப் போவோம்.

உங்கள் அம்மாவும், பாட்டியும் காப்பாற்றி வந்த மரபுகளை சகோதரி திலகபாமா ஏன் உடைத்தெறியப் பாடுபடுகிறார்?

ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன் பாமாவை சீறியெழச் செய்யும் விதமாக கேள்வி , குண்டுசி ஒன்றை நறுக்கென செலுத்தினார். திலகபாமா அசந்து விடவில்லை, அசத்தலாகப் பதிலுரைத்தார்.

"நான் பெண்ணியச் செயல்பாட்டாளர் அல்ல காலச்சுமையும், வாழ்விற்கான பொருளாதார தேவைகளும் குடும்பங்களில் பெண்களுக்கிடையான இருக்கின்ற கட்டுக்கோப்புக்களை அம்மாவும் பாட்டியும் பேணி வருகின்ற நிலையில் இன்றைய பெண்ணானவள் அவற்றை மீறுகின்ற போது அம்மாவும் பாட்டியும் அதிர்ந்து போகிறார்கள். இவை இயல்பான மீறல்கள், புதிய காலத்திற்கான புதிய கட்டுக்கோப்புக்களுக்கு அழைப்போசை விடுப்பவை. எனது படைப்புக்கள் அதனை வெளிப்படுத்துகின்றன. திலகபாமா பதில் அழுத்தமாகவும் அசத்தலாகவும் இருந்தது.

மறுமலர்ச்சிகாலம், முற்போக்கு இலக்கியக் காலம், தமிழ் தேசிய இலக்கியக்காலம் என்ற கோட்பாடகளினூாடே நமது இலக்கியப் பயணம் தொடர்கிறது.இந்த கோட்பாடுகளினூடே டீம் டீம் மாக செயல்படும் நமது ஜாம்பவான்கள் அவற்றின் அடிப்படைக் கூறுகளை தெளிவாகப் புரிந்துதான் செயல்படுகிறார்களா என்பது கேள்விக்குறியாகவே எனக்குள் இருக்கிறது. முரண்பாடான கருத்துக்கள் காலத்தின் தேவை. கோட்பாடு ஒன்றினை சுமூகமான உரையாடல்களின் மூலம் அடைவதற்கான கால நேரம் நமக்கு இல்லையா என்ன?

ஏதையா நேரம்? இமேஜ்ஜிற்காகவும் புகழ்மாலை, பொன்னாடை, நான் தான் பெரியவன் என்ற ஈகோ இவைகளை பாதுகாத்துக் கொள்ளவே பத்திரிகையாளர்கள் பின்னால் மரதன் ஓட்டம் போட்டுக்கொண்டிருக்கும் நமது ஜாம்பவான்களுக்கு ஏதைய்யா நேரம்.

நாம் போனால் அனைத்தும் போய்விடும் மிஞ்சுவதெல்லாம் இந்த மண்ணில் நாம் விதைத்த புதிய விதைகளே.

# என்பேனாவின் நிதர்சனம்

- சமரபாகு சீனா உதயகுமார்



என் பேனா என்னையே
முறைத்துப் பார்த்தது

கரகர.. மொரமொர..
என்று
கிறுக்கியது!
சிறு நேரங்களுக்குள்
என் மனதும்
கிறங்கியது!

அம்மா என்று எழுதிய
போது
அன்பு வாழும் இன்இதயமாய்
எனை நோக்கியது

அப்பா என்று எழுதிய
போது
அறிவு தரும் ஒரு தேடலாய்
எனக்குள் இறங்கியது

தம்பி அடம்பிடித்து அழுதான்
என்
பேனா வேண்டுமென்றான்
அவன் தொல்லை தாங்காது
போக
அன்பாக அவனிடம் நீட்டினேன்

எடுத்த எடுப்பிலேயே
'அண்ணெ என் தெய்வம்'
என்றுஉச்சரித்து எழுதினான்
உச்சரிப்பாகவும் உருப்படியாகவும்
எழுதியிருக்கிறான்
தம்பியின் உள்ளம் போலவே
அவன் எழுதிய எழுத்தும்
இயல்பாய் இருந்தது
என் கண்களின் வீச்சுக்குள்
'அண்ணெயும்'
தெய்வமாய் தெரிந்தார்

இப்ப
என் பேனாவும் என்னை
இனித்துப் பார்த்தது

'அண்ணெ என் தெய்வம்'
என்றால்
மறுத்துப் பேசவும்
ஆருமுண்டோ!
அண்ணெ எண்டால் அண்ணெதான்!



என் பேனா
தம்பியின்
கரங்களை இறுக்கிப் பிடித்து
உறவாடி நின்றது..!

என் கரங்களோ
என்னைப் போல
வெறுமை சுமைந்து சென்றது..!



படிப்பகம்

www.padippakam.com

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்



## கே. பொன்னுத்துரை

திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.கிறிஸ்டி முருகுப்பிள்ளை அவர்களின் **"மீண்டு(ம்) எழுவோம்"** சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா 21.01.2012 இல் இடம்பெற்றது. தி/ஸ்ரீ.இ.கி.மி.கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் பி.ப.3.00 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை செல்வி மு.சிறிஸ்ராவும் தலைமையுரையை திரு.எஸ்.ஆர்.தனபாலசிங்கமும் வெளியீட்டுரையை கேணிப்பித்தன் ச.அருளானந்தமும் நூல் ஆய்வுரையை திக்வல்லை கமாலும் ஆற்றினர். சிறப்புரையை நூலாசிரியரின் நண்பர் இலண்டலில் இருந்து வருகை தந்த திரு.எஸ்.தங்கவேல் ஆற்றினார்.

பீடாதிபதிகளான திரு.க.பேர்ணாட், ஜனாப்.ஏ.எல்.எம்.ரசூல், திரு.எஸ்.பாக்கியராஜா ஆகியோரும் பிரபல சிறுகதை ஆசிரியர் மூதூர் ஜனாப் எம்.எஸ்.அமானுல்லா (3CD அமைப்பு) என்பவரும் கலந்து சிறப்பித்தனர். இந்நூல் வெளிவர முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர் இலண்டனில் வசித்து வரும், திரு.எஸ்.தங்கவேல என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஐந்து வருடங்களில் திருகோணமலையிலிருந்து வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளில் "மீணடு(ம்) எழுவோம்" தனித்துவம் வாய்ந்த சிறந்த சிறுகதைகளை கொண்ட தொகுதியாக விளங்குகின்றது.

**தகவல் செ.ஞானராசா**

### பூவொன்றின் புதிய மொழி கவிதை நூல் வெளியீடு

இளம் கவிதாயினி கீர்த்தனா ராஜேந்திராவின் பூவொன்றின் புதியமொழி கவிதை நூல் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 28.01.2012 சனிக்கிழமை மாலை 'கலைக்கேசரி' ஆசிரியை திருமதி அன்னலட்சுமி இராஜதுரை தலைமையில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்தினை "இசைக்கலைமணி" திருமதி கலாராணி ஸ்ரீஸ்கந்தராஜா பாட, வரவேற்புரையை வி.ரி. ராஜேந்திராவும், வாழ்த்துரையை ஆசிரியர் வை.க. தவமணிதாசனும் நிகழ்த்தினார்கள். வெளியீட்டுரையை சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை வங்கியாளர் பொன். பாலகுமார் பெற்று சிறப்பு செய்தார்.நூல் பற்றிய மதிப்புரைகளை இ.ஸ்ரீகாந்தன், திருமதி கௌரி முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். நூலாசிரியை செல்வி கீர்த்தனா ராஜேந்திரா ஏற்புரையும், நன்றியுரையும் ஆற்றினார்.

### இலக்கியக் களத்தில் தமிழக எழுத்தாளர்கள்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெள்ளிக்கிழமைகளில் நடத்தும் இலக்கிய களம் நிகழ்வில் தமிழக எழுத்தாளர் நாவலாசிரியர் பா. வெங்கடேசன், கவிதாயினி திலக பாமா ஆகியோர் கலந்து கொண்டு இலக்கிய கலந்துரையாடலை செய்தனர். கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திருமதி பத்மா சோமகாந்தன் தலைமை வகித்தார்

### நா. சோமகாந்தனின் நினைவுப் பரவல்

ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் பரம்பரையின் முன்னோடிகளில் ஒருவரான 'ஈழத்துச் சோமு' என்ற இலக்கிய உலகில் அழைக்கப்பட்ட அமரர் நா. சோமகாந்தன் அவர்களின் அழியாச் சுவடுகளின் தடங்களைத் தரிசிக்கும் முகமாக முழுநாள் இலக்கியக் கருத்தாடல் களம் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 18.02.2012 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் 06.00 மணிவரை (முழுநாள்) 'சாகித்திய ரத்னா' பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் தொடக்கவுரையை திருமதி பத்மா சோமகாந்தன் ஆற்றினார்.அமரர் நா. சோமகாந்தன் அவர்களின் நினைவுப்பகிர்வை மொரிஸியஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர். தெ. ஈஸ்வரன், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க முன்னாள் பொதுச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் மு. கதிர்காமநாதன், டொமினிக் ஜீவா, தி. ஞானசேகரன், திருமதி அன்னலட்சுமி இராஜதுரை, கம்பவாரதி இ. ஜெயராஜ் ஆகியோர் ஆற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

சோமகாந்தனின் ' விடிவெள்ளி பூத்தது' நாவலின் (சிங்கள மொழி பெயர்ப்பு) நூலை இலக்கிய புரவலர் **அல்ஹாஜ் ஹாசிம் உமர்** பெற்றுச் சிறப்பு செய்தார்,கொடகே புத்தக மாளிகை அதிபர் தேசமான்ய ஸ்ரீ சுமன கொடகே, நாவலை சிங்கள மொழியில் மொழிபெயர்த்த உபாலி லீலாரத்ன ஆகியோர், விஜகாந்த சோமகாந்தனால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டு பெற்றார்கள்.

மாலை அமர்வில் ***கதையை மறுக்கும் கதைகள்*** என்ற தலைப்பில் வைத்தியகலாநிதி எம். கே. முருகாந்தன், "கதைகளின் கதை" என்ற தலைப்பில் தமிழக கவிதாயினி திலகபாமா, "கடன் பெற்றோமா கதைகளை" என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் செ. யோகராசா "நினைவுகளும் நிகழ்வுகளும்" என்ற தலைப்பிலும் உரையாற்ற,படைப்பாளி பா.வெங்கடேசன் "சரித்திர நாவல்களும் நாவல்களின் சரித்திரமும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள்.

***கவிதை வாசிப்பு***

வாழ்வின் பௌதீக இயங்கியலும், கவிதையின் அபௌதீக இயங்கியலும் என்ற் தலைப்பில்

தமிழக கவிதாயினி திலகபாமா தலைமையில் திருமதி ஔவை விக்னேஸ்வரன், சடாகோபன், திருமதி லறினா ஹக் ஆகியோர் கவிதை வாசித்தார்கள். நிகழ்வுகளை எஸ். எழில்வேந்தன், சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள்.

### ஒரே மேடையில் பத்து நூல்களின் வெளியீடு

அனிஸ்டாஸ் ஜெயராஜாவின் பத்து நூல்களின் வெளியீடு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மருதம் கலை இலக்கிய வட்டம் ஏற்பாட்டில் மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத் தலைமையில் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெற்றது.

வரவேற்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் நிகழ்த்த. சமூகஜோதி ரஃபிக் வாழ்த்துரை வழங்கினார், நூல்களின் பார்வையை நவமணி பிரதம ஆசிரியர் என். எம்.அமின் செலுத்தினார். நயவுரையை மேமன்கவி நிகழ்த்தினார்.

### இலக்கியக் களத்தில் தி. ஞானசேகரனின் குருதிமலை நாவல்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் வெள்ளிக்கிமைதோறும் நடத்தும் இலக்கியக்களம் நிகழ்வில் "மலையக நாவல்களில் நான் படித்ததும் பிடித்ததும்" என்ற தலைப்பில் ஓய்வு நிலை அதிபர் திருமதி நவம் வெள்ளைச் சாமி உரையாற்றினார். இந்நிகழ்விற்கு திரு. அந்தனி ஜீவா தலைமை வகித்தார். திருமதி வெள்ளைச்சாமி தனது உரையில் குருதிமலை நாவலின் பல்வேறு சிறப்புக்களையும் பல்வேறு கோணங்களில் எடுத்து விளக்கினார்.நாவல் வெளிவந்து 30 வருடங்கள் கழிந்த நிலையிலும் அந்நாவல் இன்றைய சூழ்நிலையிலும் மலையக மக்களின் பிரச்சனைகளை சிறப்புற விளக்கும் நாவலாகக் காலத்தை வென்று நிற்கிறது என்றார்.அவரது பேச்சு சபையினரைப் பெரிதும் கவர்ந்தது. தொடர்ந்து சபையோருக்கான கருத்துரை வழங்கும் நேரத்தில் தலைவர் நீண்ட நேரம் மலையக இலக்கியம் பற்றிப் பேசினார். கோ. நடேசையர்தான் மலையக இலக்கிய முன்னோடி என்றும் அவரும் நாவல் எழுதியுள்ளார் எனவும் கூறினார்.



### வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட கருத்தாடல் நிகழ்வு – 142

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 142 ஆவது மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வாக செல்வி து. நந்தீஸ்வரி எழுதிய ''உயிர்க்கும் விழுதுகள்'' கவிதைத் தொகுப்புக் கருத்தாடல் கடந்த 08.01.2012 ஞாயிறு கால 11.00 மணிக்கு, வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில், வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது.

இக் கருத்தாடலை யாழ். பல்கலைக்கழக, ஆங்கில மொழிக் கற்பித்தல் மைய சிரேஷ்ட விரிவுரையாளரும். வட்டச் செயலாளரும் ஆகிய கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் ஆரம்பித்து வைத்தார். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு. எம். சூசைதாசன் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

வவுனியா பிரதேச செயலாளர் திரு. அ. சிவபாலசுந்தரன் உட்பட வட்டத்தின் நண்பர்களின் கருத்துரையும், நூலாசிரியரின் ஏற்புரையும் இடம் பெற்றது. இந்நூல் வட்டத்தின் 24 ஆவது வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் **த. பிரதாபன்**



படிப்பகம்

www.padippakam.com

# கருத்துக்களம்



**"இன்றைய ஈழத்தமிழ்ச்சிறுகதைகள் பற்றிய தங்கள் கணிப்பு யாது?"** என்ற கேள்வியை மூன்று எழுத்தாளர்கள் - இலக்கிய ஆர்வலர்களுக்கு அனுப்பி அவர்களது பதிலை 300 சொற்களுக்குள் அடங்கக் கூடியதாக "கருத்துக்களம்" என்ற இந்தப்பகுதிக்கு அனுப்புமாறு கேட்டிருந்தோம். அவர்களது பதில்கள் கீழே தரப்பட்டுள்ளன. மாதா மாதம் இத்தகைய வெவ்வேறு கேள்விகளுடன் இப்பகுதி தொடரும். **- ஆசிரியர்**

**முருகபூபதி**
அவுஸ்திரேலியா



ஈழத்தைச் சேர்ந்த பல படைப்பாளிகள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தபின்னர் அவர்களின் படைப்புகள் ஈழத்து வாசகர்களுக்கு புதிய களங்களை அறிமுகப்படுத்துகின்றன.

புலம்பெயர்ந்த என்போன்ற வாசகனுக்கு இன்றைய ஈழத் தமிழ்ச் சிறுகதைகள் எத்தகைய வாசிப்பு அனுபவத்தை தருகின் றன என்பது சற்று சுவாரஸ்ய மானதுதான்.

ஈழப்போராட்டம் வழங்கிய போர்காலச் சிறுகதைகள், இடம்பெயர் மக்களின் அகதி, அவல வாழ்வு பற்றிய சிறுகதைகள், இவற்றினூடாக கலைத்துவமாகவோ அல்லது பிரசாரமாகவோ சாதி , ஏற்றதாழ்வு, வர்க்கப்பிரச்சினைகளை பூடகமாக உணர்த்தும் சிறுகதைகள் புகலிடத்தில் வாழும் ஈழத்தவருக்கு புதிய களத்தை அறிமுகப்படுத்தலாம்.

சிறந்த சிறுகதை எது? என்பது வாசகரின் ருசிபேதத்தில் தங்கியிருக்கிறது. ஒருவருக்கு பிடித்தமானது மற்றுமொருவருக்கு பிடித்தமில்லாமல் அல்லது எழுதப்பட்ட முறையினை புரிந்துகொள்ள முடியாமல் போகலாம்.

தற்காலத்தில் ஈழத்தில் சிறந்த சிறுகதைகள் எழுதியிருப்பவர்கள் யார்? என்ற பட்டியலை 'பட்டியல் விமர்சனம்' எழுதுபவர்களினால்தான் வெளியிட முடியும். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறுகதைகள் எழுதி வரும் ஒருவரது புதிய சிறுகதையை விட புதிதாக எழுத வந்த இளம்படைப்பாளி ஒருவரின் சிறுகதை மிகச் சிறந்ததாக அமைந்திருப்பதையும் நாம் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அவதானித்திருக்கின்றோம்.

இலங்கையில் நீண்டகாலமாக சிறந்த சிறுகதைகளை தேர்வுசெய்து அறிவிக்கும் தமிழ்க்கதைஞர் வட்டம் (தகவம்) விதந்து போற்றுதலுக்குரிய பணியினைச் செய்துவருகிறது. இந்த அமைப்பின் தெரிவுகள் சிறுகதைப் படைப்பாளிகளை மேலும் செம்மையுறுவதற்கும் வழிவகுக்கும் என கருத இடமுண்டு.

ஒரு சில மூத்த படைப்பாளிகளைத்தவிர ஏனையோர் பெரும்பாலும் இன்று சிறுகதை எழுதுவதையே நிறுத்திவிட்டனர்.

வாசகர்கள் படைப்பாளிகளிடம் நிறைய எதிர்பார்க்கின்றனர். அரைத்த மாவையே அரைக்கும் படைப்புகளை அவர்கள் விரும்புவதில்லை.

களத்திலறங்கி யதார்த்தமான சிறுகதைகளை படைப்பவர்களும் குறிப்பிட்ட களம்பற்றிய கேள்வி ஞானத்தில் சிறுகதைகளை தயாரிப்பவர்களும் ஈழத்து தமிழ்ச்சிறுகதைத் துறையில் இருக்கிறார்கள்.

கரு, பாத்திர வார்ப்பு, படைப்புமொழி நடை, வாசகரின் சிந்தனையில் ஊடுருவும் ஆற்றல் என்பவற்றால் ஒரு சிறுகதை தரமாக அமையலாம். இலங்கையில் வருடாந்தம் சுமார் ஐநூறு தமிழ்ச்சிறுகதைகள் வெளியாகின்றன. அவை அனைத்தையும் வாசிக்கும் சந்தர்ப்பம் வெளிநாட்டில் வாழும் என்போன்ற வாசகருக்கு இல்லை. இணையத்தில் ஓரளவு வாசிக்க முடிந்தாலும் அனைத்தையும் இணையத்தில் பதிவிறக்கம் செய்ய முடியாது. இந்நிலையில் நீண்ட நாட்களுக்கு மனதில் பதிந்திருக்கும் சில ஈழத்தமிழ்ச்சிறுகதைகளை வாசிக்கும் அபூர்வமான தருணங்கள் மனநிறைவைத்தந்துள்ளன.

* * *

'ஈழத்து தமிழ்ச் சிறுகதை' என்னும் பதத்தினை வசதிக்காக இலங்கையில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையரால் எழுதப்படும் தமிழ்ச் சிறுகதைகள் என வரையறுக்கலாம். சிறுகதைகளைப் பொறுத்த வரையில் (அ.) அவற்றின் கருப்பொருள்(ஆ). அழகியல் அம்சம் ஆகிய இரண்டுமே முக்கியமானவை.

ஈழத்துத்துச் தமிழ்ச் சிறுகதைகதைகளின் கருப்பொருட்கள் காலத்துக்குக்காலம் மாற்றமடைந்து வரும் போக்கினை நாம் அவதானிக்கலாம். ஆரம்பத்தில் சாதியம், வர்க்கம், சீதனம் என்பவற்றைக் கருப்பொருட்களாகக் கொண்டிருந்த பெரும்பாலான ஈழத்துச் தமிழ்ச் சிறு கதைகள் 1970 களின் நடுப்பகுதிக்குப் பின்னர் தேசிய இனப் பிரச்சினை கருப்பொருளாகக் கொள்ளத் தொடங்கின. இப்போக்கு 1980களில் அதிகரித்தது.



படிப்பகம்

www.padippakam.com

**தேவமுகுந்தன்**
கொழும்பு



1990களில் தீவிரமாக யுத்த அவலம், கைது, படையினரின் கெடுபிடி என்பவற்றை கருப் பொருளாகக் பல சிறுகதைகள் எழுதப்பட்டன.

2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் முள்ளிவாய்க் காலின் நந்திக்கடலோரத்தில் நிறைவு பெற்ற இறுதி யுத்தத் திற்குப் பின்னரான இக்கால கட்டத்தில் எழுதப்படுகின்ற பெரும்பாலான சிறுகதைகள் இறுதி யுத்தத்தின் அவலங்களைச் சித்தரிப்பதாக, தலைப்புகளில் கூட நந்திக் கடல், முள்ளிவாய்க்கால், முட்கம்பி போன்ற சொற்கள் உள்ளதை அவதானிக் கலாம்.

விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலப்பகுதியில் அவர்களைத் துதிபாடி தனிநாடு, சுயஉரிமை என எழுதிய எழுத்தாளர்களில் பலர் தமது கதைக்கருக்களின் போக்கை முன்னைய கதைக்கருக்களுக்கு நேர்எதிரான தாக மாற்றி தேசிய ஒற்றுமை, ஐக்கிய இலங்கை என எழுதத் தொடங்கியது மட்டுமல்லாது விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் சிறுகதைகளைப் படைக்கத் தலைப்பட்டுள்ளனர்.

பலர் மீண்டும் தமது கதைக் கருப்பொருட்களாகக் சாதியம், வர்க்கம் என்பவற்றை கையாளத்தொடங்கி யுள்ளனர். நுண்ணிய விடயங்களை கருப்பொருளாகக் கொண்ட சிறுகதைகள் ஈழத்தில் ஒப்பீட்டளவில் குறை வாவே படைக்கப்படுகின்றன.

சில சஞ்சிகைகள் பிரக்ஞை பூர்வமாக கலைத்துவம் கொண்ட சிறுகதைகளைப் பிரசுரித்தன. தற்போது எழுதப்படும் பெரும்பாலான சிறுகதைகள் கலைத்துவம் என்பதேயில்லாது வெறுமனே கருப்பொருட்களை அழுத்தவதிலேயே கவனத்தைச் செலுத்துகின்றன.

தமிழ்நாட்டுச் சிற்றிதழ்களில், இணையத் தளங் களில் இலங்கையைத் தவிர்ந்த நாடுகளைத் தாயகமாக் கொண்டோராலும் புலம்பெயர்ந்த ஈழத்தவர்களாலும் படைக்கப்படும் சிறுகதைகளின் தரத்திற்கு அண்மித்த தரத்துடன் மிகக்குறைவான தமிழ்ச் சிறுகதைகளே தற் போது ஈழத்துப் பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளி யாகின்றன.

வெகுசாதாரண சிறுகதைகளை உச்சமாக புகழ்ந்து முன்னுரை, விமர்சனம் போன்றவற்றை எழுதுதல் அவற்றிற்கு பரிசுகள், விருதுகள் வழங்குதல் என்ப வற்றை நிறுத்தாதவரை- ஈழத்துச் சிறுகதைகளில் காணப்படும் தரமின்மை நிச்சயமாகத் தொடரவே செய்யும்.

பத்திரிகை, சஞ்சிகை என்பவற்றின் ஆசிரியர்கள் பிரசுரத்திற்காகவரும் சிறுகதைகளில் காணப்படும் சிறிய குறைபாடுகளை அச்சிறுகதைகளை எழுதியவர்களுக் குச் சுட்டிக்காட்டி திருத்தி எழுத வைப்பதன் மூலம் ஈழத்தில எதிர்காலத்தில் தரமான சிறுகதைகள் தோற்றம் பெற வழி சமைக்கலாம்.

* * *

பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இன்று நிறையச் சிறுகதைகளைச் சுமந்து வருகின்றன. ஒரு மனிதனு டைய வாழ்வுப் போராட்டங்களுக்குள் இவை அனைத் தையும் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை.

பொதுவாக கதைகள் எப்போதும் போல வெளிவரு கின்றன. ஒரு படைப்பாளியின் நல்ல ஒரு படைப்பை மற்றொரு படைப்பாளி எடுத்துப் பேசாத ஒரு நிலை இருக்கின்றது என்கிற போதும் ஒரு நல்ல படைப்பு அதையும் மீறித் தன்னை வெளிக்காட்டும் என்று நான் நம்புகி றேன். கடந்த காலங்களில் மிகச் சிறந்த கதைகள் வெளிவந்துள்ளன. அவை இன்றைய தலைமுறையின ரைச் சென்றடையும் வாய்ப்பைப் பெறவில்லை. இன் றைய தலைமுறை, கடந்த தலைமுறையின் புத்தகங் களைத் தேடிப் படிப்பதில்லை. அவர்களைப் பொறுத்த வரை அவை மிகவும் பிற்போக்குத் தனமானவை என்ற எண்ணமும் ஒரு காரணம்.

சிறு கதை என்றால் அது போரைப் பற்றியும் ஷெல் விழுவது பற்றியுமானதாகவும்தான் இருக்க வேண்டும் என்பது போல் ஒரு தோற்றம் நிலவுவதை நான் அவ தானிக்கிறேன். போட்டிகளுக்கு அனுப்பப்பட்டு முத னிலை வகிக்கும் கதைகளும்கூட அவ்வாறானவை யாகத்தான் தேர்வாகின்றன.

**அஷ்ரஃப் சிஹாப்தீன்**
கொழும்பு



அண்மையில் மஹ்மூத் சயீத் என்ற ஈராக்கியப் படைப் பாளியின் 'புகையிரதம்' என்ற கதையைப் படித்தேன். ஈராக் கில் விழாத ஷெல்லா... நிகழாத பேரழிவா...? அந்தக் கதையில் நான்கே நான்கு சிறார்களை வைத்து அவர் முழு ஈராக்கின் துயரத் தையும் எடுத்துக் காட்டியிருப் பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். ஒரு துப்பாக்கி ரவை பற்றிக் கூட அக்கதையில் ஒரு வார்த்தை கிடையாது.

இன்று வெளியாகும் ஆயிரமாயிரம் எழுத்துப் படைப்புகளுக்குள் ஒரு கதை மின்ன வேண்டுமாக இருந்தால் அது வாசகனைக் கவரும் எழுத்து நடையும் போக்கும் கொண்டிருக்க வேண்டும். சிறந்த கதைக் கருவைக் கொண்ட பல கதைகள் வெகு சாதாரணச் சொல்லாடல்கள் காரணமாக வாசகர் கவனத்தைப் பெறாமல் போகும் அவலமும் நிகழுகிறது.

என்றாவது எங்காவது நமது கவிதைகள் பற்றி, சிறு கதைகள் பற்றித் தனியே கூடிப் பேசியிருக்கின்றோமா?

நல்லவை அடையாளங் காட்டப்படவும் பேசப்படவும் மற்றவர் தேடிப் படிக்கவும் வேண்டுமானால் 'எனக்குப் பிடித்த சிறுகதை' பற்றி மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது ஒன்று கூடிப் பேச வேண்டும். எழுத்து வடிவமாகக் கொண்டு வரப்பட்டு ஒரு கதை பற்றி ஒருவர் பதினைந்து நிமிடங்களுக்கு மேற்படாமல் பேச வேண்டும். இரண்டு மணித்துளிகளில் நாம் எட்டுக் கதைகளை அடையாளம் காண முடியும். இந்த எழுத்துப் பிரதிகளை நமது சஞ்சிகைகளில் பிரசுரிப்பதன் மூலம் வாசகர்களும் நன்மையடைவர். நல்லகதை களும் அடையாளம் காணப்படும்.



படிப்பகம்

www.padippakam.com




ஞானம் 141வது இதழின் ஆசிரியத் தலையங்கம் மிகத் துணிச்சலானது. சொல்லப்பட வேண்டிய விசயங்கள் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய நமது இலக்கிய உலகைப் பீடித்துள்ளன நோய், சாஹித்திய விருதுகள் மற்றும் ஏனைய இலக்கிய விருதுகளுக்கிடையில் புகுந்துள்ள இடைத்தரகர்களின் இலக்கியங்களே! இதற்கு உடந்தையாக படித்த கௌரவத்துக்குரிய சிலரும் இருப்பதே, பெரிய அவலத்துக்குரிய நிலையாகும். ஞானம் ஆசிரியத் தலையங்கம் இந்த அவலத்தை உடனடியாக நீக்குவதற்கான வழியை ஏற்படுத்தும் என நினைக்கிறேன்.

**-மு.பொ.**

தமிழரின் இன்றைய முக்கிய எதிரிகளில் ஒன்று கலாசாரச் சீரழிவு ஆகும். இந்த விடயத்தில் கைத்தொலைபேசிகள் வகிக்கும் பங்கு பற்றி ஆசிரியர் தனது ஜனவரி மாத ஆசிரியத் தலையங்கத்தில் நன்கு விளக்கி எழுதியுள்ளார். கைத்தொலைபேசி, கம்பியூட்டர், தொலைக்காட்சி போன்றவற்றால் நன்மைகள் ஏற்படுவதைப் போலவே தீமைகளும் அதிகமாக ஏற்படுகின்றன. ஆகவே தீமைகளிலிருந்து எமது இளம் சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டியது நம் அனைவரதும் கடமையாக இருக்கிறது. ஞானம் ஆசிரியர், இணையாசிரியர் ஆகியோரின் புதல்வரான ஞா.பாலச்சந்திரன் அவர்களால் எழுதப்பட்டுவரும் பயணக் கட்டுரையினைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். “அங்கோர் பெருங்கோயிலை” நேரில் தரிசித்தது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இவரது எழுத்துப் பணி மென்மேலும் சிறக்க நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனவரி இதழில் அட்டைப்பட அதிதியாகக் கௌரவிக்கப்பட்டுள்ள கவிஞர் குறிஞ்சிநாடன் அவர்களின் கல்விச் சேவை, இலக்கியச் சேவை என்பனபற்றி அறியாதவர் எவருமிலர். இவர் நீண்ட காலம் வாழ்ந்து மென்மேலும் இலக்கியப் பணிபுரிய வாழ்த்துகிறேன். மேலும் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயரின் “தமிழில் இலக்கியத் திறனாய்வியல்” தொடர்கட்டுரையைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். தமிழை விசேடமாகப் படிக்கும் மாணவர்களுக்கு இவரது கட்டுரைகள் மிகமிகப் பிரயோசனம் மிக்கவையாக இருக்கின்றன. இவரது தமழ்ப்பணியும் இலக்கிய சேவையும் நீண்ட காலம் நின்று நிலைக்க வாழ்த்துகிறேன்

**- கா. தவபாலச்சந்திரன், பேராதனை**

பெப்ரவரி இதழில் ஜனவரி இதழின் தொடர்ச்சியாக வெளியான ஆசி கந்தராசாவின் “சாத்தானின் விரல்கள்” ஆசிரியரின் படைப்புகளையெல்லாம் வாசிக்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டுகிறது. உயர்கல்விகற்று எழுத்துத்துறையில் ஈடுபடுபவர்களில் ஜனரஞ்சகமாக எழுதுபவர்கள் குறைவு. இவரைப்போன்றவர்கள்தான் மண்ணின் மைந்தர்கள்.

**- பி. பி. அந்தோனிப்பிள்ளை., முருங்கன்.**

திரு.ஞா பாலச்சந்திரன் தமது கம்போடிய பயண அனுபவங்கள் பற்றி ஞானம் சஞ்சிகையில் எழுதிவரும் கட்டுரைகளைப் படித்து வருகிறேன். மிக ஆழமும் அறிவும் நிறைந்த ஓர் அற்புதமான கட்டுரை அது. ‘அங்கோர்’ உலகப் பெருங்கோயிலின் அமைப்பையும் அழகாகவும் வரலாற்று அடிப்படையில் விஞ்ஞான பூர்வமாகவும் கலாபூர்வமான மொழிநடையுடனும் எழுதிவருகிறார். கோயிலின் கட்டிடக் கலை வரலாற்றிலே மிகவும் அதிசயம் நிறைந்த அங்கோர் ஆலயத்திற்கு எங்களையும் அழைத்துச் சென்று காண்பிப்பது போன்ற ஒரு பரவச நிலை எமக்கு இந்தக் கட்டுரை தருகிறது. அறிவியற்கலைகள் பலவற்றின் சங்கமத்தையும் அழகியல் கலைகளின் நேர்த்தியையும் பிரமாண்டத்தையும் தரிசனம் செய்யும் வாய்ப்பினை பாலச்சந்திரன் அவர்கள் எமக்குத் தந்துள்ளார். அவரது ஆழமான தேடலுக்கு எமது பாராட்டுக்கள்

**- சித்ரா சின்னராசன், அல்வாய்.**

ஞானம் கலை இலக்கிய பெப்ரவரி சஞ்சிகையில் “வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது” என்ற ஆசிரியத் தலையங்கத்தில் சாகித்திய விழா பரிசளிப்புகளில் மோசடிகள் பற்றிய செய்தி கசிவது வழக்கமாகியுள்ளது. “மல்லிகை” சஞ்சிகை 47 ஆவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவில் தேர்வுகளில் காணப்படும் மோசடிகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளியிட்டீர்கள்.

மற்றும் தலையங்கத்தில் “எனக்கு பின்னர் பேசிய கொழுந்து சஞ்சிகை ஆசிரியர் அந்தனிஜீவா நடந்து முடிந்த தேசிய சாகித்திய பரிசுத்தேர்வில் சில தவறுகள் நடந்திருப்பதாகவும் அவை தொடர்பாக இப்பொழுது விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் கூறினார்” என எழுதியுள்ளீர்கள். அந்த மலர் வெளியீட்டு விழாவில் இது பற்றி சுருக்கமாக எழுதி வெளியிட்டேன். விரிவாக இன்னொருவருடைய மலர் வெளியீட்டு விழாவில் சொந்தக் கருத்துக்களை கூறமுடியாது அல்லவா?



படிப்பகம்

www.padippakam.com

சாகித்திய விழாவை நடத்தும் கலாசாரத்திணைக்கள பணிப்பாளரிடம் “ஞானம்” ஆசிரியத் தலையங்கத்திற்கு போட்டோ பிரதி ஒன்றையும் கொடுத்துள்ளேன்.

அரசு நடாத்தும் சாகித்திய தேர்வில் நூல்களில் I. S.B.N இடம்பெற்றிருக்க வேண்டும். அப்படி இல்லாத ஒரு நூலுக்கு எப்படி பரிசளித்தார்கள். சாகித்திய இலக்கிய குழுவில் 15 பேர் இடம் பெற்றுள்ளார்கள். அதில் ஒரு தமிழன்பர் இடம்பெற்றுள்ளார். அவரும் தன் கடமை நிமித்தம் வெளியூர், வெளிநாடு சென்றுவிடுவார். அந்தக்குழுவின் செயலாளராக அமைச்சின் திணைக்களத்தில் பணியாற்றும் ஒரு தமிழ்ப்பெண்மணி உள்ளார். அவரால்தான் பல தவறுகள் இடம்பெறுகின்றன. இவர் திணைக்களம் நடாத்தும் விழாக்களுக்கு கூட நாடறிந்த இலக்கியவாதிகளுக்கு அழைப்பு அனுப்புவது இல்லை.

அது மாத்திரமல்ல கொடகே என்ற தனியார் நிறுவனம் நடத்திய நாவல் தேர்விலும், நாமக்கல் சின்னப்ப பாரதி அறக்கட்டளை நடத்திய தேர்விலும் எழுத்தாளர் உதயணனின் “பால்நிலவு” சிறந்த நாவலாக தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் தேசிய சாகித்திய விழாவின்போது வேறு ஒரு நாவல் தெரிவு செய்யப்பட்டது. ஆனால் தனது நாவலுக்கு பரிசு கிடைக்கவில்லை என்பதற்காக எழுத்தாளர் உதயணனோ அவரது நண்பர்களோ அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

நாமக்கல் சின்னப்பபாரதி அறக்கட்டளை ஒரு தேர்ந்த குழுவினரை வைத்து அதற்குரிய நூல்களை தெரிவு செய்கிறது. அந்த அறக்கட்டளையின் இலங்கைப் பிரதிநிதியாக செயல்படுகிறேன். பரிசுத் தேர்வுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அந்தனிஜீவா ஆசிரியர் கொழுந்து**

இன்றைய வாசகர்கள் பற்றிய **கருத்துக்களம்** சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. எழுத்தாளர் பல்கிப் பெருகிவிட்ட காலத்தில் வாசகர்களின் எண்ணிக்கை வளர்கிறதா, தேய்கிறதா என்ற கேள்வி மன நெருடலைத் தருகிறது. பாலர் வகுப்பு மாணவனிலிருந்து பல்கலைக்கழக மாணவன் வரை, பெற்றோரிலிருந்து ஆசிரியர் வரை, எழுத்தாளர்களிலிருந்து விமர்சகர்கள் வரை என அனைவரைப் பற்றியும் சிந்திக்கவும் வைக்கிறது. அறிவு வளர வேண்டுமானால் தேடல் வேண்டும். தேடலுக்கு வாசிப்பு அவசியம். அறிவுத் தேடலுக்கு மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்குப் பெற்றோர் எங்கே இடங் கொடுக்கிறார்கள்? பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புவரை மாணவர்களை டியூஷன் என்ற மாயை ஆட்டிப் படைக்கிறது?. பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான பரீட்சை, போட்டிப் பரீட்சை, அதை விடுவோம். தகுதிகாண் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களையும் பெற்றோர் தமக்கிடையே இருக்கும் போட்டி மனப்பான்மை காரணமாகக் கசக்கிப் பிழிகிறார்களே! தேகப்பயிற்சியின்றி மாணவர்களின் உடல்நலம் கெடுகிறது. தேடல், சிந்தித்தல் என்பன இன்றி அவர்கள் விழுங்குதல், கக்குதல் என்ற நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த நிலை பல்கலைக்கழகம் வரை தொடர்கிறது. கலைப்பீட மாணவர்களில் பெரும்பான்மையோருக்கு நூலகம் எங்கே இருக்கிறது என்பதே தெரிவதில்லை. விரிவுரையாளர்கள் வழங்கும் குறிப்புகளை மட்டுமே விழுங்கி பரீட்சையின் போது கக்கிப் பட்டமும் பெற்றுவிடுகிறார்கள். ஆசிரியர்களாக இருக்கும் பெற்றோர்களின் பெரும்பான்மையானவர்களுக்குக் இதில் பங்குண்டு. அவர்களிற் பலருக்கு வாசிப்புப் பழக்கம் இல்லையென்பது கற்றவர்கள் மத்தியில் இருக்கும் பரவலான அபிப்பிராயம். இங்கே ஒரு நகைப்புக்குரிய விடயமும் ஞாபகத்துக்கு வருகிறது. எனது மனைவியிடம் எனது கதைத் தொகுப்பை பார்த்த ஆசிரியையாக இருந்த ஒரு பெண்மணி கேட்டாராம் ‘ஆனந்தவிகடனிலும் உள்ளூர்ப் பத்திரிகைகளிலும் பிரசுரமான கதைகளை இவர் என் புத்தகமாகப் போட வேண்டும்?’ என்று அவை எனது பேனாவிலிருந்து பிறந்தவை என்பது கூட அவருக்குப் புரியவில்லை. ஜனரஞ்சகமான கதைகளை விரும்பி வாசித்தவர்கள் கூட தொலைக்காட்சித் தொடர் நாடகங்களின் பாதிப்பினாலும், வீட்டிலிருந்தே சினிமாப் பார்க்கக் கூடிய வசதிகளினாலும் வாசிப்பைப் பெருமளவில் கைவிட்டு விட்டார்கள் போலத் தோன்றுகிறது. நூலாசிரியர்க்குத் தெரிந்தவர்கள் முகத்தை முறிக்க முடியாது சிலவேளைகளில் நூலின் விலைக்கு அதிகமாகவே பணங்கொடுத்து வாங்கும் நூல்களை வாசிக்கவா போகிறார்கள்? வாசகர்கள் என்ற ரீதியில் நாம் நூல்களைத் தேர்வு செய்வதற்கு விமர்சகர்களையும் நூல்களுக்குக் கிடைக்கும் விருதுகளையுமே நம்பியிருக்கிறோம். சில விமர்சகர்களின் யோக்கியதை உங்கள் பெப்ரவரி தலையங்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. கலை, இலக்கியப் படைப்புகளுக்குப் பரிசுகளும் பாராட்டுக்களும் வழங்கும் போது சில இடங்களில் படைப்பாளிகளின் நல்ல நோக்கம் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுவதாகவும் தோன்றுகிறது. நேர்ச் சிந்தனை காலத்தின் கட்டாயம். அதுவரவேற்கப்பட வேண்டும். நேர்ச்சிந்தனை விதைகளைத் தூவுபவர்கள் வரப்பில் நின்று களை மண்டிக் கிடக்கும் வயலில் விதைகளைத் தூவி விட்டு மனத் திருப்தி அடைந்து விட முடியாது. முன்னாள் பேராளிப் பெண்ணினதும் இராணுவச் சிப்பாயினதும் திருமண வர்ணப் புகைப்படத்தைப் பெரிதாக வெளியிட்டு ஆஹா, வாழ்வே இன்பமயம் என அகமகிழ்வது போன்ற செய்கையே அது. புரையோடிப் போயிருக்கும் புண்ணை மறைத்து முகத்துக்கு ‘மேக்கப்’ போடாது எழுத்தாளர்களும் வாசகர்களின் சிந்தனைக்குத் தீனி போட முன்வர வேண்டும்.

**- வே.தில்லைநாதன்,** Rajagiriya.



படிப்பகம்

www.padippakam.com

GNANAM - Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/17/News/2012

*With Best Compliments from*

**Luckyland**

**உலக சாதனை எங்கள் பாரம்பரியம்**
**பிஸ்கட்டிலும் தான் !**




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

**NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.**
**TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740**
**Email: luckyland@sltnet.lk**

இச்சஞ்சிகை தி. ஞானசேகரன் அவர்களால் இல.48 B புளூமெண்டால் வீதி, கொழும்பு 13. யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்